# தர்மசக்கரம்





சித்தார்த்தி ஸ்ரீ ஐப்பசி மீ சக்கரம் 28 ஆரம் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது என்பது அன்பர்கள் அறிந்ததே. காகித விலை உயர்ந்திருப்பதால் தர்ம சக்கரத்தின் ஆண்டு சந்தா ரூ. 10-00 லிருந்து ரூ. 12-00 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இனி, ஆண்டு சந்தா அனுப்பும் அன்பர்கள் ரூ. 12-00 வீதம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சகாய சந்தா ரூ. 5-00 லிருந்து ரூ. 8-00 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. வசதி உள்ளவர்களும் சகாய சந்தா திட்டத்தைப் பயன்படுத்தி வருவதாகத் தெரிகிறது. மாத வருவாய் ரூ 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கு மேல் உள்ளவர்கள் இந்தச் சகாய சந்தா திட்டத்தைப் பயன்படுத்த வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

## அந்தர்யோக விவரங்கள்

**இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 21—10—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** ஸ்ரீ சாரதா சேவாச்ரமம்
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்
**உணவு வசதி:** நேரில் ரூ. 1-25 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

**சேலம் ஜில்லா—வனவாசியில் 27—10—79 சனிக்கிழமை**

**இடம்:** ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தவ இல்லம்
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**சென்னையில் 28—10—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** புரசவாக்கம் ஸர் M.C.T. முத்தையா செட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 28—10—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள லாயல்மில் ஆரம்பப்பாடசாலை
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

[ தொடர்ச்சி அட்டை நான்காம் பக்கம் ]

# தர்ம சக்கரம்

## மாத சஞ்சிகை

சக்கரம் 28 | சித்தார்த்தி ஞூ ஐப்பசி மீ | ஆரம் 10.

பொருளடக்கம் பக்கம்

1. பிரார்த்தனை 361
2. அருள் விருந்து 362
3. பரமஹம்சர் புகட்டிய பெருநெறி விளக்கம் 363
4. மலைவளர் காதலி 366
5. அருள் நெறி 368
6. மறு பிறப்பு 370
7. வழிபாடும் மனத்தூய்மையும் 373
8. தீபாவளிப் பண்டிகை 379
9. சங்க இலக்கியங்களில் சமயகருத்துக்கள் (வித்துவான் ஆதி. பாலசுந்தரன் M. A.) 382
10. வாசுதேவ மனன விளக்கம் சுவாமி ஸதானந்தர் 386
11. அனுமன்—13 சுவாமி ஆத்மானந்தர் 388
12. ஸ்ரீ லலிதா வியாக்கியானம்—134 392
13. ஸத் ஸம்பாஷணை 395
14. அனுமன்வருவான் அருள் தருவான் (சுவாமி துருவானந்தர்) 397
15. செய்திகள் 400

## சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையை பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து இனமாக அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

**உள்நாடு தனி இதழ் 1-25. வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00**

# ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணிக்குத்தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1979 செப்டம்பர் மாத நன்கொடை விவரம் வருமாறு :

| தேதி | விலாசம் | | ரூபாய் |
|---|---|---|---|
| | ஆகஸ்டு மாதம் முடிய நன்கொடை வசூல் | | 3 81 857 |
| 2-9-79 | ஸ்ரீ S. பாலகிருஷ்ண ரெட்டி, திருகப்பஹள்ளி, காட்டன்பெட், பெங்களூர் | | 202 |
| 10-9-79 | ஸ்ரீமதி K. லலிதாம்பாள் காசிவிஸ்வநாதன், தாயுமானவர் இல்லம், கரூர் | | 108 |
| 12-9-79 | ஸ்ரீமதி குப்பாயம்மாள் | மலை அடிவாரம், ஊராச்சிக்கோட்டை, பவானி | 150 |
| | அமரர் பழனியம்மாள் நினைவாக S. சுவாமிநாதன் | ஈரோடு | 106 |
| | ஸ்ரீ B. K. நல்லசாமி | மேற்குத்தெரு, பவானி | 101 |
| 15-9-79 | ஓர் அன்பர் | சர்க்கார்சாமக்குளம், கோவை | 230 |
| 16-9-79 | ஸ்ரீ M. S. வெங்கட்ரங்கன் | மாம்பழச்சாலை, ஸ்ரீரங்கம் | 101 |
| 21-9-79 | ஸ்ரீமதி M. A. ராஜம்மாள் | காசிப்பாளையம், கோபி | 101 |
| | ஸ்ரீ N. சீத்தாராமன் | சென்னை | 101 |
| 24-9-79 | ஸ்ரீமதி A. K. தெய்வானை | சிறுவலூர், கோபி | 101 |
| 28-9-79 | M/s. அரசன் டெக்ஸ்டைல் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்., | தூத்துக்குடி | 1 000 |
| | ஸ்ரீ R. V. கோபால் | உடையப்ப செட்டியார் காலனி, சேலம் | 251 |
| | ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம் விடுதி மாணவர்கள் | சின்னதண்டா | 250 |
| | ஸ்ரீ T. M. குப்புசாமி | மெயின்பஜார், வேலூர், வ. ஆ. மாவட்டம் | 101 |
| | ஓர் அன்பர் | அருப்புக்கோட்டை | 100 |
| 30-9-79 | ஸ்ரீ K. P. S. சந்தானம் செட்டியார் | சின்னசெட்டித் தெரு, திருச்சி | 501 |
| | அருள்துணை மாதர் சங்கம் | மதுரை | 400 |
| | ஸ்ரீ K. விஸ்வநாதன் | ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை | 100 |
| | ஸ்ரீ வ. சு. ப. திருப்பதி செட்டியார் | மேலைச்சிவபுரி ,, | 100 |
| | ஓர் பக்தர் | பெங்களூர் | 100 |
| | ஸ்ரீ G. கணபதி முதலியார் | வீரபாண்டி, சேலம் | 100 |
| | ஸ்ரீ A. நிஜாமுதீன் | கைகாரஹவுஸ், கொல்லம் | 100 |
| | ஸ்ரீ N. ஜெய்சிங், ஜெயபாரத் இண்டஸ்டிரீஸ், | வடக்கிவிலா, ,, | 100 |
| | ஸ்ரீ V. ராமச்சந்திரன் | முண்டக்கல், ,, | 100 |
| | ஸ்ரீ P. லெக்ஷ்மணபிள்ளை | பீச், ,, | 100 |
| | ஸ்ரீ T. S. ஸ்ரீனிவாசன், | தி எலக்டிரிக் & மோட்டார் ஒர்க்ஸ், ,, | 100 |
| | ஸ்ரீ P. கோபிநாதபிள்ளை | பிருந்தாவன், கிளிகல்லூர் ,, | 100 |
| | ஸ்ரீ S. கோபால் பை | மெயின்ரோடு, ,, | 100 |
| | Dr. G. சாமுவேல் | கோட்டயம், கேரளா | 100 |
| | ஸ்ரீ A. விஜயகாந்தன் | தி அசோசியேட்டட் எலக்ட்ரானிக்ஸ், கோவை | 100 |
| | ஸ்ரீமதி V. ஜயந்தி | ,, கோவை | 100 |
| | ஓர் அன்பர் | பிள்ளார் பாளையம், முசிறி | 100 |
| | ஸ்ரீ S. ஆறுமுகநாடார் | கிரேட்காட்டன் ரோடு, தூத்துக்குடி | 100 |
| | ரூ. 100க்குக் கீழ் வந்த நன்கொடைகள் | | 2 890 |
| | | ஆகக் கூடுதல் | 3 90 251 |

प्रज्ञानं ब्रह्म



# தர்ம சக்கரம்

*அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.*

சக்கரம் 28 | சித்தார்த்தி ஸு ஐப்பசி மீ | ஆரம் 10

## பிரார்த்தனை

वेदेषु धर्मवचनेषु तथागमेषु रामायणेऽपि च पुराणकदंबके वा
सर्वत्र सर्वविधिना गदितस्त्वमेव तस्मात्त्वमेव शरणं मम शंखपाणे

— शंकराचार्य

வேதேஷு தர்மவசனேஷு ததாகமேஷு
ராமாயணேஅபி ச புராணகதம்பகே வா
சர்வத்ர சர்வவிதினு கதிதஸ்த்வமேவ
தஸ்மாத்த்வமேவ சரணம் மம சங்கபாணே

— *சங்கராச்சாரியர்*

வேதங்களிலும், தர்ம சாஸ்திரங்களிலும், ஆகமங்களிலும், ராமாயணத்திலும், புராணங்களிலும், ஏனைய நூல்களிலும் நீயே போற்றப் பெறுகிருய். ஆகையினல் சங்கைத் தரித்திருப்பவனே உன்னிடத்து நான் சரணடைகிறேன்.

திக்கொடு கீழ்மேலுந்திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக்கனியே பராபரமே.

— *தாயுமானவர்*

# அருள் விருந்து

அழகனைத்தும் மனத்தூய்மையில் அடங்கியிருக்கிறது.

பணம் பொல்லாததன்று; பணத்தாசையே பொல்லாதது.

உண்மையான தொண்டனுக்கு ஆதிக்கம் தானாக வந்தமைகிறது.

உறுதிப்பாட்டில் நிலைநிற்பவன் பெருவாழ்வில் பக்குவப்படுகிறான்.

ஆங்கில மொழியிலுள்ள மோகம் அடிமைப் புத்திக்கு அறிகுறியாகிறது.

மனமொடுங்கிய நிலையில் மனிதன் தன்னுடைய நிஜசொரூபத்தைப் பார்க்கிறான்.

சமாதானம் மனிதனது பேரியல்பாகும்; போராட்டமோ அவனது சிற்றியல்பாகும்.

உள்ளத்தினுள்ளே சாந்தி காணாதவன் உலகில் எங்குமே சாந்தி காணமாட்டான்.

தூய வாழ்வில் கமழும் மணத்துக்கு எந்த மலரின் மணமும் நிகராகமாட்டாது.

ஞானவொளியைப் பின்பற்றி வீடுபெறு. வீணே வாழ்வு என்னும் வனத்தில் அலைந்து திரியாதே.

நெடுங்காலம் உலகம் சுற்றியடித்து அடைகிற குறியை அறிஞன் நொடிப்பொழுதில் அடைகிறான்.

உள்ளிருக்கும் ஒண்பொருள் உள்ளத்தில் எழும் எண்ணங்களையும், உணர்வுகளையும் அறிகிறது.

மாலுமிக்குத் தேசப்படம் மார்க்கம் காட்டுவது போன்று வேதாந்தம் பெருவாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

உலக வைபவங்களின் பகட்டுக்களுக்கிடையில் பாரமார்த்திகப் பேருண்மை அழிந்துபட்டுப்போவதில்லை.

எண்ணத்துக்கு ஏற்ப மனது மாறியமைகிறது. ஒவ்வோர் அனுபவமும் மனிதனைப் பண்படுத்துகிறது.

பரதத்துவத்தை உலக வாழ்வோடு இணைக்கமுடியாது. பரவாழ்வின் பொருட்டு உலக வாழ்வை ஒதுக்கு.

உலகைத் துறப்பது என்பது உயிர் வாழ்வைத் துறப்பது அன்று. அதை உன்னத நிலைக்குக் கொண்டு வருவது துறவு.

### பரமஹம்சர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

பரமஹம்சருக்கும், பக்தர்களுக்குமிடையில் சம்பாஷணை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

மகேந்திரர்: "ஐயனே, தாங்கள் அன்றொருநாள் ஈசானரோடு உரையாடிக்கொண்டிருந்தீர்கள். அப்பொழுது முகஸ்துதி பண்ணுகிறவர்களைக் குறித்துப் பொருத்தமான கருத்து ஒன்றைத் தாங்கள் தெரிவித்தீர்கள். இச்சகம் பேசுகிறவர்கள் அல்லது முகஸ்துதி பண்ணுகிறவர்கள் பிணத்தின் மீது அமர்ந்திருக்கும் கழுகுகளுக்கு ஒப்பானவர்கள் என்று தாங்கள் கூறினீர்கள். அதே கருத்தைத் தாங்கள் மற்றும் ஒருதடவை பத்மலோசனரிடம் பகர்ந்தீர்கள்."

பரமஹம்சதேவர்: "அப்படியல்ல. பத்மலோசனரிடம் அல்ல. உலோ என்னும் ஊரிலிருந்து வந்த வாமன் தாஸரிடம் நான் இதை எடுத்துரைத்தேன்." சிறிது நேரத்திற்குப் பிறகு மகேந்திரர் அருகில் வந்து பரமஹம்சதேவருடைய சிறிய கட்டிலுக்கு அருகில் தரையில் அமர்ந்தார். பரமஹம்சதேவருக்கு இப்பொழுது சிறிது நித்திரை அவசியமாயிருந்தது. ஆதலால் அவர் மகேந்திரரிடம், "நீ படுக்கப் போகலாம். கோபாலன் எங்கே? தயை கூர்ந்து கதவை மூடுக'' என்று இயம்பினர். அடுத்த நாள் அதிகாலையில் பரமஹம்சதேவர் படுக்கையிலிருந்து எழுந்தார். வழக்கம்போன்று பற்பல தெய்வங்களின் நாமங்களை அவர் உச்சரித்துக்கொண்டிருந்தார். இடையிடையே அவருடைய கண்பார்வை கங்காநதியிடம் சென்றது. காலை வழிபாடு ராதாகிருஷ்ணனுடைய சந்நிதியிலும் அன்னை காளிகாதேவியின் சந்நிதியிலும் நிகழ்வனவாயின. அன்று இரவு மகேந்திரர் பரமஹம்சதேவருடைய அறையிலே தரையின் மீது படுத்திருந்தார். பரமஹம்சதேவர் விழித்து எழுந்தபொழுது மகேந்திரரும் எழுந்துகொண்டார். பரமஹம்சதேவரின் செயல்களையெல்லாம் அவர் கூர்ந்து கவனித்து வந்தார். பிறகு அந்தந்தக் கோயில்களில் நிகழ்ந்த வழிபாடுகளிலும் அவர் கலந்துகொண்டார்.

தக்ஷிணேசுவர ஆலயத்தை ஒட்டிக் கங்கா நதி தென்திசையினின்று வடதிசையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தது. பரமஹம்சதேவர் அப்புண்ணிய நதியைப் பிரம்மவாரியாகக் கருதி வந்தார். அதிகாலையில் கங்காஸ்நானத்திற்காகத் தம் அறையினின்று புறப்பட்டுப் போனர். வழிபாட்டுக்காக அம்பிகையின் சந்நிதிக்கு எத்தகைய பக்திபூர்வமாக அவர் சென்றுரோ அதே பக்திபூர்வமாக அவர் கங்கா ஸ்நானத்திற்கும் சென்றுர். அவரைப் பின்தொடர்ந்து மகேந்திரரும் கங்கா ஸ்நானத்திற்குச் சென்றுர். குருதேவருக்குச் சற்று அருகில் நின்றுகொண்டு அவரோடு நீராடுவது தமக்குக் கிடைத்திருந்த பெரிய வாய்ப்பு என்று மகேந்திரர் கருதினர். பரமஹம்சதேவர் நீராடிய முறையே சிஷ்யராகிய மகேந்திரருக்குப் புகட்டிய அரியதொரு சாதனமாக அவர் எடுத்துக்கொண்டார். அந்தப்பாங்கில் கங்கா ஸ்நானம் முடிந்தான பிறகு காளிகாதேவியின் சந்நிதிக்கு அவர் புறப்பட்டுப் போனர். மகேந்திரரும் அவரைப் பின்தொடர்ந்தார். அறையிலிருந்து அவர் வெளியே வந்தபிறகு அந்த அறைக்குப் பூட்டுப் போட்டு வைக்கும்படி சிஷ்யரை அவர் ஏவினர். சிஷ்யரும் அவர் ஆணைப்படி நடந்து கொண்டார்.

அம்பிகையின் சந்நிதியை அணுக அணுகப் பரமஹம்சதேவருக்குப் புறவுலக ஞாபகம் மறந்து போயிற்று; அந்தர்முக திருஷ்டி அதிகரித்தது. காளிகாதேவியின் சந்நிதியிலே அம்பிகைக்கு எதிரிலே ஆசனம் ஒன்றின்மீது அவர் அமர்ந்தார். பக்தி பரவச நிலையிலிருந்து கொண்டு புஷ்பங்களை எடுத்து அம்பிகையின் திருவடிகளிலே சமர்ப்பித்தார். சிற்சில வேளைகளில் தம்முடைய சிரசின்மீதும் அவர் புஷ்பங்களை வைத்துக்கொண்டார். வழிபடுகிற மூர்த்தியும், வழிபடப்பெறுகிற மூர்த்தியும் இரண்டற்ற நிலையிலிருந்ததை மகேந்திரர் காணலாயினர். சிறிது நேரத்திற்குப் பிறகு பரமஹம்சர் எழுந்து நின்று அம்பிகையின் முன்னிலையிலே சாமரம் வீசினர். அது காண்பதற்கு அரிய காட்சியாயிருந்தது. வழிபாடு என்றுல் என்ன

என்பதை எழுத்தோவியத்தால் விளக்க முடியாது. சான்றோர் ஒருவர் செய்கிற வழிபாட்டை நேரில் பார்க்கிறவர்க்கே விளங்கும். பிறகு பரமஹம்சதேவர் தம் அறைக்குத் திரும்பி வந்தார். பூட்டியிருந்த தம் அறையைத் திறந்து வைக்கும்படி மகேந்திரரிடம் அவர் இயம்பினார். பிறகு அறைக்குள்ளே சென்று சிறிய கட்டிலின் மீது அவர் அமர்ந்தார். தெய்வீகப் பேருணர்வில் முற்றிலும் மூழ்கியிருந்தவராக அவர் தென்பட்டார். தெய்வத்தின் நாமத்தை ஓத அவர் ஆரம்பித்தார். மகேந்திரர் தரையின் மீது அமர்ந்துகொண்டார். அன்னை பராசக்தியைக் குறித்துப் பரமஹம்சதேவர் பாடலொன்று பாடினார். அப்பாடலில் அமைந்த கருத்துக்களாவன:

அன்னை பராசக்தி காளிகாதேவி யார் என்பதை அறிந்துகொள்ள யாருக்குத்தான் இயலும்? அவளுடைய மகிமையை உள்ளபடி விளக்க முடியாமல் ஆறு தர்சனங்களே திணறுகின்றன. ஜீவகோடிகளனைத்துக்கும் அந்தராத்மாவாயிருப்பவள் அம்பிகையே என்று சாஸ்திரங்கள் யாவும் சாட்டுகின்றன. யோகி ஒருவனுடைய நிஜ சொரூபமாக அம்பிகை இலங்குகின்றாள். யோகி ஒருவன் அடைகின்ற பரமானந்தத்தை அம்பிகை தானே கண்டு கொள்கிறாள். அம்பிகை தானே திருவுளம் கொண்டு ஜீவர்களனைவரின் உட்பொருளாக வீற்றிருக்கின்றாள்.

பரமஹம்சதேவர் மற்றும் ஒரு பாடலைப் பாடினார். அதில் அடங்கியிருந்த கருத்தாவது: அன்னை பராசக்தி காளிகாதேவி தன் தலைவனாகிய சிவனைப் போன்றே பித்துப் பிடித்தவளாக இருக்கிறாள். சிருஷ்டி முழுதும் அவளுடைய திருவிளையாடல்களேயாம். தன்னுடைய மாயா சக்தியைக்கொண்டு அவள் மூன்று உலகங்களையும் மயக்கத்தில் ஆழ்த்தி வைத்திருக்கின்றாள். பிறகு சிறிது நேரம் பரமஹம்ச தேவர் மௌனமுற்று இருந்தார். அதன் பிறகு அவர் பாடியபாடலில் அடங்கியிருந்த கருத்தாவது: "ஓ காளிகா தேவியே, உன்னை யாரே அறிய வல்லவர்! உன்னுடைய வடிவங்களுக்கு எல்லை கிடையாது......" அதன் பிறகு மற்றும் ஒரு பாடலைப் பாடினார். அதன் உட்கருத்தாவது: 'ஓ தாயே! அதிவிரைவில் என்னை உய்விப்பாயாக! கூற்றுவனுக்கு அஞ்சி நான் உயிர் துறக்கும் தறுவாயிலிருக்கிறேன்......'

இப்பொழுது மகேந்திரர் தமக்குள்ளேயே எண்ணிக்கொண்டதாவது, "பரமஹம்சருக்கு விருப்பமான பாடல் ஒன்றிருக்கிறது. அதாவது தாயே, என்னை நீ மேலும் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் உன்னுடைய தாமரைத் திருவடிகளை நான் தரிசித்திருக்கிறேன். இப்பாடலோ கேட்பதற்கரியது. பரவசமூட்டவல்லது. ஆனால் இப்பாடலைப்பாடுங்கள் என்று நான் துணிந்து அவரிடம் தெரிவிப்பது பொருந்தாது."

என்ன அதிசயம்! இத்தகைய எண்ணத்தில் ஊறியவராக மகேந்திரர் இருந்தார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பாங்கில் அதே பாடலைப் பரமஹம்சதேவர் பாட ஆரம்பித்தார். அதைப் பாடி முடித்தான பிறகு மீண்டும் சிறிது நேரம் மௌனம் நிலவியது. அதன் பிறகு பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் கேள்வியொன்றைக் கிளப்பினார்: "இப்பொழுது நான் படைத்திருக்கும் மனப்பான்மை எத்தகையது என்று உனக்குத் தோன்றுகிறது?"

மகேந்திரர் (புன்னகை பூத்தவராக): "இப்பொழுது, அப்பொழுது என்ற காலத்தைப்பற்றிய கேள்விக்கு இடம் ஏதுமில்லை. யாண்டும் தாங்கள் தங்களுக்குச் சொந்தமாயுள்ள ஆனந்தப் பரவசநிலையிலேயே திளைத்திருக்கின்றீர்கள்."

பிறகு பரமஹம்சர் தமக்குத் தாமே தெரிவித்துக்கொள்ளுகிற பாங்கில் அடங்கிய குரலிலே ஒரு பாடலின் கடைசி அடியை மட்டும் சொல்லிக்கொண்டார். எளிமை யாவுக்கும் எளிமையாயிருப்பவர் கடவுள். அதே போன்று மானுடன் ஒருவன் அந்த எளிமையே வ்டிவெடுத்தவன் ஆகாவிட்டால் அவன் கடவுளைக் காணமாட்டான்.

மகேந்திரர்: "எல்லாம் அன்னையின் திருவருள் என்கின்றீர்கள். திருவருளே வடிவெடுத்துள்ள அன்னையின் சாம்ராஜ்யத்தில் கேடுகள் பல இருப்பதேன்? கேடுகளை அன்னை ஏன் சிருஷ்டித்தாள்?"

பரமஹம்சதேவர்: "சிருஷ்டி என்பது பேதம். அபேத நிலையில் சிருஷ்டிக்கு இடமில்லை. எங்குப் பேதம் இருக்கிறதோ ஆங்கு ஏற்றத் தாழ்வு இருக்கத்தான் செய்யும். ஈசுவர சந்திர வித்தியாசாகர் "கடவுள் ஏற்றத் தாழ்வை ஏன்

படைத்தார்?" என்று கேட்டார். படைப்பு என்பதன் பொருளே ஏற்றத்தாழ்வு என்பதை அவர் எண்ணிப் பார்க்கவில்லை. கல்வியில் தாம் கடல் போன்றவராயிருக்கின்றீர். இதே போன்ற கல்வித் திறனை எல்லாரிடத்தும் எதிர்பார்ப்பது பொருந்துமா? என்று அவரிடம் இயம்பப்பட்டது. அவரிடத்திருந்த ஒரு சிறிதளவு ரஜோகுண விருத்தியால் சிருஷ்டியிலுள்ள பாங்கை அவர் உள்ளபடி பொருள்படுத்தவில்லை.

சிருஷ்டியிலுள்ள ஏற்றத்தாழ்வை மக்களாகிய நாம் ஒரே போக்கில் மனதில் வாங்கிக் கொள்வதில்லை. நமக்கு ஒத்துக்கொள்ளுகிற பகுதியை நல்லது என்றும், ஒத்துக்கொள்ளாத பகுதியைக் கேடு என்றும் நாம் பொருள்படுத்திக்கொள்ளுகிறோம். எது நமக்குக் கெட்டதாகத் தோன்றுகிறதோ அது மற்றொருவருக்கு நலமாகத் தென்படக்கூடும். ஆக எல்லார்க்கும் பொதுவாக நலன் என்று சொல்லக்கூடியது சிருஷ்டியில் ஏதுமில்லை. முற்றிலும் நமக்கு ஒவ்வாததைப் பெருங்கேடு என்று நாம் பொருள்படுத்துகிறோம். எது நமக்குப் பெருங்கேடாகத் தோன்றுகிறதோ அது வேறு ஒரு மனிதனுக்குப் பெரிய நலனாகப் புலப்படக்கூடும்.

ஆத்ம சாதகர்களாகிய நாம் ஆரம்பதசையில் நலனாகத் தென்படுபவைகளிடத்து அபிமானம் வைக்கவும், நலன் அல்லாதவைகளிடத்திருந்து விலகியிருக்கவும் செய்கிறோம். ஆனால் சாதனத்தில் மேல் நோக்கிப் போகப்போக நம்முடைய மனப்பான்மை திருந்தியமைகிறது. மனம் திருந்துதற்கேற்பக் கேடுகளின் கொடுமையும் குறைந்துபட்டுப் போகிறது.

கடவுள் நோயை ஏன் படைத்தார் என்று ஒருவர் கேட்கக்கூடும். உலக வாழ்க்கையில் நோயை அறவே தவிர்க்க முடியாது. அது கேடு போன்று தென்படினும் அதிலுள்ள நலனை அறிந்துகொள்ள ஆத்ம சாதகன் கடமைப்பட்டிருக்கிறான். உடலில் அமைந்துள்ள குறைநிலையை நிறைநிலையாகத் திருத்தியமைப்பதற்கு நோய் உதவுகிறது. அறியாமையினால் மனிதன் குறைநிலையை தேடிக்கொண்டான். பொருந்தாத உணவை உண்டு அதைச் செமித்து அவன் உடல் மயம் ஆக்கியிருக்கிறான். அதைக் களையவேண்டிய அவசியம் வருகிறபொழுது நோயுண்டாகிறது. சளி என்கின்ற நோயும், காய்ச்சல் என்கின்ற நோயும் உடலைத் திருத்தியமைப்பதற்கே உருவெடுக்கின்றன. அந்நோய்களைச் சகித்துப் பழகுவது ஆத்ம சாதனத்தில் ஒரு பகுதி. சகித்துப் பழகுவதற்கேற்ப உள்ளம் உறுதி பெறுகிறது. ஆகவே மனிதனுக்கு உண்டாகிற நோய் என்னும் தீங்கில் மறைமுகமாக இரண்டு நலன்கள் இருக்கின்றன. உடல் திருந்தியமைவது ஒரு நலன். உள்ளம் உறுதி பெறுதல் மற்றொரு நலன். இந்தப் பாங்கில் நோயைப் பொருள்படுத்துகின்றவன் அதைப் பற்றிக் குறை கூறமாட்டான்.

மகேந்திரர்: "கொலை, களவு போன்ற கேடுகள் உலகில் ஏன் இருக்கின்றன? அவைகள் இல்லாத சிருஷ்டி பாராட்டுதற்குரியதாக இருக்குமல்லவா?"

பரமஹம்சதேவர்: "சிருஷ்டியின் அமைப்பே கொலை மயமானது. ஓர் உயிர் வளருதல் பொருட்டு ஏனைய உயிர்கள் மடிந்து ஆகவேண்டும். முறையாக மடிவதை நாம் கொலை என்று சொல்வதில்லை. கோபித்துக்கொண்டு ஒருவன் மற்றொருவனைக் கொன்று விட்டால் அவனைக் கொலை பாதகன் என்று சொல்கிறோம். இது போன்ற தீங்கு உலகத்தில் எப்பொழுதுமே இருக்கும். அதைத் தவிர்க்க முடியாது. ஞானியின் காட்சியில் அது தீங்காகத் தென்படுவதில்லை. ஆசைக்கும், சிருஷ்டிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆசையில்லாவிட்டால் சிருஷ்டியில்லை. ஆசையைக் குறுக்கு வழியில் நிறைவேற்றிக்கொள்வது களவு என்று கருதப்படுகிறது. திருடனிடத்திருந்து தன் பொருளைக் காப்பாற்றுவது ஒருவித லௌகிகப் பயிற்சியாகிறது. அத்தகைய கண் கொண்டு பார்க்கின்றவனுக்குக் களவாடுகிறவன் உலகுக்கு மறைமுகமாக எப்படி உதவி பண்ணுகிறான் என்பது விளங்கும். ஆக ஒவ்வொரு கேட்டிலும் மறைமுகமாக நலன் புதைந்திருக்கிறது.

ஆக ஆத்ம சாதகனொருவன் உலகை இருக்கிறபடி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதில் அவனுக்கு நலனாகத் தென்படுபவைகளையும், தீங்காகத் தென்படுபவைகளையும் முறையாகச் சமாளிப்பானாகில் அது அவனுக்கு நல்ல வாழ்க்கைப் பயிற்சியாகிறது. நல்ல பயிற்சியே ஆத்ம சாதனமாகவும் கருதப்படுகிறது."

# மலைவளர் காதலி

( தாயுமானவர் இயற்றியது )

தூளேறு தூசுபோல் வினையேறு பொய்யெனுந்
தொக்கினுட் சிக்கிநாளுஞ்
சுழலேறு காற்றினிடை அழலேறு பஞ்செனச்
சூறையிட் டறிவைஎல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங்கூற்றின்
நட்பேற உள்ளுடைந்து
நயனங்கள் அற்றதோர் ஊரேறு போலவே
நாவிலந் தனில்அலையவோ
வேளேறு தந்தியைக் கனதந்தி யுடன்வென்று
விரையேறு மாலைசூடி
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறைவுற
வெருட்டிய கருங்கூந்தலாய்
வாளேறு கண்ணியே விடையேறும் எம்பிரான்
மனதுக் கிசைந்தமயிலே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண்உமையே.

தாயே, நீ ஞான வடிவினள். ஞானப்ரகாசத்தின் எதிரே அக்ஞான திமிரம் அல்லது அறிவின்மை என்னும் இருள் நிலைத்திருக்கமாட்டாது. கண் பெற்றுள்ள மக்கள் கண்ணிருந்தும் கார் இருளில் எதையும் பார்க்க வல்லவர்கள் ஆகமாட்டார்கள். ஆனால் மன்மதனோ பிறவிக் குருடன். அவன் காமநோய்க்கு இருப்பிடம். காமத்துக்குக் கண் இல்லை என்னும் கோட்பாட்டுக்கு இலக்காக அவன் அமைந்துள்ளான். அவனுக்கு வாகனமாக அமைந்திருப்பது அறிவின்மை என்னும் இருள். சூரியோதயத்தில் இரவின் கார் இருள் நிலைமை அறவே அகற்றப் பெறுகிறது. அதுபோன்று என்னை ஈன்றெடுத்த தாயாகிய உன்னை நான் சார்ந்திருப்பேனாகில் மன்மதன் என்னை அணுகமாட்டான். அவனை நீ விரட்டியோட்டிவிடுவாய். கஜமுகன் என்னும் யானை வடிவெடுத்திருந்த அரக்கனை விளையாட்டாக நீ விரட்டியோட்டியிருக்கிறாய். அதைவிட உனக்கு மிகச் சுலபமானது மன்மதனுடைய ஆதிக்கத்தை அகற்றித்தள்ளுவது. இக்கோட்பாட்டை வேள் ஏறு தந்தியைக்கன தந்தியுடன் வென்று என்று அண்ணல் இயம்புகின்றார். வேள் என்னும் சொல் மன்மதனைக் குறிக்கிறது. தந்தி என்றால் யானை. மன்மதனுக்கு வாகனமாயிருக்கின்ற அக்ஞான இருள் ஈண்டு ஓர் யானையோடு ஒப்பிடப்படுகிறது. அதே பாங்கில் கனதந்தி என்னும் சொல் வேழமுகம் படைத்த அரக்கனைக் குறிக்கிறது. அன்னை பராசக்திக்கு நறுமணத்தோடுகூடிய பூமாலைகளை அன்பர் இனம் அடிக்கடி சூட்டுகின்றனர். இக்கோட்பாட்டை விரையேறு மாலைசூடி என்னும் சொல் தொடர்களைக்கொண்டு தாயுமானவர் விளக்குகின்றார். விரையேறு என்பது நறுமணம் மிகுந்த என்று பொருள்படுகிறது. தாயே! நீ கன்னங்கரேலென்று இருக்கின்ற கூந்தலை உடையவளாய் இருக்கின்றாய். அத்தகைய கூந்தலின் மகிமை பாராட்டுதற்குரியதாக இருக்கிறது. கார்மேகங்கள் விண்ணுலகிலே மேலே மிதந்து சென்று மலைகளின் பள்ளத்தாக்குகளில் மறைந்துபட்டுப்போகின்றன. அப்படி அவைகள் செய்வது உன்னுடைய கூந்தலின் மகிமையைக் காண்பதின் விளைவாக அமைகிறது. உலகத்தவர்களுடைய காட்சியில் கார் மேகங்கள் போற்றுதற்குரிய பெரிய இடம் வகிக்கின்றன. அப்படித் தற்பெருமை கொண்டுள்ள அம்மேகங்கள் அவைகளை விடப் பன்மடங்கு மேலான நிலையில் உள்ள உன் கூந்தலின் சிறப்பைப் பார்த்து நாணமடைந்து மலையிடுக்குகளில் சென்று மறைந்து போகின்றன. தெய்வீக அழகோடு சீர்தூக்கிப் பார்க்குமிடத்துப் பஞ்சபூதங்களால் உண்டு பண்ணப்படுகிற அழகு பொருளற்றதாகிறது என்னும் கோட்பாடு அருமையான பாங்கிலே இந்தச் சொல் சித்திரத்திலே அடங்கியிருக்கிறது. வெற்பு ஏறி என்பது மலையின்மீது ஏறிச் சென்று என்று பொருள்படுகிறது. இக் கோட்பாட்டை விண் ஏறு மேகங்கள் வெற்பு ஏறி மறைவு உற வெருட்டிய கருங்கூந்தலாய் என அம்பிகையைப் போற்றி அருளாளர் சொல்லடுக்கை அமைத்திருக்கிறார்.

ஒரு மூர்த்தியின் ஞானபரிபாகத்தை அம் மூர்த்திபடைத்துள்ள கண் அமைப்பு விளக்கிக் காட்டுகிறது. ஞானம் வாளோடு ஒப்பிடப்படுகிறது. பொருளற்ற பதர்கள் வாளால் வெட்டித் தகர்க்கப்படுவன போன்று ஞானவாள் பொருள்

அற்ற புன்மைகளைச் சிதைத்துத் தள்ளுகிறது. ஞானசொரூபமே வடிவெடுத்துள்ள கண்களை அம்பிகை உடைத்திருப்பதால் வாளேறு கண்ணியே என அன்னையின் அருளுக்குப் பாத்திரமான அண்ணல் இயம்புகின்றார். ஐந்து இந்திரியங்களுள் கண்ணுக்குத் தனிச் சிறப்பு உண்டு. தன் செயலோடு அது நின்றுவிடாது மற்ற இந்திரியங்களுடைய செயல்களில் கலந்து கொண்டு அவைகளுக்குக் கண் சோபை தரு கிறது. எப்படியென்றால் கண்ணாரை நானே கண்டேன் என்பது கண்ணினுடைய செயல். அந்த வஸ்துவை நான் தொட்டுப் பார்த்தேன். அவன் பேச்சை நானே ஆராய்ந்து பார்த்தேன். அப்பண்டத்தை நானே சுவைத்துப் பார்த் தேன். அப்புஷ்பத்தின் மணத்தை நானே முகர்ந்துபார்த்தேன். இங்ஙனம் கண்ணின் செயல் பாக்கி நான்கு இந்திரியங்களின் செயல் களுக்குத் துணைபுரிகிறது. சிவனும் சக்தி யும் பெயரளவில் இரண்டு மூர்த்திகள். சொரூபத்தில் இருவரும் ஒன்றே. காளை வாகனராகக் கடவுள் கூறப்பெறுகிறார். மன அமைப்பில் சிவமும் சக்தியும் ஒன்றே. இக் கோட்பாட்டை விடை ஏறும் எம்பிரான் மன துக்குஇசைந்தமயிலேஎன்றஅடிகளால்போற்று கிறார். விடை என்னும் சொல் ரிஷபவாகனத் தைக் குறிக்கிறது. அம்பிகையை மயிலேஎன்று அழைப்பதன் வாயிலாக அவளிடத்துள்ள அழகும் மென்மையும் மகிமையும் நன்கு விளக் கப் பெறுகின்றன. அன்னை பராசக்தி ஹிம வானுடைய செல்வி. மலையரசனாகிய ஹிம வானுடைய இரண்டு கண்களுக்கு ஒத்தவள். அன்னவன் தவம்புரிந்து ஈன்றெடுத்த குமரித் தாய். இக்கோட்பாட்டை வரைராஜனுக்கு இரு கண்மணியாய் உதித்த மலைவளர்காதலிப் பெண் உமையே என அண்ணல் சொல் சித்தி ரம் பண்ணுகின்றார். வரைராஜன் என்னும் சொல் ஹிமவானைக் குறிக்கிறது. ஹிமவானால் அம்பிகை வளர்க்கப் பெற்றிருப்பதனால் மலை வளர் காதலி என அவள் இயம்பப் பெறு கிறாள். இத்தகைய மகிமைகளெல்லாம் வாய்க் கப்பெற்றுள்ள என் தாயே என் குறைகளை யெல்லாம் அகற்றி வைப்பாயாக.

கட்டியிருக்கிறவஸ்திரம் எவ்வளவுதுப்புரவா யிருந்தாலும் நாள் ஏற ஏற அதில் அழுக்கு ஏறுகிறது. அதற்கு நிகராக மானுடன் படைத் துள்ள உடல் காலக்கிரமத்தில் வினைகளுக்கு உட்படுகிறது. இக்கோட்பாட்டைத் தூளேறு தூசுபோல் வினையேறுமெய் எனுந் தொக்கி னுள் சிக்கி என்று அடிகளார் மேனியை வர் ணிக்கிறார். தூசுபோல் என்பது வஸ்திரம் போன்றுஎன்று பொருள்படுகிறது. தொக்கி னுள்என்னும் பதம்தோற்பையினுள்ளே என்று பொருள்படுகிறது.சிக்கி—அகப்பட்டுக்கொண்டு.

பஞ்சில் தீப்பற்றிக் கொண்டால் அது விரைந்து பரவுகிறது. சேர்ந்தாற் போன்று சுழல் காற்றும் அடித்தால் அந்தப் பஞ்சின் பாட்டைப்பற்றிப் பகருதற்கு ஒன்றுமில்லை. இப்பரிதாபகரமான நிலையில்உள்ள உடலைக் குறித்து நாளும் சுழல் ஏறு காற்றினிடை அழல் ஏறு பஞ்சு எனச் சூறையிட்டு என்று அண்ணல் இயம்புகின்றார். சூறையிட்டு என் னும் பதம் கொள்ளையடித்து என்று பொருள் படுகிறது. மனிதன் திண்ணிய உடல் படைத் திருந்தால் தெளிந்த அறிவை வெளிப்படுத்துவ தற்கு அது கருவியாயிருக்கிறது. ஆனால் உடல் முற்றும் தளர்ந்து போனால் நல்லறிவை வெளிப் படுத்துதற்கு ஏற்ற கருவியாக அது அமை யாது. அதற்கு மேல் ஒவ்வொரு நாளும் உட லின்கண் முதுமை வளர்ந்துகொண்டே வரு கிறது. அதன் விளைவாக மனிதனுடைய மனத் திட்பம் உடைந்துபட்டுப் போகிறது. இக் கோட்பாடுகளை அறிவை எல்லாம் நாள் ஏற நாள் ஏற வார்த்திகம் எனும்கூற்றின் நட்பு ஏற உள் உடைந்துஎன்று அண்ணல் இயம்பு கின்றார். வார்த்திகம் என்னும் சொல் விருத்தாப்பியம் என்று பொருள்படுகிறது.

கண் இல்லா ஊர்ப்பன்றி சுற்றியலைவது போன்று விருத்தாப்பிய தசையில் கண் களும் பார்வை இழந்து மானுடனொருவன் நில வுலகில் தள்ளாடி வாழ்ந்திருப்பது பொருந் தாது. இக்கோட்பாட்டை நயனங்கள் அற்றது ஓர் ஊர் ஏறு போலவே நான் நிலந்தனில் அலையவோ என்கிறார் அண்ணல். உடல் எடுத் துள்ள மானுடன் உடல் திட்பமும் அறிவுத் தெளிவும் வாய்த்திருக்கும் காலத்திலே அம்பி கையின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்னும் கோட்பாடு இப்பாடலின் வாயிலாக சித்திரிக்கப்படுகிறது.

# அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

உடல், உள்ளம், ஆத்மா ஆகிய மூன்றனுள் நீ ஏதாவது ஒன்றைச் சார்ந்திருக்கவேண்டும். உடலைச் சார்ந்து உடல் மயமாக உன்னை எண்ணும் பொழுது நீ கீழோன் ஆகின்றாய். உன் உணர்வு உடலைப் பற்றியதாகும்பொழுது உனக்கு மேலான அறிவு உண்டாவது இல்லை. கடவுளிடத்து உண்மையான பக்தியும் உண்டாவது இல்லை. நீ உலக மயக்கத்துக்கு உள்ளாகிக் கீழ்மையில் உழல்பவனாக இருக்கின்றாய். நீ உள்ளத்தைச் சார்ந்திருந்து உள்ள மயமாக உன்னைக் கருதும் பொழுது புகழிலும் கீர்த்தியிலும் நாட்டம் உடையவனாக அகங்காரம் தடித்தவனாகின்றாய். உன்னிடத்தில் அகங்காரம் தடிக்கும்பொழுது இன்ப துன்பங்களுக்கு ஆளாகின்றாய். உண்மை நெறி எது என்பதை மறந்து பொய்யான நெறியில் காலத்தை வீணாக்குகின்றாய். உனக்கு அப்பொழுது உதவி செய்கின்றவர்களோ, வழி காட்டுகின்றவர்களோ அமைவது இல்லை. நீ ஆத்மாவைச் சார்ந்திருந்து ஆத்ம சொருபமாக உன்னைக் கருதும்பொழுது உன்னிடத்தில் ஆத்மபோதம் வளர்கிறது. ஆத்ம போதம் உண்டாகின்றபொழுது நல்லறிவு உண்டாகிறது. உண்மையான நெறி எது என்பது அப்பொழுது உனக்குத் தெளிவாக விளங்குகிறது. ஆத்ம போதத்தை வளர்க்கக் கற்றுக்கொள். ஆத்மீக உணர்வே உனக்கு வழி காட்டுகிறது. உன்னை ஆத்மா என்று கருதுகின்ற அளவு உன்னிடத்தில் உள்ள தீயசக்திகள் நாசமாகின்றன. ஆத்மீக உணர்வு உனக்கு எல்லா நலன்களையும் தருகிறது.

உடல் உணர்வு உன்னிடத்தில் தமோ குணத்தை வளர்க்கிறது. உன்னுடைய மனதுக்கு முக்கியத்துவம் கொடுத்து எண்ணத்தை வளர்க்கும்பொழுது உன்னிடம் ரஜோகுணம் வளர்கிறது. ஆத்ம சிந்தனை செய்கின்ற அளவு உன்னிடத்தில் சத்துவகுணம் வளர்கிறது. தமோகுணம் வாழ்வை அழித்துவிடுகிறது. ரஜோகுணம் வாழ்வைத் துன்பமயமாக்குகிறது. சத்துவகுணம் ஞானத்தை வளர்க்கிறது. சத்துவகுணத்தோடுகூடிய ஆத்ம போதம் உன்னிடம் வளரவேண்டும். ஆத்ம போதத்தை வளர்க்கவேண்டும் என்பதில் நீ தீவிரமான ஆசைகொள். அருள்தாகம்கொண்டிருப்பவர்கள் பாக்கியவான்கள் என்று இயேசுநாதர் பகர்ந்துள்ளார். அருள் நிலையில் நீ வறியவனாக இருக்கின்றாய் என்று உணர்கின்ற அளவு அருளைப் பெருக்குவதில் நீ நாட்டம் உடையவனாகின்றாய். அருள் நிலையில் இருந்துகொண்டு அருள்தாகம்கொண்டு கசிந்து உருகுகின்றவர்களுக்குப் பரலோக ராஜ்ஜியம் உரியது ஆகிறது. இதனை இயேசுநாதர் "Blessed are the poor in Spirit for their's is the Kingdom of heaven" என்று பகர்ந்துள்ளார்.

தெய்வீக சக்தி எல்லா உயிர்களிடத்திலும் இருக்கிறது. தெய்வீகம் தோற்றத்துக்கு வந்துள்ள நிலையில் உயிர்களுக்கிடையில் வேற்றுமை உண்டு. தெய்வீகம் முற்றும் தோற்றத்துக்கு வந்துவிட்டால் உயிர்களுக்கும் இறைவனுக்கும் இடையில் பிளவு இல்லை. தெய்வீகம் முற்றும் தோற்றத்துக்கு வந்த உயிர் தெய்வமே ஆகிறது. தெய்வீகம் மறைந்திருக்கிறபொழுது உயிர் தெய்வத்தைவிட்டுப் பிரிந்திருக்கிறது. தெய்வீகம் தோற்றத்துக்கு வருகின்ற அளவு உயிர் மேலானது ஆகின்றது. தெய்வீகம் மறைகின்ற அளவு உயிர் கீழானதுஆகின்றது. ஓர் உயிர் மேலானது என்றோ கீழானது என்றோ பகர்வது அந்த உயிரினிடத்துத் தெய்வத்தன்மை வெளிப்பட்டிருக்கும் அளவையைப் பொறுத்தே இருக்கிறது.

வேற்றுமையினிடத்து ஒற்றுமை இருப்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும். மட்பாண்டங்கள் பலவிதமான வடிவங்களில் செய்யப்பட்டு வைத்திருக்கின்றன. ஒன்றுக்கொன்று பருமனிலும் வித்தியாசம் உடையதாக இருக்கிறது. ஆனால் அத்தனை வடிவ வேற்றுமைகளிலும் இலங்கிக்கொண்டு இருப்பது களிமண் என்னும் ஒரு பொருளாகும். தங்கத்தைக்கொண்டு பல வகையான நகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. கடுக்கன் என்றும், ஒட்டியாணம் என்றும், காப்பு என்றும், கொலுசு என்றும், மோதிரம் என்றும் அங்நகைகள் வெவ்வேறு

பெயர்களோடு வெவ்வேறு வடிவங்களில் விளங்குகின்றன. ஆனால் அவையாவும் தங்கத்தினுடைய வெவ்வேறு தோற்றங்களேயாம். பிரம்மம் என்ற ஒரு பொருள்தான் இருக்கிறது. அப்பொருள் தன் மாயாசக்தியால் பல பொருள்களாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்கிறது. ஒன்று பலவாகத் தோற்றுவித்துக்கொள்வதற்கு மின் சக்தியையும் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். மின் சக்தியானது ஒளி சக்தியாகவும், ஒலி சக்தியாகவும், வெப்ப சக்தியாகவும், சலன சக்தியாகவும், தோற்றுவித்துக் கொள்கிறது. விசிறியில் சலன சக்தியாகவும், விளக்குகளில் ஒளி சக்தியாகவும், ஒலிபெருக்கியில் ஒலி சக்தியாகவும் மின்சக்தி விளங்குகிறது. இயற்கையில் கணக்கற்ற உயிர்வகைகளைக் காண்கின்றோம். நீரில் வாழ்கின்ற உயிர்வகைகள் எண்ணிறந்தவை. நமக்குத் தெரிந்த உயிர்வகைகளைக்காட்டிலும் தெரியாத உயிர்வகைகளும் எத்தனையோ இருக்கின்றன. இத்தனை உயிர்வகைகளாகவும் பிரம்மம் தன்னைத் தோற்றுவித்துக்கொண்டு இருக்கின்றது.

பிரபஞ்சக் காட்சியில் வேற்றுமைக்கு இடமுண்டு. வேற்றுமை இல்லாவிட்டால் பிரபஞ்சமில்லை. அயர்ந்த உறக்கத்தில் வேற்றுமைகள் ஒழிகின்றன. ஆங்குப் பிரபஞ்சமும் இல்லை. அயர்ந்த உறக்கத்தில் பரம்பொருள்தான் இருக்கிறது. அயர்ந்து உறங்குகின்றபொழுது எல்லா உயிர்களுக்கும் ஒரே அனுபவம்தான் உண்டாகிறது. அயர்ந்து உறங்குகின்ற வேளையில் எல்லா உயிர்களும் இன்பமயமாக இருக்கின்றன. விழித்திருக்கும் வேளைகளில்தான் உயிர்களுக்கிடையில் வேற்றுமையைக் காண்கின்றோம். விழித்திருக்கும் வேளையில் நல்லவர்கள் என்றும் கெட்டவர்கள் என்றும் பாகுபடுத்தக் கூடிய நிலையில் மக்கள் இருக்கின்றார்கள். ஆழ்ந்த உறக்கத்தில் நல்லவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் நல்லவர்கள் அல்லர்; கெட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கெட்டவர்கள் அல்லர். நல்லவர்கள் கெட்டவர்கள் என்ற வேற்றுமை போய் அனைவரும் பிரம்மசொரூபமாக இருக்கிறார்கள்.

நீ வேற்றுமையின்கண் ஒற்றுமையைக் காண வேண்டும் என்றால் உன்னுடைய மனோவிகாரங்கள் நாசமாக வேண்டும். நீ சிவ சொரூபமாக இருக்கின்றாய் என்று ஆழ்ந்து எண்ண வேண்டும். நீ சிவ சொரூபம் என்ற உணர்வு உன்னிடத்தில் ஓங்கவேண்டும். உள்ளத்தில் உணர்ந்ததை வாயால் சொல்லும்பொழுது சிவோகம் என்பதாகிறது. நான் சிவசொரூபமாக இருக்கிறேன் என்பது அதற்குப் பொருள். சிவசொரூபத்தில் ஒன்றாகக் கலந்துவிட்ட சாது ஒருவருடைய உடல் புலி வாயில் அகப்பட்டுக் கொண்டது. அவருடைய உள்ளம் சிவத்தோடு லயமாகி இருந்தது. அவருடைய வாய் சிவோகம் என்று சொல்லிக் கொண்டிருந்தது. அவருடைய உடலை ஒரு புலி கவ்விக்கொண்டு போனது. இக்காட்சியை இமயமலையில் ஸ்ரீராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் நேரில் பார்த்துவிட்டுத் தாங்கள் கண்டதைச் சுவாமி விவேகானந்தரிடம் பகர்ந்தார்கள். அதுவன்றோ சிவத்தோடு ஒன்றிய நிலை! அந்நிலையில் சிவத்துக்கு அன்னியமானது ஒன்றுமில்லை. சிவசிவ என்றிடச் சிவகதிதானே என்ற கோட்பாட்டை அந்நிலை மெய்ப்பிக்கிறது.

வேற்றுமையாகிய இவ்வுலகத்தில் மனதைச் சரியாகப் பண்படுத்திக் கொண்டு வந்தால் சிவ சாயுஜ்யம் என்ற ஒற்றுமையில் ஒன்றுபடுவது சாத்தியம். சிவ சாயுஜ்யம் அடைவது உன் குறிக்கோள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். வேற்றுமை நிறைந்த இவ்வுலகத்துக்குள் நீ அந்த ஒற்றுமையையடைய வந்திருக்கின்றாய். அவ்வொற்றுமையை அடையும் வரையில் நீ பிறப்பெடுத்து ஆகவேண்டும். உலகத்தில் இருந்து இன்பத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணம் விருப்பு வெறுப்பை வளர்க்கிறது. உலகத்தைப் பயன்படுத்தி உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளில் மயக்கமடையாது உள்ளத்தில் இறை உணர்வை வளர்த்து வருவதற்கு இவ்வுலகை நீ பயன்படுத்தி வருவாயானால் அதை நீ நன்கு பயன்படுத்தியவன் ஆகின்றாய். வேற்றுமையை வளர்க்கின்ற உலகத்தின் புறத் தோற்றங்களில் மனதை ஈடுபடுத்தாது உலகை இயக்கிவரும் மெய்ப்பொருளினிடத்து உள்ளத்தைச் செலுத்து. அப்பொழுது உன் உள்ளம் வேற்றுமையின்கண் ஒற்றுமையைக் காண்கிறது. வேறுபட்ட காட்சி உலகம். ஒன்றுபட்ட காட்சி மெய்ப்பொருள்.

# மறு பிறப்பு

(சுவாமி விவேகானந்தர் 1895ஆம் ஆண்டு நியூயார்க்கிலுள்ள ஆத்மீகப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதிய கட்டுரை)

[251 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கியூம் என்னும் ஆங்கில தத்துவஞானி இருந்தார். அவர் பேரறிஞரும் நாத்திகவாதியும் ஆவார். அமரநிலையைப்பற்றிக் கட்டுரை ஒன்று அவர் எழுதியுள்ளார். அதில் அவர் எழுதியிருப்பதாவது: "தத்துவ ஞானம் கூடு விட்டுக் கூடுபாய்தல் போன்ற கொள்கைகளில் கவனம் செலுத்தும்." லெஸ்ஸிங் என்ற தத்துவ ஞானி கவிதை ஞானமும், உள்முக நோக்கும் உடையவர். அவர் வினவுவதாவது: "மறுபிறப்பு என்னும் இக்கோட்பாடு மிகப் பழையது என்ற காரணத்தால் மட்டும் நகைப்புக்குரியது ஆகிவிடுமா? மனிதனுடைய அறிவு போலி வாதங்களால் சிதறுண்டு வலுவிழந்து போவதற்கு முன்பு இக்கொள்கையைப்பற்றி ஆராய்ந்தது. புது அறிவும், புது அனுபவமும் பெறுகின்ற திறமை என்னிடத்தில் இருக்கும் வரையில் நான் ஏன் பிறப்பெடுத்து வரக்கூடாது? ஒரு பிறவியிலேயே எல்லாவற்றையும் நான் பெற்றுவிட முடியுமா? மீண்டும் பிறப்பெடுக்கின்ற துன்பத்துக்குள்ளாகாமல் நான் பெறவேண்டிய அவ்வளவையும் ஒரு பிறவியில் பெற்றுவிட முடியுமா?"

ஆத்மாவுக்குப் பல பிறப்புக்களும், பலவிதமான வாழ்க்கைகளும் உண்டு என்ற கொள்கைக்கு ஆதரவாகவும், மறுப்பாகவும் எழுந்த கொள்கைகள் பலப்பல. சில சிந்தனையாளர்கள் எல்லாக் காலங்களிலும் மறுபிறப்புக் கொள்கையைப் பாதுகாப்பதற்குத் துணிவுடையவர்களாக இருந்திருக்கிறார்கள். நம் அறிவைக் கொண்டு ஆராய்ந்தாலும்கூட ஒரு ஆத்மாவிற்கு முன் பிறப்பு அவசியமானது என்பது தோன்றுகிறது. ஆன்மா தனிப்பொருள் அல்லாத கருத்துக்களின் கூட்டுப்பொருள் என்று புத்தர்களுக்கிடையில் மாத்தியமிகர்கள் வற்புறுத்துகின்றனர். அதை நாம் ஒப்புக்கொண்டாலும் அவர்கள் தங்கள் நிலையை விளக்குவதற்கு ஆத்மாவிற்கு முற்பிறப்பு உண்டு என்பதை ஏற்றார்கள்.

ஒரு காலத்தில் தோன்றியது சாசுவதமாக இருக்க முடியாது என்ற விவாதத்திற்கு மறுப்புச் சொல்ல முடியாது. கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்று கூறி எதற்கும் விதிவிலக்கு உண்டு என்று கூறுபவர்கள் உண்டு என்றாலும் யுக்திக்கு அது முரண்பாடு உடையதாகும். சில தவறான கருத்துக்கள் பெரிய சிந்தனையாளர்கள் சிலரிடமிருந்தும் தோன்றுவதைக் கண்டு வருந்தவேண்டியுள்ளது.

கடவுள் அண்டம் யாவுக்கும் பொதுவானவர். இயற்கை அனைத்துக்கும் அவரே பொதுக் காரணமாவார். கடவுள் சக்திமான் என்று கூறி, அவரால் எல்லாம் செய்யமுடியும் என்று கூறி, ஒவ்வொரு கேள்விக்கும் அவ்விடையைக் கொடுப்பது நம்முடைய அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் இடமில்லாது போய் விடும்.

மேலும் கடவுள் எல்லாம் வல்லவர் என்று கூறி எதற்கும் அவரைப் பொறுப்பாக்குவது பொருந்தாது. காரியத்திற்கு வேண்டிய அளவே ஒரு காரணத்தை அறிகிறோம். அதற்குமேல் அக் காரணத்தைப்பற்றி நமக்குத் தெரியாது. முடிவில்லாததாகிய காரியத்தைப்பற்றி நாம் அறியமுடிவது இல்லை. இனி, முடிவில்லாத காரணத்தைப் பற்றி நம்மால் எப்படி அறிய முடியும்? கடவுளைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்துக்கள் யாவும் வரையறைக்கு உட்பட்டவைகளே ஆகும். கடவுளைக் காரணம் என்று சொல்லுவது அவரை ஒரு வரையறைக்கு உட்படுத்துவது ஆகிறது. சூன்யத்திலிருந்து ஒன்று தோன்றியது என்பதையோ, எல்லையற்ற ஒன்று ஒருகாலத்தில் தோன்றியது என்பதையோ நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியது இல்லை. இவற்றை ஏற்றுக்கொள்ளாமல் நாம் இவற்றிற்கு அப்பாலும் சென்று விளக்கம் தர முடியும்.

முற்பிறப்பைப் பற்றிய நினைப்பு மக்களிடம் இல்லை என்பதைக் காரணமாகக் கொண்டு முற்பிறப்பு இல்லை என்று சிலர் வாதிக்கின்றனர். இங்ஙனம் கூறுகின்றவர்கள் மனித வாழ்வு முழுவதும் ஞாபகத்தில் அடங்கி இருக்கிறது என்று நிரூபிக்கவேண்டும். ஞாபகம்

தான் இருப்புக்கு ஆதாரம் என்ருல் இப்பொழுது நம் நினைவில் இல்லாத நம் வாழ்க்கைப் பகுதிகள் எல்லாம் இல்லாதவையாகப் போய்விடும். தூங்கும் பொழுது ஞாபகம் போய்விடுகிறது. நோயினலோ வேறு எதனலோ ஞாபகசக்தி நமக்குப் போய்விடுகிறது. அந்தச் சமயங்களில் எல்லாம் நாம் இல்லாதவர்களாக ஆகிவிடுவோம்.

முற்பிறப்புக்கு ஆதாரங்கள் உண்டு என்று கூறும் இந்திய தத்துவ ஞானிகளுடைய சான்றுகளில் முக்கியமானவை வருமாறு : முதலாவதாக உலகில் தென்படும் வேறுபாடுகளுக்கு முற்பிறப்பை மறுத்து விட்டால் வேறு என்ன காரணம் காட்டமுடியும்? கடவுள் நீதியும் கருணையும் உடையவர். அவருடைய ஆதிக்கத்தில் நிகழும் பிரபஞ்சத்தில் ஒரு குழந்தை மனித இனத்துக்குப் பயன்படக்கூடிய நல்ல குழந்தையாக வளர்வதற்குரிய சூழ்நிலையில் பிறக்கிறது. அதே காலத்தில் அதே நகரத்தில் இன்னெரு குழந்தை பொல்லாத குழந்தையாக மாறும் சூழ்நிலையில் பிறக்கிறது. வாழ்வு முழுவதும் துன்பத்துக்கே ஆளாகக்கூடிய நிலையில் பிறக்கும் குழந்தைகளைப் பார்க்கிருேம். அப்படித் துன்பம் அனுபவிப்பதற்கு அக்குழந்தைகளிடத்து இப்பொழுது நாம் குற்றம் காண முடிவதில்லை. அதற்கு என்ன காரணம் சொல்ல முடியும்? யாருடைய அறியாமையால் அத்தகைய விளைவு ஏற்பட்டிருக்க முடியும்? அத்துன்பத்துக்கு அக்குழந்தைகள் காரணமாக இல்லாவிடில் அவைகள் ஏன் அதை அனுபவிக்கவேண்டும்? அக்குழந்தைகளின் பெற்ருேர்களுடைய செயல்கள் காரணம் என்று கூறுவோமானல் பெற்ருேர்களின்செயல்களுக்காகக் குழந்தைகள் ஏன் துன்புறவேண்டும்? எனவே இவ்வுலகத்தில் காணும் வேற்றுமைகளுக்குக் காரணம் தெரியவில்லை என்கிற அறியாமையை ஒப்புக்கொள்வதே மேலானது. அதை விட்டுவிட்டு இங்கே படும் துன்பத்தின் விகிதப்படி மரணத்துக்குப் பின்பு இன்பம் கிடைக்கும் என்ற மயக்கத்திலோ, ரகசியமானது என்று கூறியோ அப்பிரச்னையைத் தட்டிக் கழிக்கப் பார்ப்பது சரி அன்று. காரணம் எதுவுமின்றி நம்மீது பிறர் துன்பத்தைச் சுமத்துவது அநீதிமட்டுமன்று; அக்கிரமமுமாகும்.

துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களுள் உயர்ந்த வாழ்க்கைக்காகப் போராடுபவர்கள் எத்தனைபேர்! அத்துன்பத்திலேயே அகப்பட்டு அழிந்து போகிறவர்கள் எத்தனை பேர்! கெட்ட சூழ்நிலையில் பிறந்தவர்கள் மேன்மேலும் கேட்டை வளர்த்து வருவார்களானல் அவர்களுக்கு எதிர்காலத்தில் விமோசனமே இல்லையா? அப்படி அவர்களுக்கு விமோசனம் உண்டு என்ருல் கெட்டவர்களாக இருக்குமளவுக்குப் பின்னல் நலன் உண்டாகும் என்று ஆகிவிடும்.

ஆத்மாவின் மகிமையையும் சுதந்திரத்தையும் நிலைநாட்டவும் உலகிலுள்ள ஏற்றத் தாழ்வுகளுக்குச் சமாதானம் கூறவும் வேண்டுமானல் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதற்குப் பொருத்தமான காரணம் நம்முடைய வினையே ஆகும். ஆத்மா சூனியத்திலிருந்து ஆக்கப்பட்டது என்ற கொள்கை விதிக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. கடவுள் கருணைமயமானவர். விதியின்படி நிகழ்கிறது என்ருல் கடவுளைக் கருணையற்ற பயங்கரமான பொருளாகத்தான் நாம் வழிபடவேண்டும். சமயம் மக்களை நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ ஆக்கும் திறமை உடையது. விதிக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற கிறிஸ்துவமதமும், இஸ்லாம் மதமும் எத்தகைய பயங்கரமான கருத்தை உடையவையாக இருக்கின்றன! தம் மதத்தை நம்பாதவர்களை வாளுக்கு இரையாக்குவது நியாயம் என்று சொல்லும் கருத்து எவ்வளவு கொடுமையை விளைவித்திருக்கிறது! இன்னும் எவ்வளவு பயங்கரச் செயலை விளைவிக்க இருக்கிறது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நியாய தரிசனத்தைச் சார்ந்த தத்துவஞானி ஒருவர் மறு பிறப்பைப்பற்றி ஒரு கருத்துப் பகர்ந்திருக்கிருர். அதுதான் முடிவான கருத்து என்று தோன்றுகிறது. நம்முடைய அனுபவங்கள் அழிந்து போவதில்லை என்பதே அவருடைய கருத்து ஆகும். நம்முடைய செயல்கள் மறைந்துவிட்டன போன்று தோன்றினலும் அவைகள் தோன்ருநிலையில் இருக்கின்றன. அவைகள் பின்பு இயல்புகளாக நம்மிடத்தில் வேலை செய்கின்றன. குழந்தைகள் சில இயல்புகளோடு பிறக்கின்றன. உதாரண

மாக மரணத்துக்குப் பயப்படுவது குழந்தை களிடத்து இயல்பாக இருக்கிறது.

இயல்பு என்பது திரும்பத் திரும்பச் செய்த செயல்களின் விளைவு ஆகும். பிறப்பிலேயே அமைந்த இயல்புகளை இதை ஆதாரமாக வைத்து விளக்கவேண்டும். பிறக்கும்பொழுது உள்ள இயல்புகளை இப்பிறப்பில் நாம் பெற் றிருக்க முடியாது என்பது வெளிப்படை. எனவே அவைகளைப் பெறுவதற்கு முற்பிறப்பு உண்டு என்பதை ஏற்றுகவேண்டும். சில இயல்புகள் நாம் அறிவோடு செய்த செயல் களின்விளைவு என்பதை நாம் அறிய முடிகிறது. இது உண்மை என்றால் நம்மிடம் பிறக்கும் பொழுது இருந்த இயல்புகள் முற்பிறப்பில் அறிவோடு செய்த செயல்களின் விளைவுகளாக இருக்கவேண்டும் என்பது உறுதியாகிறது.

இப்பிறவியில் உள்ள இயல்புகள் அறி வோடுகூடிய செயல்களின் பயன் என்று விளக்குவதில் இந்திய மறுபிறப்பு வாதிகளும், சமீபகால பரிணமவாதிகளும் ஒரே கருத்து உடையவர்கள் ஆகிறார்கள். ஆன்மீகக் கொள்கையுடைய இந்துக்கள் ஜீவாத்மாவின் அறிவோடுகூடிய செயல்கள் இயல்புகள் ஆகின் றன என்கிறார்கள். பரிணமவாதிகளாகிய உலோகாயதர்கள் இயல்பு என்பது பெற்றோ ரிடமிருந்து உடல் வாயிலாக வருகிறது என் கிறார்கள். இதுதான் அவர்களுக்கிடையில் உள்ள வேறுபாடு ஆகும். சூனியத்திலிருந்து சிருஷ்டி வந்தது என்னும் கொள்கைக்கு ஆங்கு இடமில்லை.

இப்பொழுது மறுபிறப்பு வாதிகளுக்கும், உலோகாயதர்களுக்கும் இடையில் போராட் டம் இருக்கிறது. ஜீவாத்மனுடைய அனுப வங்கள் அனைத்தும் ஜீவாத்மனிடமே சேர்ந்து பிறவிதோறும் தொடர்பு அறாது ஜீவாத்மனுடைய இயல்புகளாக வருகின்றன என்று மறுபிறப்பு வாதிகள் கூறுகிறார்கள். எல்லாச் செயல்களுக்கும் மூளைதான் காரண மென்றும், இயல்புகள் உயிரணுக்கள் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குச் செலுத்தப் படுகின்றன என்றும் உலோகாயதர்கள் கூறு கின்றனர்.

மறுபிறப்புக் கொள்கை நமக்கு முக்கியமான தாகத் தோன்றுகிறது. மறுபிறப்பின் மூலம் இயல்பு வருகிறது என்பதும், உயிர் அணுக்கள் மூலம் இயல்பு செலுத்தப்படுகிறது என்பதும் ஆன்மீகத்துக்கும் உலோகாயதத்துக்கும் இடை யில் உள்ள போராட்டமாகும். உயிரணு மூலம் இயல்பு செலுத்தப்படுகிறது என்பது போது மான விளக்கம் என்றால், உலோகாயதம் முக்கி யத்துவம் பெறுகிறது. அப்பொழுது ஆத்மா வைப் பற்றிய கொள்கைக்கு அவசியம் இல் லாது போகிறது. உயிர் அணுவின் மூலம் இயல்பு செலுத்தப்படுகிறது என்ற விளக்கம் சரியில்லை என்றால் ஜீவாத்மன் பல பிறவி களின் அனுபவங்களை எல்லாம் இப்பிறவிக்குத் தன்னோடு கொண்டு வந்திருக்கிறான் என்பது முற்றிலும் உண்மையாகிறது. உலோகாயதம், ஆன்மீகம் இவ்விரண்டில் ஒன்றை ஏற்றுக வேண்டும். இவ்விரண்டில் எதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை நம் அறிவைக் கொண்டு தீர்மானிப்போமாக. (முற்றும்)

## சூதாட்டம்

சூதும் வாதும் வேதனை செய்யும். பிறர் பொருளை முறை தவறிக் கைப்பற்று வது சூதாட்டம். அப்படிச் சம்பாதித்த செல்வம் நிலைத்திராது. பாபத்தையும் பாதரசத்தையும் ஜீரணம் பண்ண முடியாது. சூதாட்டம் பொல்லாதது என்பது தொன்று தொட்டு நிரூபிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பழங்காலத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் பகடை என்ற சூதாட்டம் விளையாடி நாட்டைப் பாழ்படுத்தினார்கள். இக்காலத்தில் நம்மவர்கள் பரிசுச்சீட்டு என்ற சூதாட்டத்தையும் குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்தையும் செய்து வருகிறார்கள். இவைகளின் விளைவு கேடு. நல்லார் இத்தீங்குகளினின்று விலகி யிருப்பார்களாக. பொதுநலனுக்காகவென்றும் இவைகளில் ஈடுபடலாகாது. இவை களில் கருத்துச் செலுத்தாதிருக்குமளவு நலத்தை நாம் வளர்த்தவர்களாவோம்.

# வழிபாடும் மனத்தூய்மையும்

( ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் சக்திபூஜை அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு )

[336ஆம் பக்கத் தொடர்ச்சி]

உயிர்கள் அனைத்தும் அறிவு சொரூபம். அறிவைப் பேரறிவாகச் செய்வது குறிக்கோளாகும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்பது குறள். இத்தனை உயிர்களின் வடிவங்களாக இருந்துகொண்டு ஈசன் விளையாடுகிறார். உயிர்களெல்லாம் நாராயண சொருபம். எல்லா உயிர்களையும் நாராயணர்களாகப் பொருள்படுத்திப் பழகவேண்டும். ஆனால் புலி நாராயணனுக்குத் தூர இருந்துகொண்டு வணக்கம் செலுத்தவேண்டும். கெட்டவர்களும் நாராயணசொரூபம்தான். ஆனால் அவர்களுடன் நெருங்கிப் பழகவேண்டாம். அவர்களோடு நெருங்கிப் பழகினால் துன்பம் வந்துசேரும். மனம் பண்பட்டு மேல் நிலைக்கு வரவர அதனிடத்து ஆற்றல் அதிகரிக்கிறது. பண்பட்ட மனதில் அன்பு விரிவடைகிறது. பண்பட்ட மனது தத்துவத்தை உள்ளது உள்ளபடி அறிகின்ற அறிவாக மாறி அமைகின்றது. ஆற்றல், அறிவு, அன்பு ஆகிய மூன்று பகுதிகளும் சரியாக அமைந்துள்ள மனது நிறைமனது ஆகிறது. அம்பிகை நிறைமனது மயமாக இருப்பதால் மனஸ்வினி என்று போற்றப்படுகின்றாள். ஆற்றல் இருந்து அன்பும் அறிவும் இல்லாது போகலாம். அன்பு இருந்து அறிவும் ஆற்றலும் இல்லாது போகலாம். அறிவு இருந்து அன்பும் ஆற்றலும் இல்லாது போகலாம். அப்படி உள்ள நிலை குறைபட்ட நிலையாகிறது. நிறை மனதில் அன்பு அறிவு ஆற்றல் இம்மூன்றும் சமநிலைப்பட்டு இருக்கின்றன. இம் மூன்று பேரியல்புகளையும் விளக்குவதற்கு ஒவ்வொன்றுக்கும் ஆறு அத்தியாயங்கள் கீதையில் இருக்கின்றன. ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் சமமாக இருக்கும் பொழுது நிறைநிலையையுடைய முக்கோணமாகிறது. மூன்று பக்கங்களும் சமமாக உள்ள முக்கோணங்கள் அம்பிகைக்குரிய ஸ்ரீ சக்கரத்தில் இடம் பெற்றிருக்கின்றன, எனவே ஸ்ரீ சக்கரம் நிறை மனதுக்குச் சின்னமாக இருக்கிறது. மனதைப் பண்படுத்தினால் நிறைமனிதர்களாகின்றோம். நம்மை நிறைமனிதர்களாக்குவது சாதனத்தின் வாயிலாக நிகழவேண்டும். மனஸ்வினியாக அம்பிகை இருந்து இப் பாடத்தை நமக்குப் புகட்டுகின்றாள். சாதனத்தின் மூலமாக அன்பு அறிவு ஆற்றல் ஆகியவற்றை முறையாக வளர்ப்பது சக்தி உபாசனை ஆகின்றது. நிறைமனிதர்களாவதற்குரிய எல்லாச் சாதனங்களையும் முறையாகச் செய்து அம்பிகையின் பேரருளால் நிறைமனிதர்களாவோமாக.

மனதின் முன்னேற்றம் அளப்பரியதாக இருக்கின்றது. மனதைப் பண்படுத்துகிறவளவு மேல்நிலைக்குப் போகலாம். மனதின் மகிமையைக் குறித்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளதாவது: "நீ ஈசுவர கிருபையைப் பெற்றிருக்கலாம். குருவினுடைய அனுக்கிரகத்தைப் பெற்றிருக்கலாம். சத்சங்கத்தினுடைய ஆதரவைப் பெற்றிருக்கலாம். ஆனால் உன்னுடைய மனதின் அனுக்கிரகம் அல்லது ஆதரவு இல்லாதுபோனால் மற்ற மூன்றும் அனர்த்தமாய்ப் போய்விடும்." இது ஒரு பெரியகோட்பாடாகும். ஈசுவர கிருபை, குருவின் அனுக்கிரகம், சத்சங்கத்தின் ஆதரவு ஆகிய இம்மூன்றும் கிடைப்பதற்கு அரியவைகள். பல பிறவிகளில் செய்த தவத்தின் பயனாக இம்மூன்று பாக்கியங்களும் ஒருவருக்கு வந்து அமையலாம். அம் மூன்றும் அமைந்திருந்தபொழுதிலும் மனதின் ஆதரவு இல்லாதுபோனால் அவை அனர்த்தமாய்ப்போய் விடுகின்றன. மனதின் முக்கியத்துவம் இதன் மூலம் நன்கு விளங்குகின்றது. நம்மை நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டும். துன்பத்தைத் தவிர்க்கமுடியாத நிலையில் இருக்கின்றோம். பக்தர் ஒருவர் பகர்வதாவது: "யந்திரக் கற்களை கீழே ஒன்று மேலே ஒன்று வைத்து அவைகளுக்கிடையில் தானியத்தைப் போட்டு அரைத்தால் தானியம் உடைபடாது வெளியே வரமுடியாது. பூலோகம், சுவர்க்கலோகம் என்கிற இரண்டு கற்களுக்கு இடையில்

ஜீவர்களாகப் பிறந்திருக்கின்ற நாம் துக்கப் படாது வெளியே வரமுடியாது.” சிற்றுயிர், பேருயிர், சான்ருேர், துஷ்டர், தேவர், அசுரர் ஆகிய எல்லாருக்கும் துக்கம் உண்டு. துக்கம் வரும்பொழுது அது ஏன் வந்தது என்று முறையாக ஆராய்ச்சி பண்ணிஞல் துக்கத்துக் குக் காரணம் மனது என்பது விளங்கும். நம்மை எடுப்பதும் கெடுப்பதும் நம்முடைய மனது ஆகிறது. மனதைப் பரிசீலனை செய்து அதிலுள்ள குற்றங்களை எல்லாம் போக்கித் திருத்தி அமைத்துக்கொண்டே வந்தால் துன் பத்திலிருந்து நாம் விலகிக்கொள்ள முடியும். மனம் இல்லாதவிடத்துத் துன்பம் இல்லை என்பதற்குத் தினசரி நமக்கு வந்து அமையும் அயர்ந்த உறக்கம் பிரமாணமாக இருக்கிறது. சொப்பனத்தில் கஷ்டப்படுவதாகச் சிலசமயம் காட்சிகள் வந்து அமைவது உண்டு. ஆனல் ஆழ்ந்த உறக்கத்தில் யாரும் துன்பப்படுவ தில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவர்கள் அனை வரும் பிரம்மாவஸ்தையில் இருக்கின்றனர். அப்பொழுது மனம் ஒடுங்கி இருப்பதால் துன் பம் இல்லை. விழித்துக்கொண்டவுடன் அவர வர்களுடைய மனத்தின் பான்மைக்கேற்பக் கவலை, துன்பம், பதைபதைப்பு ஆகியவை வரு கின்றன. கட்டிலடங்காது காமத்துக்கு வசப் பட்டிருக்கும் மனது பெருமிதமான துன்பத்தை உண்டாக்குகின்றது. மனதை நாம் எப்படிக் கட்டி ஆளவேண்டும் என்பதைத் தம்முடைய சொரூபத்தின் மூலமாகச் சிவபெருமான் விளக்குகிருர். சிவபெருமான் ஒரு கையில் மான் ஒன்றை வைத்திருக்கின்ருர். அந்த மான் அவருடைய முகவிலாசத்தைப் பார்த்தவண்ண மிருக்கிறது. நம்முடைய மனது மான் போன்ற தாகும். மான் குதித்துக் குதித்து இங்குமங் கும் ஓடுவது போன்று நம் மனதும் ஒன்றை விட்டு ஒன்றைத் தாவிக் குதித்து ஓடிக் கொண்டே இருக்கிறது. அங்ஙனம் ஓடுகின்ற மனதைக் கட்டி ஆளவேண்டும் என்பதைச் சிவபெருமான் தம் கையில் மானை வைத்து விளக்குகிருர். நாய் ஒன்றைச் சங்கிலிபோட்டுக் கட்டிவைத்திருக்கின்ருேம். அந்தச் சங்கிலி இடம்தரும் அளவு நாய் இங்கும் அங்கும் ஓடும். அது போன்று நம்முடைய ஆசைக்கு ஏற்ப மனம் அலைகின்றது. மனதுக்குப் பகவத் சிந்தனையைக் கொடுத்துவிட்டால் அது அடங்கி விடும். யானைக்குச் சங்கிலியைக் கொடுத்து விட்டால் துதிக்கையைக் கொண்டு அதை உருட்டிக்கொண்டே இருக்கும். யானைக்குச் சங்கிலியைத் தராவிட்டால் அது தலையில் மண்ணை வாரிப்போட்டுக்கொள்ளும். மனதுக்கு ஜபம் தியானம் ஆகிய சாதனைமுறைகளைத் தந்துகொண்டே இருக்கவேண்டும்.

மனதைத் தன்போக்கில் விட்டு விட்டால் கீழான சிந்தனை என்னும் மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளும். மனம் சதா பகவத் சிந் தனையில் இருக்குமானல் அது அலையாது அடங்கி இருக்கிறது. மனதைச் சதா பகவத் விஷயங்களிலேயே பயன் படுத்திக்கொண்டி ருந்தால் அது கீழ்மையில் ஓடாது. நமக்குத் துன்பங்கள் பல காரணங்களை முன்னிட்டு வரு கின்றன. ஜன்மாந்திர வாசனைகளின் விளை வாகவும் துன்பம் வரலாம். துன்பம் எப்படி வந்தது என்பதை ஆராய்ச்சி பண்ணிஞல் அதைப்போக்க வழி தெரியும். மனதைச் சரியா கக் கையாளத்தெரியாமையே துன்பத்துக்குக் காரணமாகும். மனதைச் சரியாகக் கட்டி ஆளத்தெரிந்துகொண்டால் துன்பம் வருவ தற்கு இடமில்லை.

மனதைப் பண்படுத்தக் கடமைப்பட்டிருக் கின்ருேம். மனதை எப்படிப் பண்படுத்தலாம் என்பதை அம்பிகையினுடைய நாமங்களாகிய பக்த மானச ஹம்சிகா என்பதும் முனிமானச ஹம்சிகா என்பதும்விளக்குகின்றன. இமயமலை யில் கைலாசம் உள்ளது. கைலாசத்தில் தென் புறம் ஒரு தடாகம் உள்ளது. அதற்கு மானச சரோவரம் என்பது பெயர். அத்தடாகம் மனோ தத்துவத்துக்கு விளக்கமாக இருக்கிறது. ஆகையால் அதற்கு மானச சரோவரம் என்ற பெயர் வந்தது. மானச சரோவரத்தில் ஹம் சங்கள் அல்லது அன்னங்கள் நீந்தி விளையாடி மகிழ்வுற்றிருக்கின்றன. ஹம்சம் என்பது ஜீவாத்மனைக் குறிக்கிறது. பிரபஞ்சம் என் னும் தடாகத்தில் ஜீவாத்மன் என்னும் அன்னம் நீந்திக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சம் என் னும் தடாகத்தைத் தாண்டுகின்ற ஹம்சம் பரம ஹம்சமாகின்றது. ஜீவன் சிவ சொரூபம் ஆவ தைத்தான் ஹம்சம் பரமஹம்சம் ஆவதாகக் குறிக்கின்ருேம். ஜீவன் சிவசொரூபமாவது

வாழ்க்கையின் குறிக்கோள். மனம் இருக்கும் பரியந்தம் பிரபஞ்சக் காட்சி இருக்கும். மனம் ஒடுங்குமிடத்துப் பிரபஞ்சக் காட்சி இல்லை. மனதை என்ன செய்யவேண்டும் என்பதை மானசசரோவரம் விளக்குகிறது. மானசசரோவரத்தின் சுற்றளவு ஐம்பத்தாறு மைல் ஆகும். அதைப்பார்த்தால் சமுத்திரம் போன்று தென்படும். அதன் கீழ்ப்பகுதியில் பிரம்மபுத்திராநதி உற்பத்தியாகி ஓடுகின்றது. அதன் மேற்குக் கரையில் சிந்துநதி உற்பத்தியாகி ஓடுகின்றது. காலை ஒன்பது மணிவரை அத்தடாகத்தில் அலை ஏதும் வீசுவது இல்லை. அதில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதன் கரையோரத்தில் ஆழம் முப்பது அடியிலிருந்து நாற்பது அடி வரையில் இருக்கும். அதன் நடுப்பகுதியில் இருநூற்றைம்பது அடி ஆழம் இருப்பதாக ஊகிக்கின்றார்கள். பனிக்கட்டி உருகி வந்தநீர் அங்குத் தேங்கி இருக்கிறது. தண்ணீரில் அழுக்குச் சிறிதும் இல்லை. தண்ணீர் கண்ணாடிபோன்று இருக்கின்றது. அத்தடாகத்தில் உள்ள தண்ணீருக்குள் பார்த்தால் அத்தடாகத்தின் அடிப்பகுதியில் உள்ள வெள்ளை மணல் நன்றாகத் தெரிகிறது. அத்தடாகத்துக்குள் ஒரு கல்லைப் போட்டால் அக்கல் மெதுவாகக் கீழேபோவது நன்றாகத் தெரியும். அக்கல் தரைக்குச் சென்று மணலைத் தொடும்வரையில் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கும். அவ்வளவு ஆழமான பகுதியாக இருந்தும் அதில் உள்ள நீர் தெளிவாக இருப்பதால் தரைப்பகுதி தெரிகிறது. இனி, இதற்கு மாறாக அழுக்குப் படிந்த நீர் எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம். இலங்கையில் கடலுக்குள் இரண்டுமைலுக்கு அப்பால் செம்படவர்கள் நின்றுகொண்டு இருந்தார்கள். கடலுக்குள் அவ்வளவு தூரம் போயும் ஆழமில்லையா ? என்று கேட்டபொழுது இன்னும் நெடுந்தூரம் அப்படித்தான் இருக்கும் என்று செம்படவர்கள் சொன்னார்கள். கரையோரம் சில இடங்களில் இரண்டு அங்குலத்துக்குக் கீழ் இருக்கிற புல் தென்படாது. கடல் நீரின் தன்மை அத்தகையதாக இருக்கும். மழை நீர் ஓர் இடத்தில் குட்டைபோன்று தேங்கி நிற்பதைப் பார்க்கலாம். அந்தக் குட்டையின் ஆழம் எவ்வளவு என்பது தெரியாது. ஏனென்றால் நீரில் சேறு படிந்து ஒரே கலக்கமுள்ளதாக இருக்கும். சமுத்திர நீர் போன்றும், குட்டை நீர் போன்றும் நம்முடைய மனம் அழுக்குப் படிந்ததாக இருக்கிறது. ஆகையால் நம் உள்ளத்தில் உள்ள பரம்பொருளின் சாந்நித்தியம் நமக்கு விளங்குவது இல்லை. மானச சரோவரம் போன்று மனம் தெளிவடைந்து அலை வீசாது இருக்கவேண்டும். அப்போது மனதின் அடிப்பகுதி தென்படுகிறது. மானசசரோவரத்துக்குப் பக்கத்தில் ரஜஸ்தல் என்ற மற்றொரு தடாகம் இருக்கிறது. அதில் கரை முழுவதும் கரடு முரடானதாக இருக்கும். தடாகத்தின் உள்ளேயும் கரடு முரடான பாறைகள் இருக்கின்றன. அசுரருடைய மனதுக்கு அது எடுத்துக்காட்டாக இருக்கிறது. பக்தர்கள், முனிவர்களுடைய மனதுக்கு எடுத்துக் காட்டாக மானச சரோவரம் இருக்கிறது. பக்தர்கள் முனிவர்களுடைய மனம் மானச சரோவரம் போன்று ஒழுங்குப்பாடும் தூய்மையும் உடையதாகஇருக்கின்றது. மனதில் ஒழுங்குப்பாடும் தூய்மையும் திகழுமானால் மானச சரோவரத்தில் ஹம்சப் பறவை விளையாடுவதைப் பார்ப்பது போன்று நம் உள்ளத்தில் அன்னை பராசக்தியினுடைய சாந்நித்தியத்தைக் காணலாம்.

பக்தர்கள் சதா பரமனைப் பற்றியே சிந்திக்கவும், புகழ்ந்து பாடவும் செய்து வருகின்றனர். மனனசீலர்களாக இருப்பவர்கள் முனிவர்கள் ஆகின்றார்கள். அவர்களுடைய மனம் இடையறாது பகவத் சிந்தனை செய்து கொண்டு இருக்கிறது. ஒரு பாத்திரத்தில் உள்ள எண்ணெயை மற்றொரு பாத்திரத்தில் கொட்டும் பொழுது இடையீடின்றித் தொடர்ந்து விழுந்து கொண்டே இருக்கும். முனிவர்களுடைய மனம் அப்படி இடைவிடாது பகவத் சிந்தனை செய்து கொண்டிருக்கும். இடைவிடாது பகவத் சிந்தனை செய்து வருகின்ற மனதுக்குத் தெளிவு உண்டாகின்றது. காலை பத்து மணிக்குப் பிறகு கைலாயத்தில் காற்றடிக்கத் துவங்குகிறது. அப்போது மானச சரோவரத்தில் கடல் அலை போன்று பெரிய அலைகள் வீசுகின்றன. கீழே உள்ள பொருள் தெரியாதபடி அலை மறைத்து விடுகிறது. உள்ளத்தில் உலக ஆசை என்ற சேறு படிந்து கிடக்கிறது. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு அதில் முயற்சி என்னும் அலை வீசிக் கொண்டிருக்கிறது. சேறு படிந்து

எண்ண அலை வீசிக்கொண்டிருக்கிற மனதில் ஆத்ம சாந்தியத்தை நாம் உணரமுடியாது. அந்த மனம் துன்பத்தை விளைவிக்கின்றது. மனதை அடக்கத் தெரியாமல் துன்பப்படுகின்றோம். ஆசையில்லாது மனம் அடங்கி இருக்கத் தெரிந்து கொண்டால் துன்பத்தைத் துடைத்துத் தள்ளி விடலாம். எனவே நாம் படுகிற துன்பத்துக்கு நாமே காரணமாகின்றோம். நம்மை எடுப்பதும் கெடுப்பதும் நம் மனதே ஆகும். மனதைச்சரிப்படுத்தத் தெரிந்து கொள்ளுமிடத்து நாம் சாதனத்தில் மேலே போகின்றோம். யோக: சித்த விருத்தி நிரோத: என்று யோகம் விளக்கப்படுகின்றது. மனதில் விருத்திகள் என்னும் அலைகள் கொதித்து எழுந்து கொண்டிருக்கின்றன. அவற்றை அடங்கி இருக்கச் செய்து விட்டால் சாந்தநிலை உண்டாகின்றது. அடங்கிய மனதுக்கு மானசசரோவரமும், அடங்காத மனதுக்கு அதன் பக்கத்தில் உள்ள ரஜஸ்தல் என்னும் தடாகமும் எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன.

மனம் பண்பட்டதற்கு அறிகுறியை அம்பிகையின் 'மானவதி' என்னும் நாமம் விளக்குகிறது. மானவதி என்றால் பரந்த மனப்பான்மை உடையவள் என்பது பொருள். ஒரு சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரரையும், நாகமஹாஷயரையும் பார்த்துப் பகர்ந்ததாவது: "நீங்கள் இருவரும் உரையாடுங்கள். நான் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்." நாகமஹாஷயர் பரம பக்தராவார். பக்தமானசஹம்ஸிகா என்பதற்கு நாகமஹாஷயர் சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். முனிமானசஹம்ஸிகா என்பதற்கு நரேந்திரர் சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். நாகமஹாஷயர் பகர்ந்ததாவது: "ஈசுவர கிருபையினால் யாவும் நிகழ்கின்றன. அவருடைய கிருபை இல்லாது ஒன்றும் நிகழாது." நரேந்திரர் பகர்ந்ததாவது: "உலகில் என்னென்ன நிகழ்ச்சிகளை நான் காண்கின்றேனோ அவற்றிற்கெல்லாம் என்மனதே காரணமாகும்." "நரேந்திரர் சிறந்த அறிவாளி. அவர் எப்பொழுதும் சிறந்த விஷயங்களைத்தான் பேசுவார். ஆனால் அவர் இப்பொழுது கூறிய கருத்தை மட்டும் நான் ஒப்புக்கொள்ள முடியாது" என்று நாகமஹாஷயர் கூறினர். விழித்திருக்கும் வேளையில் இறைவன் அருள்வேண்டுமென்று வழிபடுகிறீர்கள். மனம் ஒடுங்கி இருக்கும் பொழுது அத்தகைய பிரார்த்தனை செய்கின்றீர்களா? விழித்திருக்கும் பொழுதே மனதை ஒதுக்கித் தள்ளமுடியும். மனம்போன இடத்தில் உலக வியவகாரம் எல்லாம் போய்விடுகின்றன என்று நரேந்திரர் பகர்ந்தார். மனதைக் கொண்டு என்னென்ன செய்யலாம் என்பதைத் தாயுமானவர் படம்பிடித்துக் காட்டுகின்றார். "கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்" என்கிறார் தாயுமானவர். மதம்பிடித்து இருக்கிற காட்டு யானையையும் வசீகரப்படுத்தி ஆணையிட்டால் அவ்வாணைக்கு அது அடங்கி நடக்கின்றது. "கரடிவெம்புலி வாயையும் கட்டலாம். ஒரு சிங்க முதுகின்மேல் கொள்ளலாம்" என்று தாயுமானவர் கூறியதைக் குமரகுருபர சுவாமிகள் செய்து காட்டினர். "கட்செவி எடுத்தாட்டலாம்" என்று தாயுமானவர் கூறியதைப் பாம்பாட்டி செயல்படுத்துகின்றான். "வெந்தழலில் ரசம்வைத்து ஐந்துலோகத்தையும்வேதித்து விற்றுண்ணலாம்" என்ற கருத்துக்கு ஏற்ப சிலர் புடம் போட்டுக் கீழான இரும்பு, தாமிரம் போன்ற உலோகங்களைத் தங்கமாக மாற்றிப் பொருள் சம்பாதிக்கின்றார்கள். "வேறொருவர் காணமல் உலகத்து உலாவலாம்" என்ற தாயுமானவர் கருத்து சரீரத்தைப்பிறர் கண்ணுக்குப் புலப்படாத சூக்ஷ்ம நிலைக்கு எடுத்துச் செல்லலாம் என்பதைக் குறிக்கிறது. "விண்ணவரை ஏவல்கொள்ளலாம்" என்ற தாயுமானவர் கருத்தை அசுரர்கள் தேவர்களை அடக்கி ஆண்ட புராண வரலாறு விளக்குகிறது. "மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்" என்ற தாயுமானவர் கருத்து பரகாய பிரவேசத்தைக் குறிக்கிறது. "தன்னிகரில் சித்திபெறலாம்"என்ற தாயுமானவர் கருத்து அணிமா, மகிமா, லகிமா, கரிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈசித்துவம், வசித்துவம் என்னும் அஷ்டசித்திகளைப் பெறலாம் என்பதைக் குறிக்கிறது. கூத்தாடும் மனதைக் கொண்டு இத்தகைய செயல்களை எல்லாம் செய்து முடிக்கலாம். ஆனாலும் கூத்தாடுகின்ற மனதை அடக்கிச் சும்மா இருக்கின்ற நிலையைப் பெறுவதுதான் அரிதானது என்பதைத் தாயுமானவர் "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது" என்று கூறுகிறார். இக்கோட்பாட்டுக்கு இணங்க நரேந்திரர் உரையாடினர்.

''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்ற கோட்பாட்டுக்கு இணங்க நாகமஹாஷயர் உரையாடினர். இவ்விரண்டு பேர்களுடைய உரையாடல்களையும் கேட்டுப் பரமஹம்சர் முடிவு சொன்னதாவது: ''நீங்கள் இருவர் பேசியதும் சரிதான். ஒரு மெல்லிய ஊசியை வடக்கயிறுகொண்டு கட்டமுடியாது. கட்டிலிருந்து அது நழுவிவிடும். நாகமஹாஷயர் மனது அந்த ஊசிபோன்றது ஆகும். மாயை அவர் மனதைக் கட்டமுடியாது. பகவத் பக்தியிலே அவர் தம் மனதை அப்படி ஒடுக்கி வைத்திருந்தார். வடக்கயிறுகொண்டு இமயமலையைக் கட்ட முடியாது. ஏனென்றால் அது கட்டில் அடங்காதது. நரேந்திரருடைய மனது அகண்டாகாரத்தில் விரிந்து போனது ஆகும். மாயைக்கு அந்த மனம் வசப்படுவது இல்லை.'' மனம் என்னும் தடாகத்தில் ஓர் அலை உண்டாவதாக வைத்துக்கொள்வோம். அவ் அலையை ஒதுக்கிக் கொண்டே வந்தால் கடைசியில் அது இல்லாது போய்விடும். அதற்கு மாறாக அதைப் பெரிதாகச் செய்துகொண்டே வந்து தடாகத்தின் அளவு பெரியதாக்கிவிட்டால் அப்பொழுதும் அந்த அலை இல்லாது போய்விடுகிறது. நாகமஹாஷயர் பக்தியின் மூலமாகச் சித்த விருத்தியை ஒடுக்கி அதை நாசம் செய்தார். நரேந்திரன் ஞானத்தின் மூலமாகச் சித்த விருத்தியை அகண்டாகார விருத்தியாக்கி அதை நாசம் செய்தார். முடிவில் இருவரும் மனதை நாசம் பண்ணினர்கள். மனதை நாசம் செய்வது குறிக்கோள். எந்த வழியை வேண்டுமென்றாலும் பின்பற்றி அதை நாசம் செய்யலாம். பக்தி மார்க்கத்தைப் பின்பற்றி நாகமஹாஷயர் அதை நாசம் செய்தார். ஞான மார்க்கத்தைப் பின்பற்றி நரேந்திரர் அதை நாசம்செய்தார்.

பக்திமார்க்கத்தில் செல்கின்றவர்களுக்கு எல்லாம் ஈசன் செயல் என்று தென்படுகின்றன. உலக சம்பந்தமான இன்பதுன்பங்களில் அவர்கள் கருத்து வைப்பது இல்லை. எல்லாம் ராமன் செயல் என்ற நினைவில் ஊறி இருந்த நெசவுக்காரன் ஒருவன் இருந்தான். அவன் தனக்கு வந்த இன்ப துன்பங்களை எல்லாம் ராமனிடத்திலேயே ஒப்படைத்து விட்டுச் சதா ராம சிந்தனையிலேயே மூழ்கி இருந்தான். ராம் ராம் என்று சொல்லிக்கொண்டே அவன் நெசவு நெய்தான்; நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து வந்தான். துணி விலை கூறும் பொழுது ''ராமனுடைய இச்சையினால் நூல் விலை ஒரு ரூபாய் ஆகிறது. ராமனுடைய இச்சையினால் நெய்தல் கூலி நான்கு அணு ஆகிறது. ராமனுடைய இச்சையினால் லாபம் இரண்டு அணு ஆகிறது. ராமனுடைய இச்சையினால் இத்துணிக் கிரயம் எல்லாம் சேர்ந்து ஒரு ரூபாய் ஆறு அணு ஆகிறது'' என்று கூறுவான். அவன் சொன்ன விலையைக் கொடுத்துத் துணியை வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள். இந்த ராம பக்தன் தன் வீட்டின் எதிரில் இருந்த கணபதி கோயில் மேடையில் உட்கார்ந்து நள்ளிரவில் தியானம் பண்ணிக்கொண்டிருந்தான். திருடர்கள் தாங்கள் திருடிய பொருள்களை எல்லாம் மூட்டையாகக் கட்டிச் சுமந்துகொண்டு அவ்வழியே வந்தார்கள். ராமபக்தனைக் கண்டதும் அவனுக்கு இரண்டு அடி கொடுத்து இழுத்து வந்து அவன் தலையில் மூட்டையை வைத்துத் தங்களோடு அழைத்துக் கொண்டுபோனர்கள். கொஞ்சதூரம் போவதற்குள்ளாக அவர்களைத் தொடர்ந்து போலீஸ்காரர்கள் வந்தார்கள். ராமபக்தனை மூட்டையோடு விட்டு விட்டுத் திருடர்கள் ஓடிவிட்டார்கள். போலீஸ்காரர்கள் ராமபக்தனைப் பிடித்துக்கொண்டு போய்க் காவலில் வைத்தார்கள். அடுத்தநாள் ராம பக்தனை நியாயாதிபதியின்முன் நேரில்கொண்டு போய் நிறுத்தினர்கள். நியாயாதிபதி என்ன நிகழ்ந்தது என்று ராமபக்தனை விசாரித்தார். ராமபக்தன் பகர்ந்ததாவது: ''ராமன் இச்சையினால் நள்ளிரவில் நான் தியானம் பண்ணிக் கொண்டிருந்தேன். ராமன் இச்சையினால் திருடர்கள் தாங்கள் திருடிய பொருளை மூட்டையாகக் கட்டிக்கொண்டு அவ்வழியே வந்தார்கள். ராமன் இச்சையினால் எனக்கு இரண்டு அடிகொடுத்துத் திருடிய பொருள்களை எல்லாம் என் தலைமீது வைத்து என்னை அழைத்துக்கொண்டு போனர்கள். ராமன் இச்சையினால் போலீஸ்காரர்கள் வந்தார்கள். ராமன் இச்சையினால் திருடர்கள் ஓடிப்போய் விட்டார்கள். ராமன் இச்சையினால் என்னைக் காவலில் வைத்தார்கள். ராமன் இச்சையினால் இங்கே கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறர்

கள். ராமன் இச்சையினுல் நிகழ்ந்தவைஎல்லாம் சொல்லி விட்டேன்." அவன் குற்றவாளியாக இருக்க முடியாது என்று நீதிபதி தீர்ப் பளித்து அவனை விடுதலை செய்தார். நிகழ்ந் தவை எல்லாம் நெசவுக்காரன் ராமன் இச்சை யாகக் கருதினன். எதையும் அவன் துன்பமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அஃதே போன்று இரண்யகசிபு செய்தவற்றை எல்லாம் பிரகலா தன் துன்பமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனல் நம் காட்சியில் அவை துன்பங்களாகத் தென் படுகின்றன. பக்தர்களுக்கு அவை துன்பங் களாகத் தென்படுவது இல்லை. அப்பருக்குப் பெரிய கஷ்டம் வந்த பொழுதும் இன்பமே எந் நாளும் துன்பமில்லை என்று கூறினர். பண் படாத மனம் படைத்தவர்கள் துன்பத்துக்கு ஆளாகின்றார்கள். பண்பட்ட மனம் படைத்த வர்களுக்கு எத்தகைய பிரதிகூலமான சூழ்நிலை யும் துன்பமாகத் தென்படுவது இல்லை. பக்தர் களுக்குத் திரிகரணங்களும் சிவத்தைப்பற்றியே ஞாபகம் ஊட்டுகின்றன. பக்தர்களுடைய உடல் கடவுள் சேவையில் ஈடுபடுகிறது. அவர் களுடைய வாக்குக் கடவுளைப் பற்றிய மகிமை களைப் பாடுகிறது அல்லது கடவுளுடைய நாமத்தை ஜபிக்கிறது. அவர்களுடைய மனம் பகவத் சிந்தனையில் ஈடுபட்டு இருக்கிறது. இங்ஙனம் அவர்களுடைய முக்கரணங்களும் பகவத் விஷயத்திலேயே ஈடுபடுகின்றன.

சிவனர் தம் கையில் மான் ஒன்றை தம் முக விலாசத்தையே பார்த்திருக்கும் வண்ணம் வைத்திருக்கிறர். மனம் யாண்டும் தெய்வத் தையே நோக்கிச் சென்று கொண்டிருக்க வேண்டும் என்பது அம்மான் புகட்டும் பாடம் ஆகும். காயத்தால் கடவுள் கைங்கரியம் பண்ணுவது மனதை ஒடுக்குவதற்கு ஓர் உபாய மாகும். உடலைவிட மேலானது வாக்கு ஆகும். வாயினுல் இறைவனுடைய மகிமைகளைப் பேசு வதும், பாடுவதும், இறைவன் நாமத்தை ஜபம் பண்ணுவதும் வாக்கால் செய்கின்ற இறைத் தொண்டாகும். வாக்கைவிட மேலானது மனம் ஆகும். மனம் பகவத் விஷயங்களிலேயே சென்று கொண்டிருப்பது மனத்தால் செய் கின்ற இறைத் தொண்டாகும். இங்ஙனம் காயத்தையும், வாக்கையும், மனத்தையும் இறைத்தொண்டில் ஈடுபடுத்தினுல் முக்கரணங் களும் தூய்மையாக்கப்படுகின்றன.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது கோட்பாடு. உடல் அமைப்பைப் புறத்தில் ஆலயமாக அமைத்திருக்கின்றுர்கள். ஆலய வழிபாட்டில் கிரியைகள் இடம் பெற்றிருக்கின் றன. கிரியைகளின் மூலம் தத்துவங்கள் விளக் கப்படுகின்றன. கிரியைகளின் மூலம் விளக்கப் படும் தத்துவங்களை அறிந்துவழிபாடுசெய்தால் திரிகரணங்களும் தூய்மை ஆக்கப்படுகின்றன. தத்துவத்தை அறிந்துகொள்ளாது வெறும் கிரி யைகளை மட்டும் செய்வது மனப் பண்பாட்டை வளர்க்காது. பெரும்பாலான மக்கள் கிரியை களில் மட்டும்கருத்துச் செலுத்தி வருகிறுர்கள். கிரியைகளைஅவர்கள் எத்தனை ஆண்டுகளுக்குச் செய்துவந்தாலும் அவர்களுடைய மனது பண் பாடு அடைவது இல்லை. அவர்கள் ஏராளமான பொருள் செலவு செய்வதில் வழிபாடு அமைந் திருக்கிறது என்று எண்ணுகிறுர்கள். கிரியை களைப் பெருக்குவதில் பாஹிய பூஜை அமைந் திருக்கிறது என்று எண்ணுகிறுர்கள். தத்து வங்களை மறந்து செய்கின்ற பூஜையில் பொருள் விரயமும், கால விரயமும் ஏற்படுகின்றன. தத்துவத்தை அறிந்து செய்கின்ற பாஹிய பூஜை மானசீக பூஜைக்குப் புறச் செயலாக அமைகிறது. பாஹிய பூஜை ஆரம்ப பக்தர் களுக்கு அவசியமாகின்றது. ஆனல் அது சிறந்த மனேபாவனையுடன் செய்யப்பட வேண் டும். பாஹிய பூஜையில் நிகழ்கின்ற புறக் கிரியைகள் முக்கியமானவை அல்ல. எத்தகைய மனேபாவனையுடன் பாஹிய பூஜை நிகழ்கிறது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய விஷய மாகும். உயர்ந்த மனேபாவனையுடன் செய் யப்படும் பாஹிய பூஜை போற்றுதற்குரியதா கிறது. மனேபாவனை இல்லாத பாஹிய பூஜை வெறும் சடங்காகும். அத்தகைய பூஜை யின் மூலம் மனதில் பக்தி உண்டாவது இல்லை. உடலில் உள்ள அழுக்கைப் போக்குதற்கு ஸ்நானம் செய்கின்றேம். மனதில் உள்ள அழுக்கைப் போக்குதற்கு வழிபாடு செய்தாக வேண்டும். மன அழுக்கைத்துடைக்கும் வழி பாடு சிறந்த வழிபாடு ஆகும். வெறும் பகட்டுக் காகவும் ஆடம்பரத்துக்காகவும் செய்யும் வழி பாடுமனதில் ஆணவ அகங்காரத்தை வளர்க் கிறது. (தொடரும்)

# தீபாவளிப் பண்டிகை

தீபாவளிப் பண்டிகையை நாடு முழுவதும் சிறியவர்களும் பெரியவர்களும் சேர்ந்து மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுகிறார்கள். உணவுப் பொருள்களிலும், துணிவகைகளிலும், வெடி மருந்துகளிலும் ஏராளமான பணம் அன்று செலவழிக்கப்படுகிறது. கஷ்டப்பட்டுப் பாடுபட்ட உழைப்பாளி ஒரு நாளில் தன் உழைப்பின் பெரும்பகுதி பணத்தைச் செலவழித்துச் சுகமடைய விரும்புகின்றான்.

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதம் அமாவாசையன்று தீபாவளி வருகின்றது. தீபாவளி என்றால் தீப அலங்காரம் என்று பொருள். லட்சுமிக்கும் மகாவிஷ்ணுவிற்கும் மணவிழாக் கொண்டாடுவதைத் தீபாவளியாகச் சிலர் கருதுகின்றனர். ராவணனைச் சம்ஹாரம்செய்து விட்டு ராமன் அயோத்திக்குத் திரும்பி வந்த நாளின்ஞாபகார்த்தமாகத் தீபாவளி கொண்டாடப்படுகிறது என்று சிலர் கருதுகின்றனர். கிருஷ்ணன் நரகாசுரன் என்னும் அரக்கனைக் கொன்ற நாள் தீபாவளியாகக் கொண்டாடப் படுகின்றது என்று சிலர் கருதுகின்றனர். இங்ஙனம் தீபாவளி கொண்டாடுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

வங்காளத்தில் தீபாவளி அன்று காளி வழிபாடு சிறப்பாகச் செய்யப்படுகிறது. வடஇந்தியாவில் வியாபாரிகள் தீபாவளியன்று தான் புதுக்கணக்கு ஆரம்பிக்கின்றார்கள். நடைமுறை ஆண்டில் செல்வமும், வெற்றியும் வந்து அமையவேண்டுமென்று அன்று அவ்வியாபாரிகள் பிரார்த்தித்துக் கொள்கின்றார்கள். அன்று இந்துக்கள் தங்களுடைய வீடுகளை எல்லாம் துப்புரவு செய்து வெள்ளை அடிக்கின்றார்கள். இரவு நேரத்தில் மண் விளக்குகளைக் கொண்டு தீபம் ஏற்றி வீடுகளைத் தீப அலங்காரம் செய்கின்றார்கள். பம்பாயிலும், அமிர்தசரசிலும் அன்று விமரிசையான தீப அலங்காரங்களைக் காணலாம். வைஷ்ணவர்கள் அன்று கோவர்த்தன பூஜையை விமரிசையாகச்செய்கின்றார்கள். அன்று அவர்கள் ஏராளமான மக்களுக்குஅன்ன தானமும் செய்கிறார்கள். அமிர்தசரசில் உள்ள புகழ்பெற்ற தங்கக்கோயிலின் கோபுரத்தில் ஆயிரக்கணக்கான விளக்குகளைக் காணலாம்.

ஒவ்வொரு குடும்பமும் அன்று இன்புற்றிருக்கவே விரும்புகின்றது. உடலை அலங்கரித்து உல்லாசமாக நடைபோடுவதில் அன்று ஒரு சிலர் மகிழ்ச்சி அடைகின்றனர். விதவிதமான பக்ஷணங்களை ருசித்துப் புசிப்பதில் ஒரு சிலர் மகிழ்ச்சி அடைகின்றனர். புதிதாக மணமான தம்பதிகள் புது நீராடி, புது ஆடை அணிந்து குதூகலமாக உரையாடுவதில் மகிழ்ச்சி அடைகின்றனர். வெடி வெடிப்பதிலும் வெடிப்பதைப் பார்ப்பதிலும் ஒரு சிலர் மகிழ்ச்சி அடைகின்றனர்.. வேண்டியவாறு குடித்துக் கும்மாளம் போடுவதில் ஒரு சிலர் மகிழ்ச்சி அடைகின்றனர். சிற்றியல்புகளைத் தூண்டிவிடும் காட்சிகளைப் பார்ப்பதிலும், பேச்சுக்களைக் கேட்பதிலும் ஒரு சிலர் களிப்படைகின்றனர். சிலர் தூங்கிக் களிப்படைகின்றனர். மக்கள் அன்றைக்குக் கொள்ளும் மகிழ்ச்சி அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்துகிறதா? என்பது தான் கேள்வி. காசைக் கொடுத்துக் கருமத்தை வாங்குதல் என்ற ஒரு பழமொழி உண்டு. தீபாவளியன்று ஏராளமான பொருள்களைச் செலவழித்துத் தங்களுடைய மனதைக் கீழ்மைப்படுத்துகிற செயலில் ஈடுபடுத்துவதுதான் கைகண்ட பலனாக இருக்கிறது. இதுவரையிலும் தீபாவளியன்று மக்கள் செய்து வரும் செயல்களையும் அவற்றினால் அவர்களுக்கு விளையும் பலன்களையும் கூறினோம். விஞ்ஞான வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் அடைந்து வரும் இந்நாளில் தீபாவளியைக் கொண்டாடும் விதத்தை நாம் ஆராய்வது அவசியமாகிறது. தீபாவளியைக் கொண்டாடுவதன் வாயிலாக நமக்கு மனத்தெளிவும், தூயபக்தியும் உண்டாக வேண்டும். அத்தகைய பலன் நமக்கு ஏற்படுவதற்குத் தத்துவரீதியில் தீபாவளிப் பண்டிகையைக்கொண்டாட முயலவேண்டும்.

ராமன் ராவணனைக் கொன்றதையும், கிருஷ்ணன் நரகாசுரனைக்கொன்றதையும் அடிப்படையாகக்கொண்டு தீபாவளி கொண்டாடப்படுகிறது என்று கூறினோம். ராமனும், கிருஷ்ணனும் அரக்கர்களைக் கொன்றது போன்று நாம் ஒவ்வொருவரும் நம்மிடத்தில் உள்ள அகங்காரம் என்னும் அரக்கனைக் கொன்றாகவேண்டும்.

நம்மிடத்தில் உள்ள அகங்காரம் என்னும் அரக்கனை ஆத்ம ஞானம் என்னும் வாளால் வெட்டி வீழ்த்த வேண்டும். ராமன், கிருஷ்ணன் என்னும் ஆத்மீக ஜோதியில் நம் உள்ளம் ஒன்றுபட வேண்டும். அகங்காரம் என்னும் அரக்கனைக் கொன்று உள்ளத்தில் ஆத்மீக ஒளியை உண்டு பண்ணி ஆனந்தப்படுவதுதான் தீபாவளிப் பண்டிகையாகும்.

ஹிருதய கமலத்தில் சுயம்பிரகாசமுடைய ஆத்மஜோதி யாண்டும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஒளிக்கெல்லாம் அது ஒளியாக இருக்கிறது. பற்றற்றுக் கருமம் செய்து உள்ளத்தைத் தூயதாக்கி அமைதியாக அமர்ந்து கண்களைமூடி அந்த ஜோதியைத் தியானம் செய்ய வேண்டும். புலன்களின் வழியாகப் புறவுலகத்திற்குச் சென்று கொண்டிருக்கும் மனதை உள்ளே இழுத்து ஆத்மஜோதியின்பால் செலுத்துதல்வேண்டும். ஆத்மஜோதியில் மனம் ஒன்றுபடும்போது உண்டாகும் ஆனந்தத்தை அனுபவிப்பதுதான் உண்மையான தீபாவளியாகும். யார் ஒருவர் இத்தகைய ஆனந்தத்தைத் தீபாவளியன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறாரோ அவர்தான் உண்மையான தீபாவளியைக் கொண்டாடுபவர் ஆகிறார்.

எப்பொருள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறதோ, எப்பொருளை யாரும் பார்க்க முடியாதோ, எப்பொருள் அறிவு, சூரியன், சந்திரன், நட்சத்திரம், பிரபஞ்சம் ஆகிய யாவற்றிற்கும் ஒளி தந்துகொண்டிருக்கிறதோ அப்பொருள் மெய்ப்பொருள் ஆகிறது. அம்மெய்ப்பொருளினிடத்து மனதைச் செலுத்தி நித்திய ஆனந்தத்தை அனுபவிப்பதுதான் தீபாவளியைக் கொண்டாடுவதாகும்.

எப்பொருளைச் சூரிய, சந்திர, நட்சத்திர ஒளிகள் சென்று அடைய முடியாதோ அப்பொருள் மெய்ப்பொருள். இவ்வுலகத்திலுள்ள வெளிச்சங்களெல்லாம் அம்மெய்ப்பொருளின் ஒரு கிரணத்திற்கு ஈடாகா. ஒளிக்கெல்லாம் ஒளியாக இருக்கின்ற அந்த ஆத்மீக ஒளியில் நீ கலந்து பேரானந்தத்தை அனுபவித்து உண்மையான தீபாவளியைக் கொண்டாடு.

ஆண்டுதோறும் தீபாவளி வந்து போய்க் கொண்டே இருக்கிறது. எத்தனையோ தீபாவளியை நாம் கொண்டாடியிருக்கிறோம். ஆனால் நம் உள்ளம் அமாவாசை இருள்போன்று இருள் சூழ்ந்துதான் கிடக்கிறது. தீபாவளியன்று விளக்கேற்றி வீட்டை வெளிச்சப்படுத்துகின்றோம். ஆனால் நம் உள்ளத்தில் அறியாமை என்னும் இருள் மூடிக்கிடக்கிறது. தீபாவளியன்று இரவு முழுவதும் வேடிக்கை வினோதங்கள்பார்க்க விழித்திருக்கும் மக்களே! நீங்கள் அறியாமை என்னும் தூக்கத்திலிருந்து எப்பொழுதுதான் விழிக்கப் போகின்றீர்கள்? தோன்றிமறையும் சுகத்திற்காகத் தீபாவளி கொண்டாடுகிறீர்கள். நிரந்தரமான பிரகாசத்தைத் தந்துகொண்டிருக்கும் ஆத்மப் பிரகாசத்தைக் கண்டு ஆனந்தமடையும் தீபாவளியை எப்பொழுது கொண்டாடப் போகிறீர்கள்? தியானத்தின் மூலமாகவும், விசாரத்தின் மூலமாகவும் அறியாமையை அகற்றி ஆத்மதியானம் செய்து ஆத்மீக ஒளியைப் பெறவேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் ஆனந்தம் பெற முடியும்.

நீங்கள் அனைவரும் உள்ளொளி பெறுவீர்களாக. நீங்கள் அனைவரும் ஆத்ம ஞானம் பெறுவீர்களாக. நீங்கள் அனைவரும் அருட்செல்வம் பெறுவீர்களாக. இவ்வுலக வாழ்விலும் ஆத்மீக வாழ்விலும் மகிமையோடு வாழ்ந்து பெருவாழ்வு பெறும் நாள், உங்களுக்கு விரைவில் வந்து வாய்ப்பதாகுக. அப்பொழுதுதான் நீங்கள் அறியாமை என்னும் அரக்கனை ஒழித்து ஞானம் என்னும் தீபம் ஏற்றிப் பேரானந்தம் என்பதை அனுபவித்து உண்மையான தீபாவளிகொண்டாடும் மக்கள் ஆவீர்கள். மக்கள் இத்தகைய தீபாவளியைக் கொண்டாடி யாண்டும் பேரின்ப வாழ்வு வாழ்வார்களாக.

ஆண்டுதோறும் வரும் தீபாவளியை எவ்விதம் கொண்டாடலாம் என்பதை இனி விளக்குவோம். தீபாவளியன்று நான்கு மணிக்குக் குடும்பத்தில் உள்ள அனைவரும் எழுந்திருக்க வேண்டும். அனைவரும் எண்ணெய் ஸ்நானம் செய்துகொண்டு புது ஆடைகளை அணிந்து கொள்ளவேண்டும். பூஜை அறையைச் சுத்தம் செய்து குத்துவிளக்கு ஏற்றிவைத்து மகிழ்ச்சியோடு பூஜை அறையில் யாவரும் 'அமரவேண்டும். அசுரர்களை ஒழித்த ராமனையும், கிருஷ்ணனையும் அவர்களுடைய நாமங்களைச் சொல்லி வழுத்த வேண்டும்.

ஹரே ராம! ஹரே ராம! ராமராம ஹரே ஹரே!
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே!

என்ற நாம ஜபத்தைப் பதினைந்து நிமிஷங்களுக்குக் குறையாமல் சொல்லவேண்டும். அப்படி ஜபம் பண்ணும்பொழுது ராவணனையும், நரகாசுரனையும் ஒழித்த நீங்கள் எங்கள் உள்ளத்தில் உள்ள அறியாமை என்னும் அரக்கனை ஒழித்து உள்ளத்தில் ஞான ஒளியை வளருங்கள் என்று நினைக்கவேண்டும். பிறகு இருதயத்தில் ஜோதி சொரூபமாக இறைவன் வீற்றிருக்கிறார் என்று எண்ணிப் பத்து நிமிடங்கள் அந்த ஜோதியைத் தியானம் பண்ணவேண்டும். புறத்தில் குத்துவிளக்கு ஒன்றை ஏற்றிவைத்துப் பாரதநாடு விழித்தெழ வேண்டுமென்று யாவரும் ஒன்றுகூடிப் பாரதநாட்டை வாழ்த்துகின்ற பாங்கில் குத்துவிளக்கைச் சுற்றிக் கும்மியடித்து மகிழலாம். கும்மிப் பாட்டாகப் பாரதியார் பாரதநாட்டை வாழ்த்திய

ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!
களிபடைத்த மொழியினாய் வா! வா! வா!
கடுமைகொண்ட தோளினாய் வா! வா! வா!
தெளிவுபெற்ற மதியினாய் வா! வா! வா!
சிறுமைகண்டு பொங்குவாய் வா! வா! வா!
எளிமைகண்டு இரங்குவாய் வா! வா! வா!
ஏறுபோல் நடையினாய் வா! வா! வா...
....................
....................
....................
வெற்றிகொண்ட கையினாய் வா! வா! வா!
விநயநின்ற நாவினாய் வா! வா! வா!
முற்றிநின்ற வடிவினாய் வா! வா! வா!
முழுமைசேர் முகத்தினாய் வா! வா! வா!
கற்றலொன்று பொய்க்கிலாய் வா! வா! வா!
கருதியது இயற்றுவாய் வா! வா! வா!
ஒற்றுமைக்குள் உய்யவே நாடெல்லாம்
ஒருபெரும் செயல் செய்வாய் வா! வா! வா!''

என்ற பாடலைப்பாடி ஆனந்தம் அடையலாம். அதன்பின் ஊரிலுள்ள ஆலயத்துக்குச் சென்று முறைப்படி ஆலய வழிபாட்டைச் செய்துவரலாம். தீபாவளிக்காக ஆயத்தப்படுத்திய பக்ஷணங்களை எல்லாம் இஷ்ட தெய்வத்துக்கு நைவேத்தியம் செய்து தெய்வத்தின் பிரசாதமாக உறவினர்களோடும், விருந்தினர்களோடும் சேர்ந்து மகிழ்வோடு அருந்தலாம். சிறுவர்கள் மகிழ்ச்சிக்காக வெடி வெடித்து மகிழலாம். அதற்காக அதிகப் பணம் செலவழிக்கக் கூடாது. ராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களையோ, நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றவர்கள் சரிதங்களையோ அனைவரும் சேர்ந்து அன்றைக்கு ஒரு மணிநேரம் அல்லது இரண்டு மணிநேரம் வாசிக்கலாம்.

மாலைப் பொழுதில் இயற்கை எழில் நிறைந்த இடங்களுக்குச் சென்று இயற்கையின் அழகைக் கண்டு ரசிக்கலாம். வெட்ட வெளியில் மனதைச் செலுத்தி இயற்கையின் பரந்த தன்மையை நினைத்து மனதை விரிவடையச் செய்யலாம். இரவு நேரத்தில் ஊரின் பொது இடத்தில் பக்திமான்களுடைய வரலாறுகளை நாடகமாகப் போட்டு நடத்லலாம். ராவணசம்ஹாரம், கம்சன் வதம், நரகாசுரன் அழிவு என்பன போன்ற நாடகங்களை அன்றைக்கு நடிப்பது பொருத்தமாகும். தீபாவளிநாளை இங்ஙனம் மனதைப்பண்படுத்துகின்ற முறையில் திட்டம் அமைத்துக் கொண்டாடினால் ஆன்மீக ஒளி பெறுவதற்கு அது துணையாக இருக்கும். அன்று நிகழ்ந்த நரகாசுரன் வதம் நம்மிடத்தில் இப்பொழுது நிகழ்ந்தால்தான் தீபாவளியை உண்மையில் கொண்டாடியதாகும். மோகம் என்னும் அரக்கனைக் கொன்று யோகநெறியில் இருக்கும் வாழ்க்கைத் திட்டம் தீபாவளியைச் சிறப்பாகக்கொண்டாடுவதாகும். பந்தத்தைப் போக்கிச் சிந்தையைத் தெளிவாக்கும் சீரிய வாழ்க்கைத் திட்டமே தீபாவளி அன்று கடைப்பிடிக்கவேண்டிய திட்டமாகும். தெய்வச் சிந்தனையில் உள்ளம் குளிர்ந்து உள்ளத்திலுள்ள கள்ளத்தைப் போக்கி வெள்ளை உள்ளமும் கருணை உள்ளமும் ஆக்குவதே தீபாவளியை வாழ்த்துவதாகும். எண்ணியதை முடிக்கத் திண்ணிய நெஞ்சம் பெறவேண்டும். பண்ணிய பாபமெல்லாம் போக நல்லதையே எண்ணவேண்டும். தெள்ளிய நல்லறிவு பெற்று அன்னையை நண்ணி அறியாமை என்னும் அரக்கனை ஒழித்து உள்ளத்தில் ஞானமென்னும் தீபத்தை ஏற்றித் தீபாவளியைக் கொண்டாடுங்கள். நீங்கள் நலமடைய உலகம் நலமடைய தீயனவெல்லாம் ஒழியத் தீபாவளி கொண்டாடுவீர்களாக.

# சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

( வித்துவான். ஆதி. பாலசுந்தரன் M. A. )

அறிவுரை சொல்ல வந்த புலவர், அவர் காலத்தில் கூறப்பட்டு வந்த சமயக் கோட்பாட்டை நினைவில் கொண்டு, சுவர்க்கத்தையும், நரகத்தையும் நினைத்துப் பார்த்து, நல்ல காரியம் செய்தால் சுவர்க்கலோகத்தில் இருந்து புஷ்பக விமானம் வரும்; அதில் ஏறிச் சென்று சொர்க்கலோகம் அடையலாம் என்கிறார். இது புராணக் கருத்தைத் தழுவிய சிந்தனை.

சுவர்க்கமோ நரகமோ இல்லை. இருக்கிற உலகில் நல்லன செய்து நலத்துடன் வாழ்ந்தால் அதுவே சுவர்க்க வாழ்வு. தீயவை செய்து துன்பப்பட்டால், அதுவே நரக வேதனை தரும் நரக வாழ்வு என்ற தத்துவச் சிந்தனையும் உண்டு.

ஐந்துதலைப் பாம்பைப் பற்றிய செய்திகள் புராணங்களில் சொல்லப்படுகின்றன. வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கொண்டு, மந்த்ர மலையை மத்தாக ஆக்கி, திருமால் கூர்மாவதாரம் எடுத்துத் தமது முதுகில் மத்தைத் தாங்கிக்கொள்ளத் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள் என்று புராணச் செய்தி கூறுகிறது.

காளிந்தி என்பது ஆழமான குளம். காளிங்கன் என்னும் பெயருடைய ஐந்துதலைப் பாம்பு ஒன்று அக்குளத்தில் வசித்து வந்தது. கொடிய நஞ்சு உடையது அது. நஞ்சின் வேகம் காரணமாக அக்குளக்கரை அருகில் இருந்த மரம் செடி கொடி முதலான தாவர இனங்கள் அழிந்துபோயின. குளத்தின் மேலே பறந்து செல்லும் பறவைகள் நஞ்சு வேகம்பட்டு இறந்து விழும். கொடிய விடம்கொண்ட இவ் ஐந்துதலை நாகத்தின் செருக்கை அடக்கி, அதன் தலைமேல் நடனம் ஆடியவன் கண்ணபிரான். "பாம்புத் தலைமேலே நடம் இடும் பாதத்தினைப் புகழ்வோம்" என்கிறார் பாரதியார். இதுவும் ஒரு புராணக் கதை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் சோழ மன்னருள் ஒருவன். அவ் அரசனை மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் பெருந்தகை புகழ்ந்து பாடுகிறார். அப்போது,

> " நஞ்சுஉடை வால் எயிற்று ஐந்தலை சுமந்த
> வேக வெம்திறல் நாகம் புக்கென"
>
> [புறநானூறு - 37]

கூர்மையான வெள்ளை நிறம் பொருந்திய நச்சுப் பற்களை உடைய ஐந்துதலை நாகம் தீண்டினால் உடம்பு எவ்வாறு நீலநிறம் ஆகுமோ அதுபோல, மேகம் கருமை நிறம் அடைந்து இடிமுழக்கம் செய்தது. அந்த இடி முழக்கம் போல் சோழமன்னனின் படைகள் முழங்கிக் கொண்டு போர்க்களம் செல்லும் எனக் குறிப்பிடுகின்றார். புராணத்தில் வருகின்ற ஐந்து தலை நாகம் இப் புறநானூற்றுப் பாடலில் சொல்லப்படுகிறது.

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் சங்க காலத்தில் வாழ்ந்தவர். மூலநட்சத்திரத்தில் பிறந்தவர். அவர் பாடிய பாடல்களில் ஒன்று புற நானூற்றுப் பாடல் [ 38 ]. அப்பாடலில்,

> "பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
> செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
> உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
> கடவது அன்மையின் கையறவு உடைத்துஎன
> ஆண்டுச்செய் நுகர்ச்சி ஈண்டும் கூடலின் "

—கற்பக விருட்சம் கொண்ட தேவலோகத்தில் வாழும் புண்ணியம் பெற்றவர்கள், தாங்கள் செய்த நல்வினைவசத்தால் இன்பமே நுகர்வார்கள். அவ்வாறு இல்லாமல், செல்வம் உடையவர்கள் ஏழை மக்களுக்குக் கொடுத்து உதவி செய்தல், ஏழை மக்கள் செல்வர்கள் இடத்திலே போய்க் கேட்டுப் பெறுதல் ஆகிய இரண்டு செயல்களும் தேவலோகத்தில் நடைபெறமாட்டா. அப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டியதில்லை; அது பயன் உள்ள வாழ்க்கை ஆகாது. இந்த இரண்டு செயல்களையும் செய்து கொண்டே, தேவலோக இன்பத்தையும் இப் பூமியில் அனுபவிக்கலாம் என்கிறார்.

புண்ணியம் செய்தவர்கள் தேவலோகம் சென்று இன்ப வாழ்வு வாழ்வார்கள். தேவலோகத்தில் கற்பகச் சோலை உண்டு என்று சொல்லப்படுகின்ற புராணச் செய்திகள் இங்கே சொல்லப்படுகின்றன.

தேவேந்திரனுடைய தலைநகரத்தில் இருக்கும்

மரம் கற்பக விருட்சம். கற்பக மரத்தின் அருகில் சென்றால் நினைத்ததெல்லாம் நடக்கும் என்பது புராணச் செய்தி.

தேவலோகத் தலைநகரம் அமராவதி. அமராவதிக்குப் போனால் வேண்டியன கிடைக்கும். தேவலோகத்தில் பெண்வடிவ முகமும், பசு உடலும் கொண்ட காமதேனு இருக்கிறது. காமதேனு அருகில் சென்றால் வேண்டியதெல்லாம் கிடைக்கும். தேவலோகத்தில் உள்ள அற்புதமான மாணிக்கக்கல் சிந்தாமணி. அக்கல் கையில் இருந்தால் வேண்டியன கிடைக்கும்.

இவற்றை வைத்தே அமராவதி, காமதேனு, சிந்தாமணி என்றெல்லாம் சூப்பர் மார்க்கட்டுகளுக்குப் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏழை எளியவர்கள் இருக்கக்கூடாது; பணக்காரர்கள் கூடாது. செல்வநிலையில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் எல்லாரும் சரி சமமாக வாழவேண்டும் என்பது பொதுவுடைமைக் கொள்கை.

இத்தகைய பொதுவுடைமைக் கொள்கையை அப்புலவர் ஆராய்ந்துபார்த்தார்; இக்கொள்கை அவருக்கு ஏற்புடையதாகப் படவில்லை. வழங்குவதும், வாங்குவதும் இல்லாத வாழ்க்கை சுவைக்காது என்ற மனநிலை உடையவர் அவர். இரப்பார் இல்லாத இந்த உலகம், மரப்பாவை இயங்கக்கூடிய உயிர் அற்ற உலகம் ஆகும் என்கிறார் வள்ளுவர்.

சங்க காலத்தில் சொர்க்கம், நரகம், புண்ணியம், பாவம் என்பனவற்றைப்பற்றிய சிந்தனைகள் இருந்தன. தேவருலகம்பற்றிய செய்திகளையும் சங்க கால மக்கள் அறிந்திருந்தனர். இக் கருத்துக்கள் ஆவூர் மூலங்கிழாரின் சிந்தனையையும் ஈர்த்தன. எனவே, தம்முடைய பாடலில் குறிப்பிடுகின்றார்.

"ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து
வாழ்வாரே வன்க ணவர்" என்ற குறளும் இங்கே கருதத் தசகது.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் பாண்டிய மன்னருள் ஒருவன். இவ்வரசனை மதுரை மருதன் இளநாகனார் என்ற புலவர் பாடுகின்றார். சிவபிரானுக்கு மூன்றாவது கண்ணாகத் திகழும் நெற்றிக்கண்ணைப் போல, முடியுடை மூவேந்தருள்ளும் நீ முதன்மை பெற்றுத் திகழ்கிறாய் என்கிறார். இதனை அவர் சொல்லும் விதம்: "ஓங்குமலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ, ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றிப், பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த, கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப், பிறைநுதல் விளங்கும் ஒரு கண் போல, வேந்துமேம் பட்ட பூந்தார்மாற" [புறநானூறு -55]—உயர்ந்த மலையாகிய மேரு மலையை வில்லாகக்கொண்டு, வாசுகி என்ற பாம்பை நாணாக ஏற்றி, திருமால், வாயு, அக்கினி என்னும் மூவரின் அம்சமாக விளங்கிய பாணத்தைப் பூட்டி, தேவர்களுக்கும், மக்களுக்கும் துன்பம் கொடுத்து வந்த அரக்கர்களின் பறக்கும் கோட்டைகளாகிய திரிபுரங்களை எரித்தவர் சிவபெருமான். அக்கோட்டைகளை எரித்து, தேவர்களுக்கு வெற்றி தேடித்தந்த நீலகண்டனாகிய சிவனின் நெற்றியில் இலங்கும் நெற்றிக்கண்ணைப்போல, மூவேந்தர்களிலும் நீ முதன்மை பெற்று விளங்குகிறாய் — என்கிறார்.

ஒருகாலத்தில் அசுரர்கள் பறக்கும் மூன்று கோட்டைகளை அமைத்துத் தேவர்களுக்கும், மக்களுக்கும் தொல்லை கொடுத்து வந்தனர். தேவர்கள், மக்கள் வாழும் இடங்களில் பறக்கும் கோட்டைகளைக்கொண்டு இறக்கிக் கூண்டோடு அழித்து வந்தனர். தேவர்களின் முறையீட்டை ஏற்றுக்கொண்ட சிவன் முப்புரங்களைச் சம்ஹாரம் செய்தார். இப் புராணச் செய்தியைப் புலவர் புறநானூற்றிலே குறிப்பிடுகின்றார்.

நக்கீரர் என்னும் புலவர் பெருமகனார் பாண்டியன் நன்மாறனைப் புகழ்ந்து பாடும்போது, ஆலம் உண்ட நீலகண்டனாகிய சிவபெருமானைப் பற்றியும், சங்கு போன்ற வெள்ளை நிறம் உடையவனும், கலப்பை என்னும் ஆயுதத்தையும் பனைக்கொடியையும் உடைய பலராமனைப் பற்றியும், நீலமணி நிறம் உடைய திருமாலைப் பற்றியும், மயிலை ஊர்தியாக உடைய முருகவேளைப்பற்றியும் குறிப்பிடுகின்றார்.

சிவபெருமான் கணிச்சி என்னும் மழு ஆயுதத்தைக் கையில் உடையவர்; திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை உண்டவர். பலராமன் வெள்ளை நிறம் உடையவன்; பனைக் கொடியை உடையவன். திருமால் கடல்போன்ற நீலநிறம் உடையவர்; கருடக்

கொடியை உடையவர். மயிற் கொடியை உடையவன் முருகன்; அம் மயிலேயே வாகன மாக உடையவன் முருகன். இவை யெல்லாம் புராணக் கதைகள்.

இத்தெய்வங்களுக்கு இணையானவன் பாண் டியன் நன்மாறன் எனப் புகழ்ந்து பாடுகிறார் நக்கீரர்.

தஞ்சை மாவட்டத்தில் முடிகொண்டான் ஆற்றங்கரையில் பூஞ்சாற்றூர் என்னும் ஓர் ஊர் இருக்கிறது. இவ்வூரில் பார்ப்பன குலத் தில் கௌண்டின்னிய கோத்திரத்தில் பிறந்த வன் விண்ணந்தாயன் என்னும் வள்ளல். இவ் வள்ளலை ஆவூர் மூலங்கிழார்என்னும் புலவர் பாடியுள்ளார்.

"நன்றுஆய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது
ஒன்றுபுரிந்த ஈர் இரண்டின்
ஆறு உணர்ந்த ஒரு முதுநூல்
இகல் கண்டோர் மிகல் சாய்மார்
மெய் அன்ன பொய் உணர்ந்து
பொய் ஓராது மெய் கொளீஇ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக!"

—[புறநானூற்று 166]

—நன்றாக ஆராயப்பட்ட நீண்ட சடையை உடைய முதிய இறைவன் சிவபெருமானுடைய வாக்கை விட்டு நீங்காமல், அறம் ஒன்றையே பிரதானமாக எடுத்துக்கூறும் இயல்பை உடை யது வேதம். அவ்வேதம் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு பிரிவுகளை உடை யது. வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தம், சிக்கை, கற்பகம் என்னும் ஆறு அங்கங் களை உடையது. இவ்வாறு வேதம் நான்கு பிரிவுகளையும், ஆறு அங்கங்களையும் உடை யது. வேதம் பழமையானது. பெரியவனை சிவபெருமானால் எப்போதும் அத்யயனம் செய் யப்படுவது. இவ்வேதத்திற்கு மாறுபட்ட, எதிரான நூல்களை உண்டாக்கியவர்கள் புத்த சமயத்தவர்கள். அவர்கள் மெய் போன்று கூறி யவை அனைத்தும் உண்மைக்கு மாறானவை. அவை உண்மையல்ல; பொய்ம்மையானவை என்பதை எடுத்துச் சொல்லியதுடன், இருபத் தொரு வேள்விகளையும் நிறைவேற்றியவன் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண் ணந்தாயன் என்பவன்.

இருபத்தொரு வேள்விகள்; ஸோமயக்ஞம் 7, ஹவிர்யக்ஞம் 7, பாய யக்ஞம் 7 ஆக இருபத் தொன்று. அக்கினிஷ்டோமம், அதியக்கினிஷ் டோமம், உக்தியம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் ஆக ஏழும் ஸோமயக்ஞங்கள்.

அக்னியாதேயம், அக்னிஹோத்ரம், தரிச பூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், நிருடபசுமந்தம், அக்ரயணம், ஸெத்ராமணி ஆக ஏழும் ஹவிர் யக்ஞங்கள்.

அஷ்டகை, ஆபார்வணம், சிராத்தம், சிரா வணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆச்வயுஜ் ஆக ஏழும் பாகயக்ஞங்கள்.

யாகம் செய்யும்போது யாகத் தலைவர்கள் உறுப்பு அடையாளங்கள் நீக்கப்படாத கலை மானின் தோலைப் போர்த்துக்கொள்ளுவார்கள். பூணூல் அணிந்துகொள்வார்கள். யாகம் செய் யும்போது பணிவிடை செய்வதற்குப் பத்தினி கள் மூவருக்குக் குறையாமல் இருக்கவேண்டும் என்பது விதி.

வேதங்கள் யாரால் இயற்றப்பட்டன? என் னும் கேள்விக்கு இதுவரை சரியான பதில் சொல்ல இயலவில்லை. வேதங்கள் பழமை யானவை. வேதங்கள் மனிதனால் ஆக்கப் பட்டவை அல்ல. எனவே அவற்றிற்கு "அபௌர்ஷேயம்" என்ற பெயரும் உண்டு. அதாவது புருஷனால் (மனிதனால்) செய்யப் படாதவை என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

கௌதம புத்தர் தமது காலத்தில் வேதங்களை எதிர்த்தே தமது கொள்கைகளை ஸ்தாபிக்கத் துவங்கினர். எனவே, கௌதம புத்தருக்கு முன்பே வேதங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பது உறுதி. கௌதம புத்தருடைய காலம் கி. மு. 6ஆம் நூற்றாண்டு என்பது அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட செய்தியாகும். கிறிஸ்து வுக்கு 6000 ஆண்டுகளுக்கு முன்பே வேதங் கள் உண்டாகிவிட்டன என்பது சிலர் கருத்து. 3500 ஆண்டுகளுக்கு முன்பே வேதங்கள் இயற்றப்பட்டுவிட்டன என்பது டாக்டர் ராதாகிருஷ்ணன் கருத்து.

மொழி வேறுபாடுகளாலும், மாநில வேறு பாடுகளாலும் இந்தியமக்கள் வேறுபட்டாலும், இந்தியா முழுவதற்குமான பொதுவான கலாச்

சாரம் உண்டு என்பது ஆன்றோர்கள் முடிவு செய்த ஒன்று. பாரதத்தின் வடபகுதியை, இமயமலையைப் பாராட்டிப் புகழ்கின்ற சங்கப் பாடல்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. தென் இந்திய மக்கள்—குறிப்பாகத் தமிழ் மக்கள் வட பாரதம் சென்றுவந்த செய்தியும் சங்கப் பாடல்களில் சில இடங்களில் காணப் படுகின்றன. வட பாரதப்பகுதியின் இயல்பு களை நன்கு அறிந்திருந்த சான்றோர்களும் தமிழ் நாட்டில் இருந்தனர். முரஞ்சியூர் முடிநாக ராயர் பாடலில்,(புறநானூறு-2) "யாகம் செய் யும் அந்தணர் வேள்வித் தீயின் ஒளியிலும், வெப்பத்திலும் இன்பமாக இமயமலைச்சாரலில் நவ்வி என்ற மான்கள் உறங்குகின்றன" என் கிறார். நவ்வி என்பது மான் வகைகளில் ஒன்று எனப் பொருள் சொல்லப்படுகிறது.

ஆனால் விலங்கியல் நூலைப் படிக்கும்போது, நவ்வி என்பது இமயமலைச்சாரலில் மட்டுமே வாழக்கூடிய மான் இனம் எனக் கூறப்பட்டுள் ளது. எனவே புலவர் தம் இஷ்டம்போல் சொல்லிவிடவில்லை; நேரில் பார்த்த அனுப வத்திலேயே பாடியுள்ளார் என்னும் சிறப்பு தெரிய வருகிறது.

இதிலிருந்து பாரதத்தின் வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் பழங்காலத்தில் இருந்தே தொடர்பு உண்டு என்பது புலனாகிறது.

அப்படி ஏற்பட்ட தொடர்பின் மூலம் வேதக் கருத்துக்கள் தமிழ்நாட்டிலும் பரவத் தொடங் கின. வேதங்களில் சொன்னபடி வேள்விகள் செய்தார்கள். அப்படி வேள்வி செய்தவருள் ஒருவனாகிய விண்ணந்தாயனைப்போற்றி ஆவூர் மூலங்கிழார் புறநானூற்றுப் பாடலிலே பாடு கின்றார்.

தற்போது திருக்கோவிலூர் என வழங்கும் ஊரும், அவ்வூரைச்சார்ந்த பகுதிகளும் முன்பு மலையமான் நாடு என வழங்கப்பட்டன. அப் பகுதியை ஆண்டுவந்தவன் திருக்கண்ணன். அவன் சோழ அரசனுக்குப் பேருதவி புரிபவ னாக இருந்தான். எனவே சோழன் அவனுக்குச் சோழிய ஏனாதி என்ற பட்டம் கொடுத்தான். அவனுடைய பெயர் மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் என ஆயிற்று. அவ் வள்ளலை மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர் பாடுகின்றபொழுது கண்ணபிரான் செய்த ஒரு செயலைக் குறிப்பிடுகின்றார்.

"அணங்கு உடை அவுணர் கணம்கொண்டு ஒளித்து எனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பைகொள் பருவரல் தீரக் கடுந்திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு"

[புறநானூறு-174] எல்லார்க்கும் பயத்தைத் தருகின்ற அசுரர் கூட்டம், தேவர்களோடு சண்டையிடும்போது, தங்களுக்கு வசதியாக இருட்டு ஏற்படும் பொருட்டுச் சூரியனை மறைத்துவிட்டார்கள். உலக மக்கள் எல்லா ரும் துன்பப்பட்டார்கள். இதைக் கண்ட மேகநிற வண்ணனாகிய கண்ணபிரான் ஆகாயத் தில் சூரியனைக் கொண்டு வந்து நிறுத்தினான்; எல்லாருடைய துன்பத்தையும் போக்கினான்.

அதுபோல, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணனும். போர்க்களத்தில் சோழ மன்னனுக்கு உதவியாகச் சென்று, பகைவர் கள் கூட்டத்திற்கு மத்தியிலே, சோழ அரச னின் வெண்கொற்றக் குடையைக் கொண்டு வந்து நிறுத்தினான் என்கிறார்.

இங்கே கண்ணபிரானுடைய புராணக்கதை கூறப்பட்டுள்ளது.

பாண்டவர்கள் கௌரவர்கள் யுத்தத்தில் கண்ணபிரான் சூரியனைச் சக்ராயுதத்தால் மறைத்து இருட்டை, மாலைக் காலத்தை உண் டாக்கின புராணக்கதையும் இங்கே நினைக்கத் தக்கது.

உயர்ந்தவர்களுக்கு உவமானம் சொல்லும் போது உயர்ந்த ஒன்றையே உவமானம் சொல்லவேண்டும். திருக்கண்ணன், போர்க் களத்தில் சோழ அரசனுடைய வெண்கொற்றக் குடையைக் கொண்டுவந்து நிறுத்தினதற்கு உப மானம் சொல்லவந்த புலவர், கண்ணன் என்ற பெயர் உடைய, மதிக்கத் தக்க ஒருவன் செய்த உயர்ந்த செயலை உபமானமாகக் கூறுகிறார்.

"நும் முன்,
ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன்"

—உன் தந்தை இவ்வுலகத்தில் செய்த நல் வினைப் பயன்களை அனுபவித்தல் பொருட்டுத் தேவலோகம் சென்றான் எனவும் அப்புலவர் குறிப்பிடுகின்றார்.

# வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

அஞ்ஞானத்தைப்பற்றி ஆராய்வோம். அஞ்ஞானம் என்பது என்ன? ஸ்ரீ ராமகிருஷ்ணரை மகேந்திரர் முதல்தடவை சந்தித்த போது "உனக்குத் திருமணமாகியிருக்கிறதா?" என்று கேட்டார். "ஆம். எனக்குத் திருமணமாகிவிட்டது" என்றார் மகேந்திரர்.

"ஆ! இவனுக்குத் திருமணமாகிவிட்டதாமே" என்று குருதேவர் ஆச்சரியத்தோடு சொன்னார். "இதில் என்ன தவறுதல் நடந்துவிட்டது?" என்று மகேந்திரர் சிந்தித்தார். "விவாகமாகிவிட்டதால் குற்றமில்லை. உன் மனைவி நல்லவளா?" என்று குருதேவர் கேட்டார். "ஆம். நல்லவள். ஆனால் அவள் அஞ்ஞானி" என்றார் மகேந்திரர். "ஓகோ, நீ ஞானியோ" என்று குருதேவர் கேட்டார். இது ஒரு கருத்து நிறைந்த சம்பாஷணை. M. A. படித்து, தலைமை ஆசிரியராகப் பணியாற்றிவந்த மகேந்திரரை அஞ்ஞானி என்று சொன்னது எழுதப் படிக்கத் தெரியாதவர் என்கிற பொருளில் ஆகும். கடவுள் சாக்ஷாத்காரம் பெற்ற பரம ஞானியாகிய பரமஹம்ஸதேவர் நீ ஞானியோ என்றது நீ கடவுள் சாக்ஷாத்காரம் பெற்றவனா என்ற பொருளில் கேட்டதாகும். "கற்றதனால் ஆய பயன் என்கொல்,வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்." நாம் வாழ்வில் அறியவேண்டியது இறைவன் ஒருவனையே; மற்றவைகளை அறிந்து ஆக வேண்டியது என்ன?

புழு,பூச்சி,பறவை,மாடு,மனிதர் ஆகிய உலகிலுள்ள அனைத்தும் ஓயாது மடிந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எந்த வயதிலும், எல்லாவித சௌபாக்கியங்களுக்கிடையிலும் உயிர்கள் சாகின்றன என்பதையும் அறிகிறோம். ஆனால் எது சாகிறது, இந்த உடலை இயக்கிவந்த அந்தப் பொருள் யாது, அது அப்போது என்ன ஆயிற்று என்று எத்தனைபேர் நினைத்துப் பார்த்திருப்பார்கள்? எத்தனை பேருக்கு விஷயம் தெரியும்? இந்த உண்மை, அடிப்படை உண்மை, தத்துவம் தெரியாமையே அஞ்ஞானம் எனப்படுகிறது. நாம் வெகு பந்தபாசத்துடன் அன்புடன் நேசித்த, அனுபவித்த பொருள்கள் எல்லாம் மரணத்துடன் முடிவடைந்துவிடுகின்றன. உடல் வாழ்வு நிலையற்றது என்று எத்தனைபேர் நினைத்துப் பார்க்கிறார்கள், எத்தனை பேருக்கு வைராக்யம், விரக்தி வந்திருக்கின்றன? இந்த வைராக்யம் வராதநிலை அஞ்ஞானம் எனப்படுகிறது. கனவு காண்கிறோம், ஆழ்ந்து உறங்குகிறோம். கனவும், உறக்கமும் அற்புதமான அதி ஆச்சரியமான அவஸ்தைகள்! இவைகள் எவ்வளவு பெரிய பாடங்களைப் புகட்டுகின்றன! மனித சிந்தனையை இந்த இரண்டும் எவ்வளவு விரித்திருக்கின்றன, உயர்த்தியிருக்கின்றன! அஞ்ஞானியும் அன்றாடம் தன் மூல, ஆத்மநிலையில், உறக்கவேளையில் கலந்து நிற்கிறான். ஆனால் அது அவனுக்குத் தெரியாது. எல்லாப் பேதங்களும் அற்று அவன் ஆனந்தமாகத் தூங்குகிறான். அதனால் அது பிரம்ம அவஸ்தை எனப்படுகிறது. கனவும் நம் சாஸ்திரங்களில் தத்துவ நிரூபணத்திற்குப் பெரிய பிரமாணமாகிறது. ஜாக்கிரதா அவஸ்தைக்குத் தீர்க்க சொப்பனம் என்றும் பெயர். இவ்வுண்மைகளையெல்லாம் நம்மில் எத்தனைபேர் நினைத்துப் பார்த்திருக்கிறோம், அறிந்திருக்கிறோம்.மேலெழுந்தவாரியாக நமக்கு எல்லாம் தெரிந்தவைகளாக இருக்கின்றன. அடிப்படை உண்மையைச் சிந்தித்தால்அன்றி விளங்காது.அஞ்ஞானம் என்றால் அறிவற்றநிலை அன்று. இன்னும் மேலான உண்மை, முடிந்த உண்மை, கடவுள் தத்துவம் தெரியவில்லை என்று பொருள். முடிந்த உண்மையை அறிந்துவிட்டால் அஞ்ஞானம் நசித்துவிடுகிறது.

தத்துவ ஞானத்தால் இந்த அஞ்ஞானம் நசித்துப் போவதால் இது சத்—எப்போதும் இருக்கும் தன்மை உடையதன்று. 'நான் ஒரு முட்டாள். இப்படிச் செய்து விட்டேனே' என்று ஒவ்வொருவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணருவதால், அதை முற்றிலும் இல்லை என்றும் சொல்ல முடியாது. முயல் கொம்பு, மனிதன் கொம்பு, ஆகாயத்தாமரை என்கிற சொற்களை நாம் கையாளுகிறோம். ஆனால் அவை குறிக்கும் பொருள்கள் உண்மையில் இல்லை. மண்ணெண்ணெய் கிடைப்பது முயல் கொம்பாக இருக்கிறது! அவன் என்ன கொம்பு

முளைத்தவனு? ஆகாயத்தாமரை கொண்டு வந்து கஷாயம் வைத்துக்கொடுத்தால் இறந்தவன் உயிர் பெற்று எழுந்துவிடுவான் என்றெல்லாம் நாம் பேசுகிறோம். இல்லை என்று சொல்லுவதற்குப் பதிலாக இப்படிச் சொல்வது வழக்கம். ஏதோ ஒரு விஷயத்தில், ஏதோ ஒரு சமயம் ஒவ்வொருவரும் அறியாமையை உணர்கிறோம். இல்லை என்பதும் இருக்கிறது என்பதும் ஒன்றுக்கொன்று விரோதமானதால் இருந்தும் இல்லாதது, இரண்டும் கலந்தது என்றும் சொல்ல முடியாது. ஸ்தூலமான ஆகாசம் உலகிலுள்ள எல்லாப் பொருள்களைக் காட்டிலும் சூக்ஷ்மமானது. இதைவிட சூக்ஷ்மமானது அபஞ்சீகிருத ஆகாசம். (அதாவது ஸ்தூலமாக வடிவெடுப்பதற்கு முன் இருந்த சூக்ஷ்ம நிலை) இதைவிட சூக்ஷ்மமானது சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்கள். இக்குணங்களை விடவும் சூக்ஷ்மமானது அக்ஞானம். சூக்ஷ்மத்திற்கே மூலகாரணமாயுள்ள அக்ஞானத்திற்கு அவயவங்கள் உண்டு என்று சொல்ல முடியாது. ஸ்தூல பதார்த்தங்களாகிய இப்பிரபஞ்சமாக அக்ஞானம் மாறுதல் அடைவதால், வடிவெடுப்பதால் அவயவம் இல்லாதது என்றும் சொல்ல முடியாது. ஒன்றுக்கொன்று நேர் விரோதமானதால் (உண்டு—இல்லை என்பது) இரண்டும் கலந்தது என்றும் சொல்லமுடியாது.

ஆத்மாவுக்கு அன்னியமாக ஏதும் இல்லை. உள்ளது ஒன்றே. அது இரண்டற்றது. 'நீயலால் பிரிது மற்று இன்மை....... ஒன்றும் நீயல்லை, அன்றி ஒன்றில்லை' என்பன ஆப்தவாக்கியங்கள். இவ்வர்ணனை, கோட்பாடு அத்வைதம் எனப்படுகிறது. இதன்படி அக்ஞானம் ஆத்மாவைக் காட்டிலும் வேறானது என்று சொல்ல முடியாது, அது ஒரு. தனி வியக்தி அன்று. ஆத்மா ஒன்றே ஸத் பொருள், என்றும் நிலைத்திருப்பது, சாஸ்வதமானது. ஆத்மா ஒன்றே ஸத்யம். ஆகையால் அக்ஞானம் ஆத்மாவைக் காட்டிலும் வேறான பொருள் என்று சொன்னல் மேலே கூறப்பட்ட அத்வைத விளக்கங்கள் பொய்யானவை ஆகிவிடும். அதேபோன்று அது ஆத்மாவேதான் என்று ஒப்புக்கொண்டாலும் வேறுவித முரண்பாடுகள் வருகின்றன. அக்ஞானத்தை ஆத்மாவின் சக்தியாகக் கூறமுடியாமல் போகும். "இந்த ஆத்மாவின் மேலான சக்தி பலவாருகக் கேட்கப்படுகிறது" என்கிற சுருதி வாக்கியத்திற்கு விரோதம், முரண்பாடு வரும். மேலும் ஆத்மாவும் அக்ஞானமும் ஒன்ருனல் ஆத்மா ஜடமாகவும் அக்ஞானம் சேதனமாகவும் ஆகிவிடும். அவித்தை முதலிய பெயர்கள் ஆத்மாவுக்கும் ஏற்படும். ஸச்சிதானந்த சொருபமான ஆத்மாவுக்குப் பொய், சோம்பல், துக்கம் இத்தன்மைகளும் ஏற்பட்டுவிடும். ஆகையால் அக்ஞானம் ஆத்மா அன்று. ஒன்றுக்கொன்று நேர்விரோதமாகையால் இரண்டு நிலைகளில் அக்ஞானம் இருக்கமுடியாது; அதாவது ஆத்மாவைக் காட்டிலும் வேருகவும், வேறு அல்லாததாகவும் இருக்க முடியாது. ஆகவே அக்ஞானத்தை இன்னதென்று விவரித்துக் கூறமுடியாதபடியால் அது அநிர்வசனீயம், வாக்கால் விளக்க முடியாதது எனப்படுகிறது.

இப்பேர்ப்பட்ட ஆதியில்லாத அக்ஞானத்தினல் அவிவேகம், அதனல் பற்றுதல், அதனல் ராக துவேஷங்கள், அதனல் கர்மா, கர்மாவினல் சரீரம், சரீரத்தால் துக்கம் ஏற்பட்டது என்பதை விசாரத்தினல் தெரிந்து கொண்டோம். அக்ஞானத்தில் துவங்கி சங்கிலி போல வடிவெடுத்துச் சம்சார சாகரத்தில், பிறவிக் கடலில் ஆழ்த்துதலில் கொண்டுவந்து சேர்க்கிறது. இந்தத் துக்கம் போக வேண்டுமானல் சரீரம் போக வேண்டும், அதாவது ஜீவனுகப் பிறக்கிற நிலை போக வேண்டும். சரீரம் தாங்கியிருக்கும்பரியந்தம் துக்கத்துக்கு முடிவில்லை. வினைப்பயன் தீரும்போது சரீரம், பிறப்பெடுத்தல் அற்றுப் போகிறது. ராக துவேஷங்கள் போனல் வினையும் அதன் பயனும் போய்விடும். பற்றுதல் ஒழிந்தால் ராக துவேஷங்கள் தோன்றமாட்டா. அவிவேகம் போனல் பற்றுதல் போய்விடும். அக்ஞானம் போனல் அவிவேகம் போகும். இங்ஙனம் மாடிப்படியில் ஏறி இறங்குவது போலத் துக்கம் தோன்றுவதற்கு மூலகாரணம் கண்டுபிடித்து அதைப் போக்கப் படிப்படியாக நாம் கையாள வேண்டிய முறைகளும் சொல்லப்பட்டன. இங்ஙனம் அத்வைத சாஸ்திரப் பயிற்சியால் 'நானே பிரம்மம்' என்கிற உணர்வு, போதம் ஏற்பட வேண்டும். அப்போது அக்ஞானம் முற்றிலும் நீங்கிவிடும் என்பது நிச்சயம்.

# அனுமன் - 13

(சுவாமி ஆத்மானந்தர்)

**விபீஷண சரணுகதி**

தென் கடற்கரையை வந்தடைந்த இராம லக்குவர் வானர வீரர்களுடன் கூடி மேற் கொண்டு செய்யவேண்டியது என்னவென்று ஆலோசனை செய்கின்றனர். அதே சமயத்தில் கடலின் மறுகரையில் இருந்த இராவணனும், எரிந்த இலங்கையைப் புதுப்பித்துத் தனது மந்திராலோசனை சபையைக் கூட்டி ஆலோசனை நடாத்துகிறுன். அனுமன் இலங்கையில் செய்த செயல்கள் இராவணனுக்கு மிகுந்த மன வருத்தத்தைத் தருகின்றன. மந்திராலோசனை சபையில் அவன் பேசுவதிலிருந்து இது வெளிப் படுகிறது. நெருப்புக்கு இரையாகிய இலங் கையை அவனல் மறக்க முடியவில்லை. தன்னு டைய ஆட்சியின் மாட்சி ஓர் அற்பக் குரங்கி னல் அழிந்தொழிந்தது. இதைவிட அவமானம் வேறு என்ன இருக்கிறது என மனம் நொந்து கொள்ளுகிறுன். "இலங்கா நகரம் முழுதையும் நெருப்பு எரித்துச் சூறையாடிவிட்டது. கட்டுக் காவல் மிக்க இந்நகரம் அழிந்துபோய்விட்டது. உற்ருர் உறவினரும், நண்பரும் நெருப்புக்கு இரையாகி மாண்டனர். குரங்கினல் ஏற்பட்ட இந்தத் துயரச் செய்தி எங்கும் பரவி விட்டது நாடும் நகரமும், சுற்றமும் நண்பரும் அழிந்த பின்னரும் இந்த அரியணையில் நான் விற்றிருக்கிறேன்," (இந்த அரியணையும் எனக்கு வேண்டுமா என்று கேட்பதுபோல் இருக் கிறது இராவணன் கூற்று)

"சுட்டது குரங்கு; எரி சூறையாடிடக்
கெட்டது, கொடிநகர்; கிளையும் நண்பரும்
பட்டனர்; பரிபவம் பரந்தது, எங்கணும்;
இட்டது இவ் அரியணை இருந்தது என் உடல்."

"நீர் ஊறுகின்ற கிணறுகளிலெல்லாம் உதிரமல்லவா ஊறுகின்றது! அழகு மிக்க இலங்காபுரி வெந்தழலினல் கொதித்துக் கொண்டல்லவா இருக்கின்றது! இத்துணை இடர்ப்பாடுகளையும் செய்த அக் குரங்கு இப் பொழுது இறந்தொழிந்து இல்லையென்று சொல்லவாவது முடிந்ததா? அதுவும் இல்லையே! உயிரோடு இருக்கிறேம். ஆனல் நாம் அனைவ ரும் பெரும்பழிக்கு ஆளாகிவிட்டோம்" என்று வருந்திக் கூறுகிறுன்.

இராவணன் மனம் நொந்ததைக் கண்ட சேனுபதிகள், அவனெதிரில் வீரவுரை பகரு கின்றனர். "உன் அருமைத் தங்கை சூர்ப்பனகையின் மூக்கை அரிந்து, கரன் முதலிய வீரரைக் கொன்ற அந்த மானுட ரைக் கொல்லுவதல்லவா உன் கடமை! உன் வீரம் என்ன சாமானியமானதா? எதிர்த்து நின்ற தேவர், தானவர்களையெல்லாம் வென்று மூவுலக ஆட்சியையும் உனதாக்கிக்கொண்ட வனல்லவா நீ. இத்தகைய நீ மனந்தளர லாகாது. இலங்கையில் வந்து குறும்புகள் செய்த அக்குரங்கினைப் பின் தொடர்ந்து சென்று அதனையும், அதனை ஏவிய மானுடரை யும் கொன்றிருக்கவேண்டும். அதைச் செய்யா மல் விட்டது மிகப்பெருந் தவருகும். வெறும் வாய்ப்பேச்சினல் ஒன்றும் நடைபெற்றுவிடாது. உடனே போருக்குப் புறப்படவேண்டும் என்று கூறி ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு போருக்குப் போக முந்துகின்றனர். அப்பொழுது இராவணன் தம்பி கும்பகர்ணன் இவர்களையெல்லாம் விலக்கிவிட்டு முன்வந்து பேசுகிறுன். "அண்ணு, நீ பிரம்மதேவனுடைய பரம்பரையில் வந்தவன். ஆயிரம் ஆயிரம் கிளைகளாக விரிந்த வேதங்களை ஓதி அவற்றின் பொருளை நன்கு உணர்ந்து நல்லறிவு படைத் திருக்கின்ருய். ஆனல் இப்போது நீ தீய செயல்களைச் செய்யலாம் என்று எண்ணிவிட் டாய். இராமன் மனைவியை அபகரித்து வந் தது அடாதகாரியம் என்று நீ எண்ணவில்லை. அதன் விளைவாகத்தான் குரங்கு இலங்கையைச் சுட்டெரித்தது. இன்னும் எத்துணை துன்பங் கள் நேரப்போகின்றனவோ? நாம் பெருமை யுடன் மானத்தைப் பற்றிப் பேசுவோம். ஆனல் செய்வதோ மானக்கேடான காரியம். பெரும் புகழைப் பெறவிரும்புவோம். ஆனல் அதற்கு நேர்மாருன காரியத்தில் ஈடுபடுவோம். குற்ற மற்ற பிறன் மனைவியைச் சிறையில் வைத்த நமக்குப் புகழேது? மானமேது? நீங்காப் பழி தான் நிலைத்து நிற்கும். காமத்துக்கு வசப் பட்ட நாம் இன்று இரண்டு மனிதர்களைக்கண்டு

அஞ்சுகிறோம். இவற்றை எண்ணிப் பார்த்தால் நம் வெற்றியின் பெருமை நன்றாக இருக்கிறது! என்று ஏசுகிறான்.

'ஆசுஇல் பரதாரம் அவை அம்சிறை அடைப்பேம்;
மாசு இல் புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்
பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;
கூசுவது மானுடரை; நன்று, நம கொற்றம்!

கும்பகர்ணன் இராவணனின் செயலைக் கண்டித்தாலும் சீதையை விட்டுவிடவேண்டுமென்று கூறவில்லை. "சீதையைச் சிறையினின்று விடுவிப்பதே முறை; ஆனால் அவளை இப்போது நாம் விடுவித்தால் பிறர் நம்மை ஏளனம் செய்வர். அதனால் காலதாமதமின்றி உடனே போருக்குத் தயாராகவேண்டும். எதிரிகள் பெரும் படை திரட்டுவதற்கு முன்னமேயே கடல்கடந்து சென்று, மனிதர் வானரர் எல்லாரையும் அடியோடு அழித்து ஒழித்துவிட வேண்டும். இது உடனே நாம் செய்தற்குரிய கடமையாகும்" என்று கூறி முடித்தான்.

கும்பகர்ணனின் கூற்று இராவணனுக்கு உவகையை ஊட்டியது. அவன் தன்னைக் கடிந்து கூறியவற்றை யெல்லாம் மறந்துவிடுகின்றான். அவனுக்கு உற்சாகம் மேலிடுகிறது. இன்றே போருக்குப் புறப்படுதல் நன்றெனக் கூறுகிறான். இராவணன் கூற்றைக்கேட்ட இந்திரஜித்துக்கு வீராவேசம் பொங்குகிறது. அவன் தன் தந்தையை நோக்கிக் கூறுகிறான்: "தந்தையே! என்னை அனுப்புங்கள். மூவுலகும் சேர்ந்து நம் பகைவருடன்கூடிவரினும் அவர்களையெல்லாம் நான் போரில் வென்று உனக்கு வெற்றியைத் தேடித் தருகின்றேன். அப்படிச் செய்யாவிடில் நான் உனக்குப் பிறந்த மகன் ஆகேன்" என்று சூளுரை பகர்கின்றான்.

இந்திரஜித்துவின் பேச்சு நீதி உள்ளம் கொண்ட விபீஷணனுக்குக் கோபமூட்டியது. "சிறுபிள்ளையாகிய நீ அறியாமையினால் ஏதேதோ பிதற்றுகிறாய்" என்று அவனைக் கடிந்து, இராவணனை நோக்கிக் கூறுகிறான்: "அண்ணா! என் வார்த்தையை அலட்சியம் செய்யாது கேட்பாயாக. நான் சிறந்த கருத்துக்கள் சிலவற்றைக்கூற விரும்புகிறேன். எனக்குத் தந்தையும், தாயும், அண்ணனும், தவத்துடன் தினமும் நான் வழிபட்டுவரும் தெய்வமும், மற்று நான் பேணுகின்ற எல்லாப் பொருட்களும் நீயே. இப்பொழுது நிகழ்ந்துள்ள காரியங்களை நோக்கினால், இந்திரனது செல்வம் போன்ற இத்தனை செல்வங்களையும் நீ இழந்துவிடுவாய் என நான் வருந்தியதால் இதனைச் சொல்லத் தொடங்கினேன். இந்த இலங்கை நகரம் முழுவதும் ஒரு குரங்கினால் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இவ்வாறு அழிந்தது குரங்கினால் என்று நினைக்கின்றாய்? உலக மாதாவாகிய ஜானகியின்கற்புத் தீயினால் அழிந்தது என்று நினைக்கவேண்டும்."

'கோநகர் முழுவதும், நினது கொற்றமும்,
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால், வெந்தது அல்லது, "ஓர்
வானரம் சுட்டது" என்று உணர்தல் மாட்சியோ?'

திருமகளைப் போன்ற சீதையைக் கவர்ந்தது பெருந்தவறு. அவளை விடுதலை செய்து இராமனிடம் சேர்ப்பதே உய்யும் வழியாகும். இராமனைப் போரில் வெல்லலாம் என்று எண்ணிவிடாதே. இந்த ராமன் ஒரு சாதாரண மனிதனல்லன். அவன் திருமாலின் அவதாரமாவான். திருமால் முந்தின தம் அவதாரங்களில் உன்னிலும் வலிமை மிக்க இரணியன் போன்ற பலரை வதைத்தவர் என்று இரணியன் கதையையும் கூறுகின்றான். "எனக்குத் தெய்வமாகிய தலைவனே! இது முன்பு நிகழ்ந்த சரிதமாகும். நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். அதனை நீ ஏற்றுக் கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்தாலும் சரியே. என் கூற்றுக்களைச் சிந்தியாது புறக்கணிப்பாயானால் உன் செயல்கள் பயனற்றவையாய் முடிதல் திண்ணம்" என்று கூறுகிறான் மேதாவிகளுக்கெல்லாம் மேதாவியாகிய விபீஷணன்.

'ஈது ஆகும், முன் நிகழ்ந்தது; எம்பெருமான்! என் மாற்றம்
யாதாயினும் ஆக நினையாது, இகழ்தியேல்,
தீது ஆய் விளைதல் நனி திண்ணம்' எனச்செப்பினான்
மேதாவிகட்கு எல்லாம் மேலான மேன்மையான்.

இதைக் கேட்டதும் இராவணன் கடுங்கோபம் கொள்ளுகிறான். "நீ என் தம்பியாயிருந்தும் பகைவர்களைப் போற்றிப் புகழ்கின்றாய். அவர்களிடத்து முன்னமே நட்புக் கொண்டு விட்டாய். அவர்களுக்காக நெஞ்சம் உருகுகின்றாய். தம்பியைக் கொன்றான் என்ற

பழி வந்துவிடுமே என்பதற்காக உன்னை விட்டு வைக்கிறேன். என்முன் நில்லாதே. ஓடிப் போய் விடு" என்று சினந்து கூறுகிருன். விபிஷணன் துணைவர் நால்வருடன் புறப்பட்டு எதிர்க்கரையில் இருக்கும் இராமனிடம் சென்று சரண்புகுகின்றுன். விபிஷணனைச் சேர்த்துக் கொள்வதில் வானர வீரர்களுக்கிடையில் பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. சுக்ரீவன் உள்பட யாவரும் யுத்த சமயத்தில் இராவணனை விட்டு வந்ததில் ஏதோ கபடச் செயல் இருக்கவேண்டும், அதனுல் அவனைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றே கூறுகின்றனர். ஆனல் அனுமன் ஒருவன் தான் விபிஷணனை ஆதரித்துப்பேசுகிருன். எல்லாருடைய அபிப்பிராயங்களையும் கேட்ட இராமன், இறுதியில் அனுமன் அபிப்பிராயத்தையும் கேட்கிருன். நுண்ணறிவாளனும், சொல்லின் செல்வனுமாகிய அனுமன் இராமனை நோக்கி, "அண்ணலே, அற்பனை நான் சொல்லுதற்கு என்ன இருக்கிறது! விபீஷணன் நற்குண முள்ளவன். தூய செயல்களையே செய்யக் கூடியவன். இலங்கைக்குத் தூது சென்ற என்னை இராவணன் கொல்ல முயன்றபோது, தூதனைக் கொல்லுதல் கூடாது, அது பெரும் பழியினைத் தருவதாகும் என்று கூறித் தடுத்தவன் இவனேயாவான். இலங்கை வாழ் அரக்கர் இல்லங்களில் கள்ளும் மாமிசமும் மலிந்திருக்க, இவன் இல்லம் மட்டும் அந்தணர் தம் இல்லம் போன்று தூயதாய்ப் பொலிவுற்று விளங்கியது. சரணம் என்று நம்மை வந்தடைந்தோரைக் காப்பதே தருமமாகும். மும்மூர்த்திகளாலும் முடித்தற்கரிய காரியத்தை முடித்தற்காக நீ வந்திருக்கின்ருய். அத்தகைய நீ, ஆபத்துக் காலத்தில் சரணமென்று வந்தவனைக் கைவிட்டுவிடாது அவனைச் சேர்த்துக் கொள்வதே பெருந்துணையாகும்.

"தேவர்க்கும், தானவர்க்கும் திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கும், முடிப்ப அரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்ருய்;
ஆவத்தின் வந்து, "அபயம்!" என்றுனை
அயிர்த்து அகல விடுதி ஆயின்,
கூவத்தின் சிறு புனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ?—கொற்ற வேந்தே!"

ஏதோ என் சிற்றறிவுக்கு எட்டியதைச் சொன்னேன். தங்களுக்கு எது நியாயமென்று தோன்றுகிறதோ அதனைச் செய்யுங்கள்" என்று வினயமாகவும் வசீகரமாகவும் பேசி முடித்தான் மாருதி.

அறிவும், ஆற்றலும் ஒருங்கு பொருந்திய அனுமன் ஆராய்ந்து கூறியவைகளைச் செவிமடுத்த இராமன், விபீஷணனை நண்பனுக ஏற்றுக்கொண்டதோடு அல்லாது, அவனைத் தன் சொந்தத் தம்பியாகவும் ஏற்றுக்கொள்ளுகிருன். விபீஷணன் அரக்கர் குலம் விடுத்துத் தசரத குலத்தவனுகிவிட்டதால், இனி நடக்கவேண்டிய யுத்த காரியங்களுக்கு இராமன் விபீஷணனையும் உடன் வைத்துக் கலந்தாலோசிக்கின்றுன்.

இராமன் விபீஷணனை அழைத்து இராவணன் ஆற்றல், சேனுபலம், இலங்கையின் அரண், அகழி முதலியவற்றைக் கூறும்படி கேட்கிருன். இவைகளை யெல்லாம் பலபட எடுத்துக்கூறிய விபீஷணன் இறுதியில் அனுமனின் பராக்கிரமத்தையும் பாராட்டிப் பேசுகிருன். இலங்கைக்குத் தூதுவந்த அனுமன் சீதையைக் கண்டு சூடாமணியைப் பெற்றுக் கொண்டதோடு அசோகவனத்தையும் அழித்தான். எண்ணற்ற அரக்கவீரர் அவனேடு போர் செய்ய முற்பட்டனர். ஆனல் அனுமன் ஒருவனே தனித்து நின்று கணக்கற்ற அரக்க வீரரைக் கொன்று குவித்தான். அரக்க சேனையின் வலிமையையும் ஒடுக்கினன். அனுமனல் அடியுண்ட அரக்கர் கொடும் புலியினல் துரத்தப்பட்ட ஆடுகளைப் போன்று பரிதாபநிலையை அடைந்தனர். என்றுமே வெற்றிக் கொடி கட்டிப் பறந்த இலங்கை நகரம் அனுமன் இட்ட தீயினல் எரியுண்டது.

ஈடுபட்டவர் எண்ணிலர் தோரணத்து, எழுவால்;
பாடுபட்டவர் படுகடல் மணலினும் பலரால்;
சூடுபட்டது, தொல்நகர்; அடுபுலி துரந்த
ஆடுபட்டது பட்டனர்; அனுமனல் அரக்கர்.

பெருவீரரென்று போற்றப்படும் சேனபதிகள் ஐவரும் தம் தம் சேனைகளுடன் சென்று அனுமனேடு பொருதனர். ஆனல் அவர்கள் ஐவரும் கடல் போன்ற தம் சேனைகளோடும் யானைக் காலில் பட்ட செல்லுப்புற்றுப்போல் விரைவில் அழிந்தொழிந்தார்கள். மலை போன்ற தோற்றத்

தையுடைய எண்பதினுயிரம் கிங்கரர் அனுமன் கைகளினுலும், வாலினுலும், கால்களினுலும் அடிக்கப்பட்டு மாண்டனர். ஆயிரக்கணக்கான அம்புகளை அனுமன்மீது எய்து போரிட்ட சம்பு மாலியும் இறுதியில் வில்லினல் சுருக்கிடப் பெற்று அனுமனல் அழிக்கப்பட்டான். இராவ ணனது அருமை மைந்தனுன அட்சகுமாரனை யும் அழித்தான் அனுமன். அனுமன் இட்ட தீயினல் எரியுண்ட இலங்கையானது, அவனல் கொல்லப்பட்ட அரக்க வீரரின் இரத்தத்தால் தான் அணைந்தது. அனுமனைக் காட்டிலும் மேம் பட்ட வீரனென்று கூறுதற்கு யார் உளர்? யாருமில்லை.

சொன்ன மாமதில் இலங்கையின்
பரப்பினில் துகைத்துச்
சின்னம் ஆனவர் கணக்கு இலர்;
யாவரே தெரிப்பார்?
இன்னம் ஆர் உளர், வீரர்?
மற்று, இவன் சுட எரிந்த
அன்னமா நகர் அவிந்தது
அக் குருதியால் அன்று.

இவ்வாறு அனுமனல் இலங்கையில் ஏற்பட்ட அழிவுகளையும், அரக்க வீரரோடு அவன் செய்த போர்த்திறனையும், அனுமனது ஒப்பற்ற பெரு வீரத்தினையும் எடுத்தியம்பிய விபீஷணன், தான் இராமனைச் சரணடைந்ததற்குரிய கார ணத்தையும் எடுத்தியம்புகிருன்.

"புகழ்பெற்றேனே! நீங்கள் மாபெரும் வீரர் களான கரனையும், வாலியையும் கொன்று வென்றதனை நான் கேள்விப்பட்டேன். அவர் களை வென்றதைக் கேட்டு உங்களைச் சரண் புகுந்தேன் என்று எண்ணவேண்டாம். உங் கள் தூதனுக வந்த அனுமனல் இலங்கை மாநகரம் அடியோடு அழிந்ததையும், கூட்டம் கூட்டமாக அரக்கவீரர்களை அவன் அழித்த தையும் நேரில் கண்டேன். மகாவீரனுன இவ் வனுமனை அடியவனுகப் பெற்றவன் நிச்சயம் புருஷோத்தமனுகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினுலேயே நான் உங்களிடம் அடைக்கலம் புகத்துணிந்தேன்" என்று கூறி முடித்தான்.

காந்தும் வாலியின் கரன்முதல்
வீரரும், கவியின்
வேந்தும், என்று இவர் விளிந்தவா
கேட்டு அன்று; அவ் இலங்கை
தீந்தவா கண்டும், அரக்கரைச்
செருவிடை முருக்கிப்
போந்தவா கண்டும், நான்
இங்குப் புகுந்தது—புகழோய்!

இலங்கைக்குத் தூது சென்று சீதையைக் கண்டு மீண்ட அனுமன் செய்த செயல்களை யெல்லாம் இது பரியந்தம் அறியாத இராமன், விபீஷணன் சொன்னவைகளிலிருந்து அறிந்து மகிழ்ந்தான். அவனது தோள்கள் பூரிக்கப் பெற்று அனுமனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னுன்: "வீரனே! அரக்க சேனுபலத்தை யெல்லாம் பெரும்பாலும் அழித்துவிட்டாய். இலங்கை மாநகரம் முழுதையும் நெருப்பிட்டு எரித்து விட்டாய். நீ, சீதாபிராட்டியை விடு வித்து என்னிடம் சேர்க்காதது என் வில்வித் தையை உலகுக்குக் காட்டவேபோலும். என் வலிமையையும், இராவணன் வலிமையையும் ஒருங்கே உனதாக்கிக்கொண்டனை. இத்தகைய ஒப்பற்ற பலபராக்கிரமமுடைய உனக்கு நான் கொடுக்கத்தக்கது மூவுலகும் படைக்கும் பிரம்ம பதந்தான். அதை நீ திண்ணமாய்ப் பெறுவாய்.

'என்னது ஆக்கிய வலியொடு
அவ் இராவணன் வலியும்
உன்னது ஆக்கினை; பாக்கியம்
உருக் கொண்டது ஒப்பாய்!
முன்னது ஆக்கிய மூஉலகு
ஆக்கிய முதலோன்
பின்னது ஆக்கிய பதமும்
நினக்கு ஆக்கினென்; பெற்ருய்.

இதனைக் கேட்ட அனுமன் எழுந்து உடம்பு பூமியில் படும்படி வீழ்ந்து வணங்கி ஒன்றும் பேசாது நாணத்துடன் நிற்கின்ருன். மாருதி யின் சீரிய பண்பு இருந்தவாறு என்னே! என்னே! அனுமன் வெற்றிச் செய்தியைக் கேட்ட ஏனைய வானரத் தலைவர்களும் விடு பேறு அடைந்தவர்களைப் போன்று பரமானந் தத்தில் திளைத்தார்களாம்.

என்று கூறலும், எழுந்து நிலன்உற இறைஞ்சி,
ஒன்றும்பேசலன் நாணினன், வணங்கிய
[உ.ரவோன்;
நின்ற வானரத் தலைவரும் அரசும், அந் நெடியோன்
வென்றி கேட்டலும், வீடுபெற்ருர் என வியந்தார்.

# ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-134

770. प्रियव्रता ப்ரியவ்ரதா — விரதங்கள் எடுப்பதில் மகிழ்ந்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மக்களில் பலர் நிர்பந்தத்தை முன்னிட்டு விரதம் எடுத்துக்கொள்ளுகின்றனர். காசிக்குச் செல்லுகிறவர்கள் ஏதேனும் ஒரு பழத்தை, ஒரு காய்வகையை, ஒரு இலை வகையைத் தியாகம் பண்ணுவதை விரதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்னும் கோட்பாடு உள்ளது. இந்த ஐதிகத்துக்கு அடிப்படைக் கோட்பாடு ஒன்று உள்ளது. உலகப் பொருள்களில் பற்று வைத்திருக்கிற மனிதன் ஒன்றன்பின் ஒன்ருக அப்பற்றுதல்களை ஒதுக்கித் தள்ள வேண்டும். அப்பொழுதுதான் மானுட ஜன்மத்தை அவன் முறையாகப் பயன்படுத்தியவனுகிறுன். இவ்வுண்மையை அறிகிறவர்கள் மகிழ்வோடு தாங்கள் பற்றுதல் வைத்துள்ள பொருள்களை ஒன்றன்பின் ஒன்ருக ஒதுக்கித்தள்ள வேண்டும். அப்போது விரதத்தின் உட்பொருள் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனுல் உலகப்பற்றில் அழுந்திக் கிடக்கின்றவர்கள் தங்களுக்கு ஒவ்வாத பண்டங்களைத் தியாகம் பண்ணுவதாகப் போலி விரதம் எடுத்துக்கொள்ளுகின்றனர். தங்களுக்கு விருப்பம் இல்லாத வேப்பம் பழம், நாவுக்கு ஒவ்வாத பாகற்காய், உணவு உண்பதற்கு அகப்படாத தாமரை இலை ஆகியவைகளைத் தியாகம் பண்ணியதாகத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளுகின்றனர்.

சத்திய விரதத்தில் தசரத ராமன் பெரு மகிழ்வு பூண்டிருந்தான். தர்ம மார்க்கத்திலிருந்து பிசகாதிருக்கிற விரதத்தில் யுதிஷ்டிரன் முழுமனதோடு ஈடுபட்டான். இத்தகைய மூர்த்திகளே அன்னையின் மகிமையை உள்ளபடி அறிந்துகொள்ள வல்லவராகிறுர்கள். நல்ல விரதங்கள் எடுப்பதில் அன்னை பராசக்தி பேருக்கமும், பரம மகிழ்ச்சியும் உடையவளாக இருக்கின்ருள். அவளுடைய பாங்குக்கொப்ப விரதம் எடுத்துக்கொள்ளுகின்றவர்களே அவளுடைய வழிபாட்டுக்குத் தகுதியுடையவர்களாகின்றுர்கள். அன்னவர்களே அவளுடைய அருளுக்குப் பாத்திரமாகின்றுர்கள்.

771. दुराराध्या துராராத்யா —ஆராதனைக்கு அரியவளாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மக்களில் பெரும்பான்மையோர் ஐம்பொறிகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருக்கிறுர்கள். மனம் போன போக்கிலெல்லாம் அவர்கள் போய்க்கொண்டும் இருக்கின்றனர். அந்தக் கரணமாகிய மனதை அடக்கியாளத் தெரியாதவர்களும் புறக்கரணங்களாகிய மெய், வாய், விழி, நாசி, செவி ஆகிய ஐம்பொறிகளுக்கு அடிமைப்பட்டிருக்கிறவர்கள் மானுட ஜன்மத்தைச் சரியாகப் பயன்படுத்துபவர்கள் ஆக மாட்டார்கள். வடிவத்தில் அன்னவர்கள் மக்கள் எனினும் பாங்கில் அவர்கள் மக்களாகமாட்டார்கள். கருவி கரணங்களை அடக்கி ஆளுதற்கேற்ப மக்கள் மேன்மக்களாகின்றனர். அப்படியல்லாது அக்கருவி கரணங்களுக்கு அடிமைப்பட்டிருக்கின்றவர்கள் கீழோர் ஆகின்றனர். அன்னவர்களை மாக்கள் என்றும் இயம்பலாம். பரிபாகத்தில் பண்படாதிருக்கிறவர்கள் அன்னை பராசக்தியைச் சரியாக வழிபடமாட்டார்கள். அத்தகையவர்களுக்கு அன்னையின் ஆராதனை மிகக் கடினமானதாகவிருக்கிறது. தன்னடக்கம் பழகுகிறவர்கள் இக்கீழ்மையி னின்று விலகிப் படிப்படியாக மேல் நிலைக்கு வருதல் வேண்டும். அப்படி வந்தான பிறகே அன்னையின் ஆராதனை எளிதாக நிறைவேறுகிறது.

772. दुराधर्षा துராதர்ஷா — யாராலும் வெல்ல முடியாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஆதிசக்தியாகிய அம்பிகை மகா சக்தியாகவும், பராசக்தியாகவும் யாண்டும் இலங்கிக் கொண்டிருக்கிருள். அவளுடைய பேரமைப்பில் முரட்டுத்தனமே வடிவெடுத்துள்ள அரக்கர்கள் பலர் தோன்றியிருக்கின்றனர். அன்னவர்களை அடக்கியாள மக்களில் யாருக்கும் இயலவில்லை. கொடூரத்தன்மை வாய்ந்த அவர்களை யாரும் வெல்ல முடியாது என்று அவர்கள் செருக்குற்று இருந்தனர். எந்தப் பராசக்தியிடமிருந்து அரக்கர்கள் தங்களுடைய ஆற்றல்களைப் பெற்றுர்களோ அந்தப் பராசக்தியையே அடிபணியச் செய்ய முடியும் என்னும் ஆண

வம் பூண்டவர்களாக அவர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். தக்க தருணத்தில் அவர்களைத் தோற்கடித்து அன்னை அடக்கியாண்டாள். அன்னையின் ஆட்சிமீது ஆக்கிரமிப்புச் செய்ய யாருக்குமே இயலாது. அவளுடைய அருளை நாடுபவர்கள் பாக்கியவான்கள். அவளுடைய அருளையும், ஆதிக்கத்தையும் புறக்கணிக்க முயலுபவர்கள் தோல்வியுறுவது திண்ணம்.

**773. पाटलीकुसुमप्रिया** பாடலீகுஸுமப்ரியா — பாதிரிப் புஷ்பத்தில் பிரியம் உள்ளவள் என்பது இந்த நாமத்தின் பொருள். பாதிரிப்புஷ்பம் வெளுத்த சிவப்பு நிறம் உடையதாயிருக்கும். சிவனுருக்கு இது மிகப் பிரியமானது என்பது ஐதிகம். சிவனுருக்குப் பிரியமாயுள்ள புஷ்பம் அம்பிகைக்கும் பிரியமானது என்பது சொல்லாமலேவிளங்குகிறது.

**774. महती** மஹதீ — மிகப் பெரியவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பெரியவைகளில் எல்லாம் மிகப் பெரியவளாயிருப்பவள் அன்னை பராசக்தி. அண்ட கோடிகளனைத்தும், ஜீவ கோடிகளனைத்தும் அன்னையினிடத்திருந்தே தோற்றத்திற்கு வந்திருப்பதால் அன்னை அவையாவுக்கும் மிக்காளாகவும் பெரியவளாகவும் இருப்பது இயல்பு. தகுதி வாய்ந்த புஷ்பங்கள் பல ஒரு விருக்ஷத்தினின்று தோன்றி வருகின்றன. அப்புஷ்பங்களுக்குக் காரணமாயிருப்பது மரம். யாண்டும் காரியத்திலும் மிக்கது காரணம். மதிப்புப் போடமுடியாத பல பொருள்கள் பிரபஞ்சத்தில் அமைந்துள்ளன. அவையாவுக்கும்மூலகாரணமாயிருப்பவள் அன்னை பராசக்தி. ஆதலால் மதிப்புப்போட முடியாத பொருள்களுக்கும் மேலானவளாக அவள் இருக்கிருள். வண்ணத்தில் பெரியதாயிருப்பது ஆகாசம். அது எங்கும் வியாபித்துள்ளது. தோற்றத்துக்கு வந்துள்ள பூதங்களனைத்தும் ஆகாசத்தினின்று வந்தவைகள். இந்த ஆகாசத்துக்குள் அவையாவும் அடங்கியிருக்கின்றன. அளப்பரிய அந்த மகா ஆகாசமே அன்னையினிடத்திருந்து தோற்றத்துக்கு வந்துள்ளது. தோற்றத்துக்கு வந்துள்ள பெரியவைகளுள் எல்லாம் மிகப் பெரியவளாயிருப்பவள் அன்னை பராசக்தி.

மகதீ என்னும் பெயர் நாரதர் பயன்படுத்துகின்ற வீணைக்கும் அமைந்திருக்கிறது. யாண்டும் பரவஸ்துவின் மகிமையைப் போற்றிப்பாராட்டுதற்கு உபகரணமாக இந்த வீணை அமைந்திருப்பதால் அதனிடத்தும் தெய்விகப் பெருமை அமைந்திருப்பது தேற்றம். இந்த வீணையின் சொருபமாகவும் அன்னை பராசக்தி யாண்டும் இலங்கிக்கொண்டு இருக்கிருள்.

**775. मेरुनिलया** மேருநிலயா — மேரு மலையைத் தன்னுடைய வாசஸ்தலமாகக் கொண்டிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மானுட அமைப்பில் ஏழு ஞானபூமிகள் இருக்கின்றன. அவைகள் முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரம், அனுஹதம், விசுத்தம், ஆக்ஞை, சஹஸ்ராரம் எனப் பெயர் பெறுகின்றன. இந்த ஏழினுள் உச்சந்தலையிலிருக்கும் சஹஸ்ராரமே முதன்மை பெறுகிறது. சிவமும் சக்தியும் அபேத நிலையில் இந்த ஏழாவது ஞான பூமியில் வீற்றிருக்கின்றனர். இதற்கு மேரு என்பதும், சுமேரு என்பதும், பொன்மலை என்பதும் ஏனைய நாமங்களாகின்றன.

இந்த நாமமும், 55ஆவது நாமமாகிய சுமேரு மத்ய ஸ்ருங்கஸ்தா என்னும் நாமமும் ஒரே கருத்துடையவைகள். இம்மலையானது கயிலாய கிரிக்கும் வடக்கேயுள்ளது. அது பொன்மயமான பர்வதம். உருக்கிய தங்கம் போன்று அது தக தக வென்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அம்மலையின் மூன்று உச்சிகளின் மேல் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனும், விஷ்ணுவும், ருத்ரனும் வீற்றிருக்கிருர்கள். அவைகளுக்கு நடுவே மிக உயரத்தில் நாலாவது உச்சியில் அம்பாள் தன்னுடைய ஸ்ரீ நகரத்தில் வீற்றிருக்கிருள் எனப் புராணங்கள் கூறுகின்றன.

அம்பிகை பண்டாசுரனேடு போர்புரிந்து அவனைத் தோற்கடித்தாள். அதன் பிறகு அம்பிகைக்கும் காமேஸ்வரருக்கும் பொருத்தமான வாசஸ்தலம் அமைக்கத் தேவர்கள் எல்லாரும் ஒன்றுகூடி ஆலோசித்தார்கள். தேவ சிற்பியாகிய விஸ்வகர்மாவையும், அசுர சிற்பியாகிய மயனையும் கொண்டு இந்த வாசஸ்தானம் அமைக்கப்பெற்றது என்பது மற்றொரு கோட்பாடு.

**776. मन्दारकुसुमप्रिया மந்தாரகுஸுமப்ரியா** — மந்தாரப் புஷ்பத்தில் விருப்பம் உள்ளவள் என்பது இந்த நாமத்தின் பொருள். இது வெள்ளெருக்கு எனப் பொருள்படுகிறது.

**777. वीराराध्या வீராராத்யா** — வீரர்களால் போற்றப்படுகிறவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

யார் ஒருவன் ஆண்மையும் வலிவும் மிகப் படைத்திருக்கிறானோ அவனே மக்களுள் காளை எனப் போற்றப் பெறுகிறான். அத்தகையவன் தர்மத்தையே எங்கும் நிலைநாட்ட முற்படுவானாகில் அவன் வீரன் எனப் பாராட்டப்படுகிறான். வலிவு மிகப் படைத்தவன் மேலும் வலிவைப்பெற என்ன செய்யவேண்டும் என்பதைப் பிறரால் ஓதப் பெறாது தானே அறிந்து கொள்ளுகிறான். ஆற்றல்களனைத்துக்கும் உறைவிடம் அம்பிகை. இயல்பாகவே அவன் அம்பிகையைச் சரண்புகுகிறான். அம்பிகையிடமிருந்து அதிக வீர்யத்தை மேலும்மேலும் பெறுகிறான். அப்படிப் பெற்ற வீர்யத்தைத் தர்மஸ்தாபனத்தின் பொருட்டே அவன் பயன்படுத்துகிறான். அத்தகைய பெருமகனால் அம்பிகை போற்றப்படுவதால் வீர ஆராத்யா என்னும் பெயர் அவளுக்கு வாய்த்துள்ளது.

**778. विराड्रूपा விராட்ரூபா** — ஸ்தூலமாகத் தென்படுகின்ற பிரபஞ்சமனைத்துமாய் வடிவெடுத்திருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

எல்லாப் படித்தரங்களிலும் எல்லாமாய் இலங்குபவள் அன்னை. ஆதலால் ஊனக்கண் கொண்டு நாம் காண்கின்ற பிரபஞ்சமாகவும் அவள் வடிவெடுத்துள்ளாள். யாண்டும் காட்சிக்குரியவளாக அன்னை இருக்கின்றாள். காண்பதற்கு அவளைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அவளுடைய பாங்கை அறிந்து கொள்ளாதவர்களே தர்சனத்தின் பொருட்டு அவளைத் தேடியலைகின்றனர். உள்ளபடி அவளைப் பொருள்படுத்த நாம் அறிந்துகொள்வோமானால் நாமனைவரும் அவளுடைய மடியிலேயே அன்புடன் பாதுகாத்து வளர்க்கப்படுகிறோம் என்பது நமக்கு நன்கு விளங்கும். கடவுளைக் காண், அவரைத் தேடி அலையாதே என்பது கோட்பாடு. பக்தியிலும் ஞானத்திலும் நாம் ஊறியிருப்போமானால் அப்பொழுது அவளுடைய விராட் சொரூபத்தை உள்ளபடி கண்டு அதில் திளைத்திருக்க நமக்குச் சாத்தியமாகின்றது. மீன் எங்ஙனம் நீரினுள் வசித்து அதில் விருத்தியடைந்து வருகின்றதோ அதேவிதத்தில் அன்னையின் அருளால் அன்னையினிடத்திலேயே நாம் நிலைபெற்றிருந்து அவளால் பேணப்பட்டு வருகிறோம். அவளுடைய விராட் வடிவத்தை உள்ளபடி பொருள்படுத்த வல்லவராவோமானால் அப்பொழுது வாழ்க்கையில் நாம் புதிய அத்தியாயம் துவக்குகிறோம்.

நல்லதாகவும் பொல்லாததாகவும் நாம் பொருள்படுத்துவதெல்லாம் நம்முடைய பேதமையினாலேயாம். பொல்லாததாகத் தென்படுவதிலும் பொருள் புதைந்திருக்கிறது. அன்னையின் சாந்நித்தியம் அத்தகைய வடிவெடுத்து அதன்மூலம் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கிறது. புத்தியோகம் பூண்டு இவ்வுண்மையைக் காண்போமாகில் நாம் பாக்கியவான்களாகிறோம்.

அர்ஜுனன் பார்த்த கிருஷ்ணனுடைய விஸ்வரூபமும் அம்பிகையின் விராட் ரூபமும் ஒன்றேயாம். அர்ஜுனனுக்காகத் தம்முடைய விஸ்வரூபத்தைக் கிருஷ்ணபரமாத்மா அப்போதைக்குப் புதிதாக எடுத்துக்கொண்டார் எனப் பலர் பொருள்படுத்துகின்றனர். அப்படிப் பொருள்படுத்துவது பிழை. பரவஸ்துவின் விராட்ரூபம் அல்லது விசுவரூபம் யாண்டும் உளது. கடலைக் காணவருபவர்களுக்கு அக்கடல் தன் வடிவத்தைப் புதிதாக எடுத்துக் கொள்ளுவதன்று. அது எப்பொழுதுமே இருந்தபடி இருக்கிறது. அதன் அருகில் வருகிறவன் அதன் காட்சியைக் காண்கிறான். அதேபாங்கில் பரவஸ்துவின் பிரபஞ்சத்தோற்றம் விராட்ரூபம் எனப்படுகிறது. மஹாபிரளயம் நீங்க ஏனைய காலமெல்லாம் விராட்ரூபம் இருந்தபடி இருந்து வருகிறது. அர்ஜுனனுக்குக்கிருஷ்ணபரமாத்மா ஞானக்கண்ணைக் கொடுத்ததனால் யாண்டும் உள்ள விஸ்வரூபத்தை அக்கணத்தில் அவன் காண வல்லவன் ஆனான். அவன்பெற்றிருந்த ஞானக்கண் மறைந்துபட்டுப் போனதும் விசுவரூபத்தின் காட்சியும் அவனுக்கு இல்லாது மறைந்துபோயிற்று. ஆனால் அது தன்னளவில் யாண்டும் இருந்து வருகிறது. ஞானக்கண் பெறுகிறவர்களுக்கு இது தேற்றம்.

# ஸத் ஸம்பாஷணை

**கேள்வி: (214) கடவுள் தாமே உயிர்கள் அனைத்துமாய் இலங்குகிருர் என்பது கோட்பாடு. அப்பெரியபொருள் எந்தப் பந்தபாசத்திலும் கட்டுப்பட்டதன்று. அத்தகைய நித்திய முக்த வஸ்துவினின்று வந்துள்ள ஜீவர்களாகிய நாம் ஏன் கட்டுண்டவர்களாக இருக்கின்ருேம்? தங்கத்தினின்று வருவதெல்லாம் தங்கம் தானே? அங்ஙனம் கடவுளிடத்திருந்து வந்துள்ள உயிர்களனைத்தும் கடவுள் போன்று எதிலும் கட்டுப்படாதவைகளாகத்தானே இருக்கவேண்டும்? நமக்குப் பந்தபாசம் எப்படி வந்தது?**

ஈசுவரன் மாயாசகிதராயிருக்கிருர். ஜீவர்களாகிய நாமும் மாயாசகிதர்களாக இருக்கிருேம். ஈசுவரனே மாயைக்கு அதிபதியாக இருக்கிருர். ஜீவர்களாகிய நாமோ மாயையில் கட்டுண்டவர்களாக இருக்கிருேம். இந்தப் பந்த பாசம் நமக்கு எங்கிருந்து எப்படி வந்தது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஈசுவரன் பஞ்ச கிருத்திய வடிவினராக இருக்கின்ருர். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் ஆகிய பஞ்ச கிருத்தியங்களும் அவருக்குச் சொந்தம். அவைகளை முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்று இயம்புகின்ருேம். இந்தப் பஞ்ச கிருத்தியங்களை நிகழ்த்துதற்கிடையில் இவைகளில் எவ்விதத்திலும் கட்டுண்ணுதவராக இறைவனிருக்கிருர். மற்று ஜீவர்களாகிய நாமோ இந்த ஐந்து வினைகளிலும் கட்டுண்டவர்களாக இருக்கிருேம். ஜீவர்கள் அனைவரும் இந்த ஐம்பெரும் செயல்களில் கட்டுண்ணுதவர்களாக இருப்பார்களானல் பிரபஞ்சத் தோற்றத்திற்கு இடமில்லை. மறைத்தலுக்கும் அருளுதலுக்கும் இயற்கையில் சான்றுகள் எடுத்துக்கொள்வோம். விதை ஒன்றனுள் ஒரு மரத்தின் பாங்குகளாகிய புஷ்பம், பழம் முதலியன மறைந்து கிடக்கின்றன. முறையாக வளர்ந்து அம்மகிமைகள் தோற்றத்திற்கு வரும்பொழுது அச் செயலை அருளல் எனலாம். இங்ஙனம் ஸ்தாவர உலகில் மறைத்தலும் அருளலும் இடம்பெற்று இருக்கின்றன. பறவை உலகில் முட்டையினுள் உயிர்த்தத்துவம் மறைந்திருக்கிறது. முட்டைகளை அடைகாத்துக் குஞ்சுபொரித்து வளர்த்து வருவது ஈசன் செயல். தக்க தருணத்தில் பறவைகள் அழகு வாய்ந்தவைகளாகவும் இனிய ஓசை வடிவெடுத்தவைகளாகவும் இலங்குகின்றன. இச் செயல்களில் மறைத்தலும் அருளலும் சேர்ந்து அமைந்துள்ளன. இதே பாங்கில் விலங்குகள் குட்டிபோட்டு அவைகளை வளர்த்து மேல் நிலைக்குக் கொண்டுவருகின்றன. அந்தந்த உயிர் வகைகள் தத்தம் இயல்புகளினின்று சிறிது காலம் மறைந்திருந்து பின்பு அவைகளைப் பெறுகின்றன. அவைகள் பரிணமித்து மானுட நிலையை எட்டும் வரையில் பிரகிருதியிலேயே கட்டுண்டவைகளாக வாழ்ந்து வருகின்றன. சிற்றுயிர்கள் பேருயிர்களாகப் பரிணமிப்பதே அவைகள் அடைகின்ற முன்னேற்றம் ஆகும்.

மானுட நிலையை எட்டும்பொழுது பிரபஞ்ச வாழ்வுக்குரிய முன்னேற்றம் உச்சநிலையை எட்டுகிறது. மானுடப் பிறவியில் ஜீவர்கள் எண்ணிறந்த ஜனன மரணத்துக்கு ஆளாகி வருகின்றனர். அத்தனை பிறவிகளில் படிப்படியாக மனபரிபாகம் வந்தமைகிறது. மனதின்கண் உண்டாகிற முன்னேற்றமே மானுடப் பிறவியின் நோக்கமாகும். பல பிறவிகளுக்குப் பிறகு பிரபஞ்ச வாழ்வின் குறைபாடுகள் மனிதனுக்கு விளங்குகின்றன. மரணமிலாப் பெருவாழ்வு பிரபஞ்சத்தின்கண் இல்லை. மண்ணுலக வாழ்வில் இன்பத்தைவிடத் துன்பம்தான் அதிகரித்திருக்கிறது. இந்திரியங்கள் மூலமாகப் பெறுகிற சுகங்கள் எல்லாம் துன்பங்களாக முடிவுறுகின்றன. இத்தகைய அனுபவம் மேலோங்குதற்கேற்ப உலகப் பற்று குறைகிறது, தெய்வ நாட்டம் படிப்படியாக மேலோங்குகிறது. பர நாட்டத்திற்கேற்ப அந்தக்கரண சுத்தியும் அதிவிரைவில் வந்தமைகிறது.

மேலும், நிகழ்கிற முன்னேற்றத்தை ஒரு உபமானக்கதையின் வாயிலாகப் பரமஹம்ஸ தேவர் விளக்குகிருர்: 'தாயும் குழந்தையும் குலாவி விளையாடுகின்றனர். விளையாட்டுக்கிடையில் தாய் திடீரென்று வேண்டுமென்றே தன்னை மறைத்து வைத்துக் கொள்ளுகிருள். குழந்தையோ இங்கும் அங்கும் தேடிப்பார்த்துத்

தன் தாயைக் கண்டு பிடிக்க முடியாத நிலையில் இருக்கிறது. கோவென்று அது கதறி அழுகிறது. அதன் அழுகையில் தாய் ஒருவித இன்பம் காண்கிறாள். ஆனால் நெடுநேரம் தன் குழந்தையை அந்தப் பரிதாபகரமான நிலையில் வைத்திருக்க அவள் விரும்புவதில்லை. திடீரென்று குழந்தையின் முன்தோன்றி அதை மகிழ்விக்கிறாள். இங்கு மறைப்பிலும் அருள் நிலையிலும் உள்ள இனிமை உலக வாழ்க்கையின் மூலமாகக்காட்டப்படுகிறது. இதே செயல் பாரமார்த்திகப் பெருவாழ்விலும் நிகழ்கிறது. 'யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய், ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்னும் கோட்பாடு பக்குவம் அடைந்துள்ள ஒவ்வொரு ஆத்ம சாதகனிடத்தும் நிகழ்கிறது. 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்' என்னும் கோட்பாடு நிறைவேறுகிறது. இது சிருஷ்டியின் மகிமை, இறைவன் வேண்டுமென்றே தன் ஸ்வரூபமாயுள்ள ஜீவர்களிடத்திலிருந்து தன்னை மறைத்து வைக்கிறான். அருள் நாட்டத்தின் வாயிலாகப் பக்குவமான சாதகர்களுக்குத் தன் சொரூபத்தைக் காட்டி அருளுகிறான். மறைத்தல், அருளல் என்னும் இரண்டு செயல்களுக்கு உட்பட்டவர்களாக ஜீவர்களை இறைவன் வைத்திருப்பதால் பிரபஞ்ச வாழ்வு என்னும் உலக நாடகம் நடைபெறுகிறது. இந்த நாடகம் இறைவனுக்கும் அவனுடைய மெய்யடியார்களுக்கும் இன்பமூட்டுகிறது.

**கேள்வி: (215)** ***அசுசி என்பது மனிதனுடைய மனப்பான்மையில் இருக்கிறது. அது அவன் செய்கிற தொழிலில் இல்லை என்று கசாப்புக்கடைக்காரன் ஒரு முனிவனுக்குப் புகட்டினான். இதன் உட்பொருளை விளக்கவும்.***

இவ்வரலாறு மகாபாரதத்தில் இருக்கிறது. வியாதகீதை என்னும்பெயர் இதற்குத் தரப்பட்டிருக்கிறது. வியாதன் என்றால் கசாப்புக்கடைக்காரன். அவன் ஆடு முதலிய ஜந்துக்களைக் கொன்று அவ்விறைச்சியை மக்களுக்கு விலைக்கு விற்று ஜீவனம் பண்ணுபவன். சமுதாயத்தின் கருத்துப்படி அவன் புரிந்தது இழிதொழில். ஆனால் அவன் தானே தன் ஸ்வதர்மத்தை இழிதொழிலாகக்கருதவில்லை. கசாப்புக்கடைக்காரன் ஒருவனுக்கு மகனாகப்பிறந்ததனால் அவனுக்கு அது குலத்தொழிலாக அமைந்தது. அதை ஒரு புனிதமான செயல் என்றே அவன் கருதி வந்தான். அவன் செயலையும் தோட்டி ஒருவன் செயலையும் மிகமட்டமானவைகள் என உலகத்தவர் கருதுகின்றனர். ஆனால் இறைச்சி வியாபாரத்தின் வாயிலாக அந்த வியாதன் ஒரு நிறைஞானியானான். அவன் அடைந்திருந்த ஞானத்தை இன்னும் பக்குவம் ஆக ஆக முனிவர் ஒருவருக்கு எடுத்து உபதேசித்து அவருக்கு விவேகத்தை ஊட்டினான்.

வனத்தில் தவம் புரிந்திருந்த அந்த முனிவருக்குத் தபோபலன் அதிகரித்திருந்தது. தற்செயலாய் அந்தச் சித்தியை அந்த முனிவர் அறியலாயினர். தியானத்துக்குப் பிறகு ஒரு மரத்தடியில் அவர் அமர்ந்திருந்தார். மரத்தின் மேலிருந்த கொக்கு ஒன்று தன் போக்கில் அவர்மீது எச்சம் இட்டது. அதைப் பார்த்த அவர் சினந்தார். அவர் சினத்தின் வேகத்தால் கொக்கு சாம்பலாய்க் கீழே விழுந்தது. தம் ஆற்றலைக்குறித்து அவர்செருக்குற்றார். அன்னவர் பிக்ஷையின் பொருட்டு அருகில் இருந்த கிராமத்திற்குச் சென்றார். மாது ஒருத்தி அவருக்குப் பிக்ஷை வழங்குதலில் சிறிது கால தாமதமானதால் முனிவர் தம் போன்ற தபசி ஒருவரைக் காக்க வைத்திருப்பது மாது ஒருத்திக்குப் பொருந்தாது என்று எண்ணினார். வீட்டின் உள்ளிருந்து அவ்வம்மை என்னைக் கொக்கு என்று கருதவேண்டாம் அன்பரே, சற்றுப் பொறும்! என்று விடை விடுத்தாள். இவ்விடை முனிவருக்கு வியப்பூட்டியது. அம்மாதுக்கு அவ்விஷயம் எப்படி எட்டியது என்று அவர் கேட்டார். தன்கணவனுக்குப்பணிவிடை செய்ததின் விளைவாக அந்தக்கரண சுத்தி அடைந்து அவர் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை அறிந்து கொண்டதாகவும், வியாதனிடம் போகும்படியும் அந்த அம்மை சொன்னாள். முனிவரும் வியாதனை அணுகிய பொழுது அவன் அவருக்கு எடுத்து விளக்கிய உபதேசம் வியாதகீதை என்னும் பெயர் பெறுகிறது. சுத்தமான மனம் படைத்திருப்பவனுக்குச் சமுதாயத்திற்குப் பயன்படுகிற தொழில்கள் யாவும் தேவாராதனைக்கு நிகர் என்பது அந்தக் கீதையின் கோட்பாடு.

# அனுமன் வருவான் அருள் தருவான்

( சுவாமி துருவானந்தர் )

பெரியவர்கள் சிறியவர்களைக் குறித்து ஆசீர்வாதம் செய்யும்பொழுது சிரஞ்சீவியாய் இரு என்று சொல்வது உண்டு. ஆனல் மக்கள் சிரஞ்சீவிகளல்லர். என்ருே ஒருநாள் மரணத்துக்குள்ளாகும் சரீரம் படைத்தவர்கள். ஆனல் நித்திய சிரஞ்சீவியாய் என்றும் எக்காலத்தும் இருந்து வருபவர் ஆஞ்சனேயர். வையத்துள் வாழ்வாங்கு வாழ விரும்புகிறவர்களுக்கு அவருடைய வாழ்வு முன் மாதிரியாகத் திகழுகிறது.

**நினைத்ததை முடிப்பவன்**

அனுமனின் பிறப்பே அலாதியானது. மேரு மலையானது சூரியனுடைய வரத்தால் தங்கமயமாக ஜொலித்தது. அங்கே கேஸரி என்ற வானர ராஜன் ஆண்டுவந்தான். அவன் மனைவி அஞ்ஜனதேவியின் அழகில் ஈடுபட்ட வாயுதேவன் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் தர்மகாரியம் நிறைவேற உதவும் ஒரு உத்தமன் அவள் மூலம் உலகுக்கு வரவேண்டும் என்று கருதி அவள் மூலம் ஒரு குழந்தையை உண்டுபண்ணினன். கருத்தரித்து உரிய காலத்தில் அவள் அனுமனைப் பெற்றெடுத்தாள். பொன்னிறமுள்ள இவன் குழந்தையாக விளையாடிக்கொண்டிருக்கையில் அஞ்ஜனதேவி பழங்கள் பறித்துவர வெளியே போனள். தாயைப் பிரிந்த தனயன் பசியால் பெரும் கூச்சலிட்டு அழுதான். அப்பொழுது சூரியன் செம்பருத்திப் பூவைப்போல உதயமானன். இவன் பாலசூரியனைப் பழம் என்று கருதி அதைப் பறிக்கத் தாவினன். ஆகாயத்தில் பறந்து மேலே போனன். தேவர், யக்ஷர், தானவர் முதலாயினேர் இவன் வாயுவையும், கருடனையும் ஏன் மனதையும்விட வேகமாகப் போகிருனே? குழந்தையாக இருக்கிறபொழுதே இவ்வளவு பலமும், வேகமும், தைரியமும் இருந்தால் வாலிபப் பருவத்தில் பூர்ணபலத்தைப் பெற்ற பிறகு எப்படி இருப்பானே என்று கவலைப்பட்டனர். தன் மகன் வான வீதியில் போவதை வாயுதேவன் கண்டான். சூரிய வெப்பத்தால் தன் மகனுக்கு ஏதாவது கெடுதி ஏற்பட்டுவிடுமோவென்று பயந்து குளிர்ந்த காற்றை வீசிக்கொண்டே அவனைப் பின் தொடர்ந்தான். ஜொலிக்கிற சிறுவன் ஒருவன் வெகு சாமர்த்தியமாகத் தன்னை நோக்கி வருவதைக் கண்ட சூரிய பகவான் ஆனந்தம் கொண்டான். அவனைச் சுட்டெரிக்கா வண்ணம் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டான். அப்போது சூரியனைப் பிடிக்க ராகு அங்கே வந்தான். அவனுடைய ரதத்தருகே அனுமன் வந்ததும் ராகு பெரிய பழம் போன்று தோன்றினன். ஆகவே சிறிய பழம்போன்று தோன்றிய சூரியனை விட்டு விட்டு ராகுவைத் துரத்தினன். பயந்து போன ராகு தேவேந்திரனைச் சரணடைந்தான். தேவேந்திரன் எல்லாரையும் விட வடிவத்தில் பெரிய கனி போன்று அனுமனுக்குப்பட்டான். உடனே அவன் ராகுவை விட்டு விட்டுத் தேவேந்திரனைப் பிடிக்கப் போனன். சீற்றங்கொண்ட தேவேந்திரன் தன் வஜ்ராயுதத்தைச் சுழற்றி அனுமன்மீது எறிந்தான். அனுமன் வஜ்ராயுதத்தில் அடிபட்டு மூர்ச்சையடைந்து வான வெளியிலிருந்து கீழே பூமியில் வீழ்ந்தான்.

தன் புத்திரன் வஜ்ராயுதத்தால் அடிபட்டதைக் கண்டான் வாயுதேவன். உடனே அவனை எடுத்துக்கொண்டு ஒரு குகைக்குள் வைத்துப் பராமரித்தான். அது மட்டுமன்று, 'இந்திரனைப் போல நானும் ஒரு தேவனல்லனே? அப்படி இருக்க என் மகன் குழந்தை என்பதைக் கூட எண்ணது வஜ்ராயுதத்தால் அடித்ததால் நான் (காற்று) எங்கும் சஞ்சரிக்கமாட்டேன்; எல்லா உயிர்களிலிருந்தும் பிரிந்துவிடுவேன்' என்ருன். இங்ஙனம் சூளுரைத்த பிறகு பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்களிலும் சஞ்சரித்த பிராணன் (மூச்சுக்காற்று) உடலை விட்டு வெளியேறியது. மலஜலங்களை வெளியிட முடியாமல் யாவரும் வயிறு வீங்கிக் கட்டைகளைப் போல வீழ்ந்தனர். மூச்சுத் திணறினர். இந்தத் துயரநிலை தேவர்களையும் தாக்கியது. உடனே அவர்கள் படைப்புக்கடவுளாகிய பிரம்மாவிடம் நிலையை எடுத்து விளக்கினர். நடந்தநிகழ்ச்சியை முற்றிலும் அறிந்தசிருஷ்டிகர்த்தா வாயு பகவான் இருக்கும் குகைக்குள் வந்தார். தம்

அமிர்தக்கையால் ஆஞ்சனேயனைத் தீண்டினர். முன்னிருந்த தேஜஸைவிட, பலத்தைவிட அதிக வீரியம் கொண்டவனாக வாயுகுமாரன் எழுந்தான். வாயுதேவன் மகிழ்ந்தான். எல்லா உயிர்களிலும் எங்கும் வழக்கம்போல சஞ்சரித்தான். தேவாதி தேவர்கள் எல்லாரும் மகிழ்ந்து ஆஞ்சனேயனுக்கு ஆசீர்வாதம் வழங்கினர். எதிர் காலத்தில் இவன் ஆற்றவிருக்கும் செயற்கரிய செயலை நினைத்து இந்திரன் தான் அணிந்திருந்த தங்கத் தாமரை மாலையைக் கொடுத்து "என் வஜ்ராயுதத்தால் இவன் கன்னம் உடைந்ததால் இவனுக்கு 'ஹனுமான்' என்றே பெயர் வழங்கட்டும். இனி என் வஜ்ராயுதத்தாலும் இவனை அழிக்க முடியாது" என்றான். "என்னுடைய பிரகாசத்தில் நூறில் ஒரு பகுதியை இவனுக்குத் தருகிறேன். சாஸ்திரங்களைக் கற்கத் தகுந்த வயது வரும்பொழுது சகல சாஸ்திரங்களையும் கற்றுத்தந்து சகலகலைகளிலும் வல்லவனாக்கி விடுவேன். அதுமட்டுமன்று இவன் தன் பேச்சால் பிறரைக் கவர்வான்; சொல்லின் செல்வனாகத்திகழ்வான். இம்மூர்த்திக்கு நிகரான ஒழுக்கத்தில் பண்பட்ட ஒருவீரனை இனிமேல் காண முடியாது" என்று சூரிய பகவான் ஆசீர்வதித்துச் சென்றான்.

"என் காலதண்டத்தால் இவனுக்கு மரணமில்லை; இவனுக்கு நோய் எதுவும் வராது; யுத்தத்தில் மனோதைரியம் குறையாது" என்றான் மரணதேவன் எமன். சிவனார் காட்சி தந்து "என் திரிசூலங்களும், பாசுபதாஸ்திரமும்கூட இவனை ஒன்றும் செய்யமுடியாது" என்றார். இறுதியில் பிரம்மா அனுமனை ஆரத் தழுவி "நீ உன் நண்பர்களுக்கு அடைக்கலமாகவும், பகைவர்களுக்குக் காலனாகவும் இருப்பாய். நினைத்த ரூபங்களை எடுப்பாய். உன் போக்கை யாரும் தடுக்க முடியாது. பகவான் ராமாவதாரம் எடுக்கும்பொழுது ராவணன் முதலான அரக்கர்களை அடக்கி வீரசாகஸங்களைச் செய்து ராமனுடைய அருளுக்குப் பாத்திரமாவாய்" என்று அனுக்கிரகித்தார். பின் அனைவரும் மறைந்தனர்.

பிறரிடம் இல்லாத சம்பத்துக்கள் ஏதேனும் ஒன்று தன்னிடமிருந்தால் செருக்குக்கொள்வது மானிட இயல்பு. அனுமனும் இத்தகைய கர்வத்திற்கு ஆளானான். தான் அடைந்த வரங்களால் கர்வம் கொண்டு கடலைப்போன்று பொங்கி மகரிஷிகளின் ஆச்ரமங்களினுள் புகுந்து யாக பாத்திரங்களையும், மரவுரிகளையும், மான்தோல்களையும் சிதைத்து நாசம்பண்ணினான். ரிஷி புத்திரர்களையும், ரிஷி பத்தினிகளையும் பயமுறுத்தினான். இதனால் வெகுண்ட ரிஷிகள் இவனுடைய வர பலத்தை அறிந்து சாபம் கொடுக்க அஞ்சினர். தாய் தந்தையர் சொல்லியும் அடங்காத துடுக்குள்ள சிறுவனுக்குச் சாபம் தருவதைத் தவிர வேறு வழியில்லை என்றுணர்ந்த ரிஷிகள் "எந்த வரங்களின் மகிமையால் நீ இப்படி எல்லாரையும் தொந்திரவு செய்கிறாயோ அந்த வரமே வெகுகாலம் வரையில் உனக்குத் தெரியாமல் இருக்கக்கடவது; யாரேனும் ஒருவர் உன்னிடம் மறைந்துகிடக்கும் அளப்பரிய ஆற்றலை ஞாபகப்படுத்தும் போதுதான் அது உன் நினைவிற்கு வரும்" என்று சபித்தார்கள். யாருக்கும் அடங்காத துஷ்டத்தனம் மிகுந்த சிறுவன் அனுமன் இப்பொழுது மிகவும் அடக்கமாக, பணிவாக, சேவையின் சிகரமாகத் தென்பட்டான். கிஷ்கிந்தையில் ஆட்சிசெலுத்தி வந்தவன் வாலி என்ற வானர வேந்தன் ஆவான். அவனுடைய தம்பி சுக்ரீவனும் அனுமனும் இளம்வயது முதல் நட்புப்பூண்டு வாழ்ந்து வந்தனர். ஒரு தடவை சுக்ரீவனை யானை துரத்தியபொழுது ஆஞ்சனேயன் எந்தவித ஆயுதமுமின்றி அந்த யானையைத் தாக்கிச் சுக்ரீவனைக் காப்பாற்றினான். ஆகவே அந்த நன்றிக்கு ஈடாகத் தன் உயிருக்குயிரான நல்லியல்பே வடிவெடுத்த நண்பனை அவன் அமைச்சனாக்க விரும்பினான். வாலி முறைதவறி நடந்தபோதுகூட ஆஞ்சனேயன் அமைதியாக விருந்தது அவன் தன் நிஜசொரூபத்தை மறந்த தின்விளைவேயாகும். வாலியையே சம்ஹாரம் பண்ணக்கூடிய வலிவும் திட்பமும் அவனுக்கு இருந்தன. அவனுடைய உண்மை நிலையை ஞாபகப்படுத்த வேண்டிய பொறுப்பு ஜாம்பவானுக்குத்தான் கிடைத்தது.

அனுமனுடைய இவ்வீர வரலாற்றைக் கேட்ட எத்தனையோ சிறுவர்களில் ஒருவன்தான் நரேந்திரநாதன். அவனுடைய அன்னை புவனேசுவரி இத்தகைய வீரர்களின் சரிதங்களைச் சொல்கிறபொழுது அவன் தன்னை முற்றிலும் மறந்து விடுவான். அனுமனைப் போன்று தானும் எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும்

ஆற்றல் மிக்க வீரனுக வேண்டுமென்று விரும்பினுன். அதற்கு மேலாக அவனிடம் இருந்தது ராம பக்தி. அந்த ராம பக்தியும் தனக்கு வந்தமைய வேண்டுமென்று அவாக் கொண்டான். ஆற்றல் மிக்க ஆஞ்சனேயனின் வரலாற்றைக் கேட்டதிலிருந்து அவன் அனுமனை நேரில் தரிசிக்க விரும்பினுன். அதற்காகத் தன் வீட்டின் கொல்லையில் உள்ள வாழைத் தோட்டத்தில் எத்தனையோ இரவுகள் விழித்திருந்து அனுமனைக் காணக் காத்திருந்தான். அதுவும் பயன் தராது போகவே தன் தாயை அனுமனைக் காணும் உபாயத்தைக் கூறவேண்டுமென்று கேட்டான். அனுமன்மீது பரிபூர்ண மான நம்பிக்கையும் சத்தியத்தையும் கடைப் பிடித்து அவனைச் சார்ந்திருந்தால் "அனுமன் வருவான் அருள் தருவான்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அந்த வாக்குக்கு ஒப்ப நரேந்திரன் ஆஞ்சனேயரின் தரிசனம்பெற்ருர். அகில உலகுக்கும் ராமனின் தொண்டன் போன்று ஞான சேவையில் ஈடுபட்டார் விவேகானந்தர்.

அனுமன் சிரஞ்சீவியா?

> யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
> தத்ர தத்ர கிருதமஸ்த காஞ்சலிம்
> பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம்
> மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்

என்று துளசிதாசர் தம் ராமாயணத்தில் ஆஞ்சனேயனின் சிரஞ்சீவித் தன்மையை விளக்குகிருர். "எங்கெங்கு ராம நாம சங்கீர்த்தனம் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் ராம பக்தனுகிய அனுமன் இருந்து ராம பஜனையில் திளைத்திருப்பான். அப்போது அவனுடைய கண்களில் ஆனந்தக்கண்ணீர் வடியும்" என்கிருர். இதை மெய்ப்பிக்கிற பாங்கில் சம்பவம் ஒன்று நடந்தது. ராமகிருஷ்ண மடத்துக்குத் தலைவராயிருந்த சுவாமி பிரம்மானந்தர் சென்னையிலுள்ள ராமகிருஷ்ணமடத்திற்கு வந்திருந்தார். அவர் அங்குத் தங்கியிருந்த நாட்களில் ஒருநாள் ஏகாதசி தினம். மடத்துத் துறவிகள் அனைவரும் ராம நாம சங்கீர்த்தனம் பாடித் தெய்வீக இன்பத்தில் திளைத்திருந்தனர். அப்போது பிரம்மானந்த சுவாமிகளும் ஆங்குப் பிரசன்னமாயிருந்தார். பஜனை முடிவுற்ற பிறகு அவர் கூறினர்: "இன்றைய பஜனையில் ஆஞ்சநேயர் கலந்திருந்தார். நீங்கள் நாம சங்கீர்த்தனம் பண்ணும்போது அவர் பரவசநிலையில் ஆடியதை நான் கண்டேன். வயது முதிர்ந்த அவருடைய கண்களினின்று ஆனந்த பாஷ்பம் வழிந்து வரலாயிற்று. அவர் அமர்வதற்கு ஆசனம் ஏதேனும் வைக்கலாகாதா? பஜனை ஆரம்பம் ஆவதற்கு முன்பே இங்கு வந்துவிட்டார். பஜனை முடிந்தபிறகு அனைவரும் கலைந்துபோன பிறகுதான் அவர் போனர்". இவ்வாறு பிரம்மானந்த சுவாமிகள் சொன்னதும் அனைவருக்கும் ஒரே வியப்பு! ஆம். பகலில் நட்சத்திரம் தெரியவில்லை என்பதற்காக நட்சத்திரமே இல்லையென்று சொல்லிவிடலாமா? அஞ்ஞானத்தால் பீடிக்கப்பட்ட நமக்கு அனுமன் வருவதும், நர்த்தனம் பண்ணுவதும் தெரியாதுதான். ஞானக்கண் உள்ள பிரம்மானந்த சுவாமிகள் போன்றவர்களுக்கு அத்தகைய காட்சி ஸ்பஷ்டமாகப் புலப்படுகிறது. ஆகவே இன்றும் ராமபஜனை நடைபெறும் இடங்களில் எல்லாம் ஆஞ்சனேயனுக்கும் ஒரு ஆசனம் போட்டு வைப்பதுண்டு. அண்ணல் ஆங்கு வந்து எழுந்தருள வேண்டும் என்ற நோக்கத்தோடு அது நடைபெற்று வருகிறது.

இராமாயணத்தில் வருகிற புருஷர்களில் இருவர் மஹாபாரதத்திலும் வருகின்றனர். ஒருவர் ஆஞ்சனேயர், மற்ருெருவர் பரசுராமர். ஆஞ்சனேயர் சிரஞ்சீவி; யாண்டும் எக்காலத்தும் இருப்பவர். ஆனல் பரசுராமரோ சரித்திர கால மானுடர் அல்லர் என்றே சொல்லப்படுகிருர். கதையின் ரசனைக்காகவென்று சிருஷ்டிக்கப்பட்ட கற்பனை மூர்த்தி என்று அவரைச் சொல்லுவார்கள். இன்றும் ஆஞ்சனேயனை வழிபாடுபண்ணுகிற பக்தர் அல்லது உபாசகரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தால் ஆஞ்சனேயனின் முகச்சாயல் இருப்பது புலப்படும். நம் அறிவுக்கு எட்டாத வியக்கத்தக்க நிகழ்ச்சிகள் ஆங்காங்கே அவ்வப்போது நிகழ்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன் ஜோலார்பேட்டை என்ற ஊருக்கருகில் ராமாயண சங்கீத உபந்நியாசம் தொடர் நிகழ்ச்சியாக நடந்து வந்தது. ஒவ்வொரு நாளும் பாகவதர் பக்தியோடு சங்கீத உபந்நியாசம் நடத்திக் கேட்க வந்தவர்களை மெய்மறக்கச் செய்து தெய்விக இன்பத்தில் திளைக்க வைத்து வந்தார். யுத்த காண்டம் நடத்த வேண்டிய

நாள் வந்தது. அன்று இரவு நேரத்தில் விறு விறுப்பாகப் பாகவதர் பக்தியோடுநிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டு வந்தார். ராமன் சேதுவைக் கட்டியதையும், வானரங்களெல்லாம் கட்டிய பாலத்தின் வழியாக இலங்கை நகருக்குள் புகுந்த காட்சியையும், ஆஞ்சனேயனின் துணிச்சல் மிக்க செயல்களையும், பாகவதர் மெய்மறந்து சொல்லிக் கொண்டிருந்தபோது உபந்யாசம் நடந்த சபையை நோக்கி வானரங் கள் சில எங்கேயோ இருந்து ஓடிவந்து சபை யின்முன்பு உட்கார்ந்துகொண்டன. இரவுநேரங் களில் குரங்குகள் பொதுவாக மரங்களைவிட்டு வருவது இல்லை. அந்நிகழ்ச்சி முடியும்வரை துடுக்குத்தனமுள்ள குரங்குகள் பேசாதிருந்து விட்டுத் தங்கள் போக்கில் போய்விட்டன.

विद्याविनयसंपन्ने என்று பகவான் கீதையில் கூறுகிறார். வித்தை என்பது அறிவு, கலை, கல்வி என்று சொல்லப்படுகிறது. கல்வி இருப்பவனிடம் பணிவும் இருக்கவேண்டும். அனுமன் சகலவித கலைகளிலும் பிரகஸ்பதி யைப் போன்றவன். ஒன்பது வியாகரணங் களையும் பூர்ணமாக அறிந்தவன். இவனுக்குத் தெரியாத கலைகளில்லை. அப்படியிருந்தும் தான் எல்லாம் அறிந்தவன் என்ற மமதையோ, செருக்கோ துளிகூட அவனிடம் காணமுடி யாது. ராம லக்ஷ்மணர் சீதாதேவி முதலியோர் நிற்கின்றபொழுது வேறு எதையும் பாராது முழந்தாளிட்டு ராமனுடைய திருவடியையே பார்த்தவண்ணமாக அனுமனை அமைத்திருக் கும் படம் அனுமனின் பண்பை விளக்குகிறது.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

என்ற குறட்பாவிற்கு ஒப்பப் பணிவிற்கு அனு மனே சான்று.

சீதாதேவி அரக்கர்கள் மத்தியில் சிறை யிருந்து ராமனைப்பற்றிய சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்தாள். பத்து மாதங்களாக உண்டி யையும், உறக்கத்தையும் துறந்து தன்னு டைய நாயகன் வந்து மீட்டுச் செல்லமாட் டானா என ஏங்கினாள். உரிய தருணம் வந் தது. ஆஞ்சனேயர் வந்தார். துஷ்டத்தனம் படைத்த அரக்கர்களிடமிருந்து சீதையைக் காப்பாற்றி ராமனிடம் சேர்ப்பித்தான். சீதை யைக் கெடுக்கவந்த ராவணனும் அவன் கூட்டத் தாரும் அழிந்தனர்.

ராவணன் காமநோய்க்கு அடிமையாகி சீதை யின் மீது பைத்தியம் பிடித்து அலைந்தது போன்று இப்போதுள்ள அரசியல் வாதிகள் பதவிவேட்கை என்னும் பைத்தியம் பிடித்தவர் களாய் அலைகின்றனர். சீதாதேவி வேறு எண்ணமின்றி ராம சிந்தனையில் மூழ்கி யிருந்தது போன்று நம் நாடு இப்பொழுது சுயநலமற்ற வீரர்களை, தியாக சீலர்களை, சத் தியவான்களை எதிர் நோக்கி இருக்கிறது. அத்தகைய அறவாளர்கள் என்று வருவார் களோ தெரியாது. அன்று அன்னை சீதா தேவியின் துயர் தீர்த்து அவளை ராமனிடம் சேர்த்த அண்ணல் மீண்டும் இங்கு வந்து நல்ல வீரர்களைத் திரட்டியெடுத்து அரக்க இயல்பு படைத்த அரசியல் வாதிகளை, சுய நலக்காரர்களை, போலி வேஷதாரிகளை ஒழித்து நவபாரதத்தை உருவாக்க வேண்டும் என்று நாம் யாண்டும் இறைவனை வேண்டுவோ மாக.

# செய்திகள்

**நிகழ்பவை**

25-10-79 வியாழக்கிழமை அன்று தீபாவளி விடுமுறைக்குப்பின் ஸ்ரீ விவேகானந்த வித்யா வன குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

28-10-79 ஞாயிற்றுக்கிழமை அன்று சென்னை தண்டையார்பேட்டையில் அகஸ்தியர் தியேட் டருக்கருகில் உள்ள முருகதனுஷ்கோடி மகளிர் மேல் நிலைப்பள்ளியில் மாலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் அருளுரை வழங்குவார்கள்.

17-11-79 சனிக்கிழமை அன்று இரவு 7 மணி முதல் 9-30 மணி வரை பல்லடம் தாலூகா கேத்தனூர் பெருமாள் கோயிலில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

18-11-79 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை உடுமலைப்பேட்டை ஆஸ்திக சபையில் 'தாயு மானவர் அருள் வாக்கு' என்னும் தலைப்பில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் சொற் பொழிவு ஆற்றுவார்கள்.

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

## இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| திருவாசகம்-பிரசார விலை | ரூ. 14-00 |
| ஸ்ரீமத் பகவத்கீதை - பிரசார விலை | ... 12-00 |
| ஞானயோக விளக்கம் | ... 8-00 |
| ராஜயோக விளக்கம் | ... 8-00 |
| பக்தியோக விளக்கம் | ... 6-00 |
| பரமஹம்ஸரின் பெருமை | ... 6-00 |
| விவேகானந்த விவரணம் | ... 4-00 |
| ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் | ... 4-00 |
| விவேகானந்த உபநிஷதம் | ... 4-00 |
| கடவுளின் வடிவங்கள் | ... 4-00 |
| சந்தேகம் தெளிதல் பாகம்-I | ... 3-50 |
| சந்தேகம் தெளிதல் பாகம்-II | ... 3-50 |
| தினசரி தியானம் - பிரசாரவிலை | ... 3-25 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ ஏழாம் பதிப்பு-பிரசார விலை | ... 3-00 |
| அனுஷ்டான வேதாந்தம் | ... 3-00 |
| எதிர்கால இந்தியா | ... 3-00 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம் | ... 3-00 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை | ... 3-00 |
| தேவரகசியம் (முதலிய கதைகள்) | ... 2-00 |
| ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் | ... 2-00 |
| கண்ணன் என்னும் கடவுள் | ... 2-00 |
| **தாயுமானவர் இயற்றிய** | |
| கருணாகரக் கடவுள் விரிவுரை | ... 3-50 |
| பரிபூரணானந்தம் ஷ | ... 3-00 |
| சின்மயானந்த குரு ஷ | ... 3-00 |
| ஆனந்தமானபரம் ஷ | ... 3-00 |
| சுகவாரி ஷ | ... 3-00 |
| மௌனகுரு வணக்கம் ஷ | ... 3-00 |
| எங்கும்நிறைகின்றபொருள் ஷ | ... 2-50 |
| பரசிவவணக்கம் ஷ | ... 1-00 |
| விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) | ... 1-50 |
| பஜனைப் பாடல்கள் | ... 1-50 |
| சந்நியாசி | ... 1-25 |
| குழந்தைகளின் களிக்கூடம் | ... 1-00 |
| இராவண தத்துவம் | ... 1-00 |
| சகோதரி நிவேதிதை | ... 1-00 |
| காயத்ரீ | ... 1-00 |
| வாலிமோட்சம் (நாடகம்) | ... 1-00 |
| தவப்புதல்வர்கள் (நாடகம்) | ... 1-00 |
| ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) | ... 1-00 |
| தானவீரன் கர்ணன் | ... 1-00 |
| பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் | ... 1-00 |
| பிரஹ்லாதன் (நாடகம்) | ... 1-00 |
| மார்க்கண்டேயன் (நாடகம்) | ... 1-00 |
| இந்துமதமும் கிறிஸ்துவமதமும் | ... 1-00 |

| | |
|---|---|
| பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்) | ரூ. 0-80 |
| நன்மக்களைப் பெறுதல் | ... 0-80 |
| நோய்க்கு இடம் கொடேல் | ... 0-80 |
| *ஆத்ம சக்தி | ... 0-75 |
| செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? | ... 0-75 |
| *மனிதனது நிஜசொரூபம் | ... 0-70 |
| *சக்தி தத்துவம் | ... 0-70 |
| *சிவ தத்துவம் | ... 0-70 |
| *ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | ... 0-60 |
| *ஆலய வழிபாடு | ... 0-60 |
| *சூரியநாராயணன் | ... 0-50 |
| *முருகக்கடவுள் | ... 0-50 |
| *விஷ்ணு தத்துவம் | ... 0-50 |
| தெய்வீக மகிமைகள் | ... 0-50 |
| சைவன் யார்? | ... 0-50 |
| கர்மகாண்டம் எது? ஞானகாண்டம்எது? | ... 0-50 |
| தபோபலன் (நாடகம்) | ... 0-40 |
| *கணபதி | ... 0-40 |
| வர்ணாச்ரம தர்மம் | ... 0-30 |
| அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் | ... 0-30 |
| The Bhagavad Gita (9th Imp.) | ... 20-00 |
| The Indian National Education | ... 8-00 |
| Sri Lalitambika Sahasranama Stotram | ... 8-00 |
| Ramakrishna Lives Vedanta | ... 8-00 |
| Facets of Brahman or The Hindu Gods | ... 5-00 |
| Daily Divine Digest (DELUXE) | ... 4-50 |
| Daily Divine Digest (Ordinary) | ... 2-50 |
| Mahabharata (with plastic cover) | ... 4-00 |
| Ramayana (do) | ... 4-00 |
| The Man Making Message of Vivekananda (with plastic cover) | ... 4-00 |
| Sri Vishnu Sahasranama Stotram | ... 4-00 |
| Siva Sahasranama Stotram | ... 3-50 |
| The Bhagavad Gita (Small Size) | ... 3-00 |
| Hinduism Hosts Christianity | ... 3 00 |
| Holy Bible—In the Light of Vedanta | ... 1-50 |
| *Introducing the Gita | ... 1-50 |
| The Garland of Paraaparam | ... 1-50 |
| TAT TVAM ASI *(That Thou Art)* IN Tayumana Swami | ... 1 00 |
| *Key to Higher Life | ... 0-75 |
| *The Teacher | ... 0-60 |
| *The Student | ... 0-45 |

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-25ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

[ அட்டை இரண்டாம் பக்கத் தொடர்ச்சி ]

## அந்தர்யோக விவரங்கள்

**திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 28—10—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ கைலாசநாதர் திருக்கோவில்
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

**திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 28—10—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** அகஸ்தியர் கோயில்
**நேரம்:** காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

**பெரியார் ஜில்லா — ஈரோட்டில் 11—11—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** மஞ்சள் வியாபாரிகள் சங்கம், 116 பார்க்ரோடு, ஸ்டார் தியேட்டர் சமீபம்
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 11—11—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தபோவனம்
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

**கோவை ஜில்லா—உடுமலைப்பேட்டையில் 18—11—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** தெய்வசிகாமணி பட்டணத்திலுள்ள
ஸ்ரீ சத்தியசாயி சேவா சமிதிக் கட்டடம்
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்:** ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**திருநெல்வேலியில் 18—11—79 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:** ம. தி. தா. இந்து உயர்நிலைப்பள்ளி
**நேரம்:** காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
**நடத்துபவர்,** ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

---

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.